மேருமந்தரர்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்
எழுதியது

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.
1933

மேருமந்தரர்

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

எழுதியது

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

1933

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

முன்னுரை

'மேருமந்தரர்' என்னும் இச் சிறுநூல், 'மேரு மந்தர புராணம்' என்னும் பெருங்காப்பியத்தை யொட்டி எழுதப்பட்டது. புராணத்திற் கூறப்பட்டுள்ள ஜைனசமயக் கோட்பாடுகளுட் பெரும்பாலன விடப் பட்டனவாயினும் கதைப்பகுதிகளெல்லாம் செய்யுட் பொருளைத் தழுவியே எழுதப்பட்டுள்ளனவாகலின், இவ்வுரைநூல் அப் புராணத்தைக் கற்க விரும்புபவர்க் கும் உதவியாய் நிற்கும்.

இந்நூல், பிறர்பொருள் வெஃகுதல், பகை கோடல், காதல்கொள்ளுதல் முதலியவற்றான் நேருந் தீமைகளையும், பொறுமை, அருள், ஞானம் முதலிய வற்றான் உண்டாகும் நன்மைகளையும் நன்கு விளங்கக் கூறுவது. ஆகலின், இது கற்போருக்கு நல்லொழுக் கத்தையும் நல்லறிவினையும் நல்கும் என்பது ஒருதலை. அன்றியும், உரைநடை செவ்விதாக அமைந்திருத் தலின், இந்நூல், கற்கும் மாணவருக்குக் கட்டுரை எழு தும் ஆற்றலையும் முற்ற விளக்கும்.

இந்நூலில் வந்துள்ள அருஞ்சொற்கட்குப் பொரு ளும், இந்நூலிற் கூறப்பட்டுள்ளோரின் வரலாற்றுச் சுருக்கமும் எழுதி, அவற்றை இப் புத்தகத்தின் ஈற்றிற் சேர்த்துள்ளேன். அவை, மாணவர்க்குப் பெரிதும் பயன் கொடுக்கும்.

வே. வேங்கடராஜுலு

6-NOV 1933
MADRAS

ஸ்ரீ

மேருமந்தரர்

1. வைசயந்தன் முத்தி பெற்றது

தூற்றங்க ளில்லான் குணத்தால்நிறைந் தான்கு ணத்தால்
மற்றிந்த வையம் அளந்தான்வைய நின்ற பெற்றி
முற்றும் உரைத்தான் உரையீரொன்ப தாய தொன்னூல்
செற்றங்கள் தீர்ப்பான் விமலன்சரண் சென்னி வைத்தேன்.

நாவலர் புகழும் நாவலந்தீவின் நடுவண், அற நெறியாளருக் குறையுளாகிய விதேகம் என்னுந் தேயத்தில், சீதோதகை என்னுஞ் செழுநதியின் வடபால், கந்தமாலினி என்னும் நாடு, பண்டைநாளில் வீறுபெற்று விளங்கியிருந்தது. அந்நாட்டின்கண், மணிகள் தோன்றும் மலையும், வனப்பு மிக்க வனமும், கரும்பு செறிந்த கழனியும் பரந்திருக்கும். சோலைகளில் தழையும் மலருஞ் செறிந்து, மழையென நறுந்தேன் சொரியும்; ஆண்டு, மயிலும் குயிலும் ஆர்த்தும், வண்டுந் தும்பியும் பாடியும் மகிழ்வுறும். பொய்கைகளில் ஆம்பலும் கமலமும் அலர்ந்தொளிரும்; வண்டின் பாடல் வளனுறும். கயங்களில், அன்னம் குருகு தாரா நாரை வண்டானம் முதலிய நீர்ப்பறவைகள் தம் பெடைகளோடு சூழ்ந்து திரியும்.

இத்தகைய வளம்பல நிறைந்த அந்நாட்டில் வாழும் மாந்தரும் குறைவொன்று மிலராய் வாழ்ந்திருந்தனர். அவர்கள், கல்வி கேள்விகளில் வல்லராய், சீல

மும் செறிவும் உடையராய், தானமும் தவமும் தாங்கினராய்த் தத்தங் குடிப்பிறப்பிற் கேற்ற ஒழுக்கத்தில் தவறாராய் ஒழுகிவந்தனர். அந்நாட்டில் வீதசோகம் என்னும் விழுநகர் அரசனுறையும் அணிநகராய் அமைந்திருந்தது. அந்நகரைச் சூழ்ந்து நாற்புறமும் வான்மீன்களைபோல் பல்லாயிர நகரங்கள் அமைந்திருந்தன. அவற்றிற்கு நடுவண், அது, தண்மதியே போலத் தகைவுற்று விளங்கியது. அந்நகரத்தில், யாறுபோல நீண்டகன்ற ஆயிரந்தெருக்களும், முந்நூற்றறுபது ஜிநகரங்களும், அறுபதினாயிரஞ் சேரிகளும் அமைந்திருந்தன. அந்நகரைச் சூழ்ந்து ஓங்கி உயர்ந்த நெடுமதில், ஆயிரம் வாயில்களும் எழுநூறு பூழைகளும் உடையதா யிருந்தது. அதனைச் சூழ்ந்து ஆழ்ந்து கிடந்த அகழி, வானவில் ஞாயிற்றைச் சூடி வளைந்து கிடந்ததுபோன்று வயங்கிற்று.

அந்நகரத்தில், களிறு புரவி தேர்கள் நிற்கும் இடங்களும், படைக்கலக் கொட்டில்களும், தெவ்வேந்தர் தந்த திறைகளை அளந்து காணும் அறைகளும், அரசன் அமைச்சரோடு கூடி ஆலோசனை செய்யும் மந்திராலோசனை மண்டபங்களும், மாதரார் கீதம் பயிலும் சாலைகளும், பாவலர் நூல்களை ஆராயும் பட்டிமண்டபங்களும், போர்வீரர் படைக்கலம் பயிலும் கூடங்களும் பிறவும் இயம்புதற் கரியவாய் இயன்றிருந்தன. அன்றியும், இளமகளிர் பந்தாடுமிடங்கள், பைம்பொன்னால் அழகாக அமைக்கப்பட்டு, முத்துக்களை விளிம்பின்கண் அழுத்தப்பெற்று, பலநிற மணிகளையும் பத்தியாகக் குயிற்றப் பெற்று, வானத்தைக் கீழே பதித்தாற் போன்று வயங்கும்.

அந்நகரத்தில் யாண்டும், முழவும் முரசும் சங்கும் முழங்க, குழலும் யாழும் வீணையும் ஏங்க, விழவறுது விளங்கினமையின், அதற்கு வீதசோகம் என்னும் விழுப் பெயர் காரணக்குறியாக அமைவதாயிற்று. ஆண்டு, வைசயந்தன் என்னும் மன்னர்மன்னன் செங்கோல் செலுத்தித் திகழ்வுற்றிருந்தான்.

> ' தருமன் தண்ணளி யாற்றன தீகையால்
> வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
> அருமை யாலழ கிற்கணே ஐந்துடைத்
> திரும கன்திரு மாநில மன்னனே.'

அவன், நூற்பொரு ளுணர்ந்த நண்ணுணர்வின னுக லின், தனது சூழ்ச்சியினாலேயே பகைவரை யடக்க வல்லனு யிருந்தான். அதனால், அவனது அறிவும் புகழும் அறிந்த அரசர் பலரும், இன்னிசை கேட்ட அசுணமேபோலத் தாமாகவே அவனை இறைஞ்சி, அவன தருந்துணையைப் பெறுவாராயினர். ஞாயிறு பரவைநீரை யிழுத்துப் பின்னர் ஆயிரமடங்காக அதற்கு அளித்தல்போல, அவன், தன் குடிகள்பால் ஆறிலொன்று கொண்டு அவர்கட்கு ஆவன பலவும் ஆற்றி வந்தான்; நன்னெறியிற் செலுத்துதலானும், தீங்கு நேராது காத்தலினானும், நன்னூற் புலமை நல்குதலானும் குடிகளுக்கெல்லாம் அன்புமிக்க தந்தையே போல் அமைவுற்றிருந்தான். அவன்றன் நல்லியல்புகளை யுள்ளங்கொண்டு பூமகளும் நாமகளும் பொறுமை நீங்கி, அவன்பால் பொருந்தியிருந்தனர்.

வைசயந்தன் என்னும் மன்னர்மன்னன் ஸர்வஸ்ரீ என்னுங் கோத்தேவியோடு கூடி வாழும் நாட்களில்,

தேவி கருவுற்றுச் சிறுவனைப் பயந்தாள். அதனை யறிந்த அரசன் நிறைமதி கண்ட பரவையேபோல் பெரிதும் உவகை பொங்கி உகப்புற்றுத் தானம் பலவும் வழங்கினான்; எளியவர்க்குப் பொருளும் பூணும் ஈந்தான்; சிறைப்பட்ட அரசர்களை விடுவித்தான். அரசன் கோயிலில் இயங்கள் இயம்பின; சங்கு முழங்கின; வெண்கொடி யாடின; சுண்ணமும் எண்ணெயுந் தூவினர். நன்னகர் முழுதும் பொன்னகரே போலப் பொலிவுற் றிருந்தது.

இவ்வாறு இன்புற் றிருக்கையில், அரசன் அம் மகவிற்குச் **சஞ்சயந்தன்** என்று பெயரிட்டான். ஐவகைத் தாயரும் அன்புடன் வளர்ப்ப, மகவும் பிறை போல வளர்ந்து, குழவிப்பருவ மடைந்து, அரசனுக் குரிய கல்வித்துறைகளிற் போகி, இளமைப் பருவத்தை எய்தியது. பின்னர், ஸர்வஸ்ரீ என்னுந் தேவி மீட்டும் ஓ ராண்மகவினைப் பயந்தாள். அரசன் அம்மக விற்குச் **சயந்தன்** எனப் பெயரிட்டு, அதனையும் அன் புடன் வளர்ப்பித்துவந்தான்.

இவ்வாறாக, வைசயந்தன் தன் புதல்வன் சஞ்சயந்த னுக்கு வேள்வி நீர்மைப்படி நல்லா ளொருத்தியை மணம் புரிவித்தான். அவனும் அவளுடன்கூடி வாழ்ந்து வருநாளில், அவள் ஒரு மகவினை யீன்றனள். அதனை யறிந்த வைசயந்தன், மதிவரவு கண்ட நிறைகடலே போல் உளம் பொங்கி, உவகை விஞ்சி, பொருளறை திறந்து வறியவர்க்கு அரும்பொருள் வழங்கினான். சஞ்சயந்தன், தன் புதல்வனுக்குத் தன் தந்தையின் பெயராகிய **வைசயந்தன்** என்னுந் திருநாமத்தை வழங்கி, வளனுற வளர்த்துவந்தான்.

அக்காலத்தில், அசோகவனத்தில் சுயம்புதீர்த்தங்கரர் எழுந்தருள, அவரைக் கண்ட காவலர் வியப்புற்று விரைந்து அதனை அரசனுக்கு அறிவித்தனர். அதனைக் கேட்ட மன்னவன் பொற்குவை பெற்ற வறியவன்போல் உளம் பொங்கி எழுந்து, முனிவரைத் திசை நோக்கி வணங்கி, காவலர்க்கு விழுநிதி நல்கி விடுத்து, 'முனிவரைக் காண்டற்கு முதுநகர் மாந்தரும் எழுக' என்று முரசறைவித்தான். உடனே, நகர மாந்தர் கால் பொரு கடல்போற் பொங்கி, நகரை அழகுறுத்தித் தாமும் ஆடையணிகளைத் தாங்கி, அரமனையை அடைந்தனர். மகளிர், மாலையுஞ் சாந்தும் ஏந்தி, மன்னனைச் சூழ்ந்து வணங்கினர். காவலன் கைம்மா இவர்ந்து கடிவனங் குறுகி, மாவினிழிந்து, மாதவனைநோக்கி நடந்து, முன்மதில் கடந்து, பலிபீடத்தைப் பணிந்து, மானஸ்தம்பத்தை வணங்கி, அகழைக் கடந்து உட்புகுந்து, உதயதரம் பிரீதிதரம் கல்யாணதரம் என்னும் மூன்று மதில்களையுங் கடந்து, பொன்னாலும் மணியாலும் இயன்றுள்ள ஸ்ரீநிலயத்தை அடைந்து, நறுமலர் தூவி, மத்தமால்களிறு செம்பொன்மலையை வலம்வருதல் போலப் பலமுறை வலம் வந்து, ஆண்டு எழுந்தருளியிருந்த இறைவனைக் கண்டு, காதல் கடலிற் பெருக, சிறையழி புனலிற் சென்று, திருவடிகளில் வீழ்ந்து, பலவாறு வழுத்தினான்.

முனிவரது ரூபத்தையும் வஸ்துவையும் குணத்தையும் பலவாறு வழுத்தி வணங்கிய மன்னவன், தனக்குத் தத்துவங்களின் இயல்பினை உபதேசித்தருளுமாறு அவரை வேண்டினான். அவரும் அருள்சுரந்து, உயிர் முதலியவற்றின் இயல்பினை அருளிச் செய்வாராயினர் :

'அரசே கேட்பாயாக. உயிர், வீட்டது (மோக்ஷ ஜீவன்) என்றும், மாற்றது (ஸம்ஸார ஜீவன்) என்றும் இருவகைப்படும். அவற்றுள், வீட்டுயிர் எஞ்ஞான்றும் கேடின்றி உருக்கிய பைம்பொன்போல் தன்னிலையில் ஒளிர்வனவாம்; மாற்றுயிர் தோற்றமுங் கேடும் தொடர்ந்து, வினையென்னுங் கடுவளியினால் நால்வகைக் கதிகளிலுஞ் சுழல்வனவாம். உயிரானது சூக்ஷ்ம காய யோகத்தினால் இவ் வுலகமெங்கும் பரந்திருக்குந் தன்மையதாகும். ஆயினும், அது, தான் எடுத்துக்கொண்ட உடம்பி னளவேயாய் அமைந்திருக்கும். மானிட உடம்பினை யடைந்த உயிர், அதனினீங்கின், வினைக்குத்தக நால்வகைக் கதிகளுள் ஒன்றிற் செல்லும். விலங்கின் உடம்பினை அடைந்த உயிரும், அவ்வாறே நால்வகைக் கதிகளிலும் புகும். மற்றைத் தேவருடம்பும் நரகருடம்பும் அடைந்த வுயிர்கள் அவ்வுடம்பு நீங்கின், மானிடனாகவேனும் விலங்காகவேனும் தோன்றும். உயிர்கள், தாஞ்செய்த நல்வினை தீவினைகளின் பயனை நுகர்ந்தே தீரும். தீவினைப்பயன் நஞ்சுபோலத் துன்பத்தையும், நல்வினைப்பயன் அமிழ்துபோல இன்பத்தையும் பயக்கும். சம்புத்தீவு, தாதகித்தீவு, புட்கரத்தீவின் ஒருபகுதி இவற்றில் மானிடர் தோன்றுவர். இவற்றுள்ளும் தர்மகண்டங்களாகிய நூற்றெழுபது கண்டங்களில் ஜிநதருமத்தை யுடையவர் உண்டாவர். அவர்கள் முதற்குலம் மூன்றிலும் தோன்றுவராயின், தீவினைகளைச் செற்று வீட்டை யடைவர். உயிர், தனது வினை அறவே ஒழிந்தபோது எண்குணங்களும் எய்தி, மேனோக்கிச் சென்று, எவ்வுலகும் இறைஞ்ச, மூவுலகத்

திற்கும் மேலிடத்தில் கைவல்ய பதவியை அடையும். அரசனே, உயிர் முதலிய பொருள்களின் உண்மைத் தன்மையை உணர்தல் நன்ஞானமாகும். அவற்றை ஐய மறத் தெளிதல் நற்காட்சி எனப்படும். இவ்விரண்டனை யும் ஒருதன்மையாகக் கொண்டு ஒழுகுதலே நல் லொழுக்கமாகும். இம்மூன்றும் பொருந்துமாயின், அதுவே வீட்டுக்குரிய மெய்ந்நெறியாகும்' என்று, உண் மைப்பொருள்களை உணர்த்தினர்.

அறவுரைகேட்ட அரசன், அறிவ ரடிகளில் வீழ்ந் திறைஞ்சி விடைபெற்று மீண்டு, தன் நகரத்தைச் சார்ந்தான். சார்ந்தவன், தான் தவம் புரிதலை விரும்பி, அதனைத் தெரிவிப்பான் சுற்றத்தாரை யழைத்து, அவர்களை நோக்கித் தன் உள்ளக்கருத்தினை உரைசெய் வானுயினன்: 'அறிவீர், கேண்மின். கடல் மலை கானம் தீவம் கயம் யாறு முதலிய இடங்களில் நாம் பிறவாத இடம் இல்லை. நாம், விலங்குகளாகப் பிறந்திருந்த காலங்களிலும், நரகர்களாகப் பிறந்திருந்த காலங்களி லும், மானிடராக வந்தநாட்களிலும் அடைந்த அல்லற்கு அளவேயில்லை; இதுகாறும் நாம் பிறந்துள்ள பிறவி களுக்கும் எண்ணில்லை. நமது இளமையும் எழிலும் வானவிற்போல மாயும்; வளமையும் கிளையும் புது வெள்ளத்தின் வரவினைப்போல மாறும்; வாழ்நாளோ, வெளியிடை வைத்த விளக்கேபோல் வீயும். ஆகலின், இவ்வுடம்பு உள்ள போழ்தே நல்லறத்தை மேற் கொள்ளுதல் ஒள்ளியதாகும். அன்றியும், எலும்பினை நிறுத்தி, நரம்பினல் பின்னி, குருதியைத் தோய்த்து, இறைச்சியை மெத்தி, தோலான் மறைத்து, அழுக்கின்

ஒழுக்கு மாறாத வாயில் பலவற்றை அமைத்த இவ்வுடம்பாகிய சிறிய குரம்பையில் விருப்பம் வைப்பவர், அறிவினாற் சிறியரே யாவர். அவர், வீட்டுலகத்தின் மேன்மையை அறியகில்லார். மூவுலகங்களிலும் தோன்றி மாய்ந்து இவ்வாறே துன்பங்களை யடைவனவாகிய உயிர்களை, ஈன்றெடுத்த தாயேபோலப் பெரிதும் பேணி இன்பத்துள் இருத்தி, முடிவில்லாத் தன்மையை அருள் செய்கின்ற எம்பெருமான் அருளிய நல்லறம் ஒன்றே யன்றி, நாம் உய்தற்கு வேறு வழியில்லை. ஆகலின், இவ்வரசாட்சியை என் புதல்வனுக் கீந்து, யான் தவம் புரியச் செல்ல விழைகின்றேன். நீவிர் எனக்கு உதவி செய்தல் வேண்டும்' என்று கூறி, தன் புதல்வன் சஞ்சயந்தனை நோக்கி, 'நீ இவ்வரசாட்சியை ஏற்று என்னைத் தவம்புரிய விடுத்தி' என்று வேண்டினான். வேண்டுதலும், தந்தை கூறிய அறவுரை யனைத்தும் அகங்கொண்ட மைந்தன், 'எந்தையே, திருவறம் ஒன்றே யன்றி உய்தற்குப் பிறிது துணையில்லை என்று தாமே இப்பொழுது சாற்றினீர்; ஆகலின், யானும் அந்நெறிக்கண் ஒழுக அவாவுகின்றேன். வீட்டுலக ஆட்சியை வேண்டாது இந் நிலவுலக ஆட்சியை விழைவது, பெருவிலை மணியைப் பிண்டிக்கீத லொக்கும். ஆகலின், தேவரீர் செல்லும் அறநெறியையே யானும் மேற்கொள்வேன்' என்று, மண்ணுலகாட்சியை மதியாதாயினான்.

சஞ்சயந்தன் சாற்றிய நல்லுரைகளை யுள்ளங்கொண்ட வைசயந்தன், தன் மைந்தன் சயந்தனை நோக்கி, 'அறிஞனே, நீயே இவ்வரசாட்சியை மேற்கொண்டு, என் பொறையைத் தவிர்க்கவேண்டும்'

என்று வேண்டிக்கொண்டான். அதனைக் கேட்டதும் சயந்தன் தந்தையை நோக்கி, 'குணக்குன்றனைய எந் தாய், தாமும் என்றன் ஐயனும் வெறுத்துக் கூறிய இவ்வரசுரிமையை விழைவேனேல், யான் நால்வகைக் கதிகளிலும் அலமருவே னாவேன். அறிவினாற் பெரிய வர், ஆன்றோர் செல்லும் நெறிக்கண் சென்று, அளவில் இன்பத்தை யடைகுவர்; சிறியவரே பெரியோர் செல் லும் நெறியைப் பிழைத்துப் பிறவித்துயரி லழுந்துவர். ஆகலின், அடியேனும் இந் நிலவுலக வாழ்வினை நினை யேன்; தேவரீர் செல்லும் அறநெறிக்கண்ணே நிற் பேன். அடியேற்கும் அருள்புரிதல் தமது கடமையே' என்று தன் உள்ளத் துணிவை உணர்த்தினான். இவ்வாறு, வான்றுளி யல்லது பிறிதொன்றனை வேண் டாத மானப்புள்ளே போல், அறநெறி யல்லது பிறி தொன்றனையும் பேணாத மைந்தர்தங் கருத்தினை யுளங் கொண்ட மன்னவன், அவர்பால் ஒன்றுங்கூற இயலா னாய், போரேற்றின் பொறையை இளங்கன்றின்மேல் இட்டதேபோலத் தன் அரசியற்பொறையை மைந்தன் மகன் வைசயந்தன்பால் விடுத்து, மைந்தரிருவரோடு கூடி, வனஞ்சேறலை மேற்கொண்டான்.

அவ்வாறே வைசயந்தன், தன் பேரனுக்கு மோலி கவித்துச் சிறப்புச் செய்தான். பின்னர் மூவரும், மாலை, கலிங்கம், பணி, குஞ்சி முதலியவற்றைப் பரிந்து, படிமங் கொண்டு, பண்ணவர் குழுவை யடைந்தனர். ஆங்கு, அவர் அம்முனிவர்பால் முதல்நூலோதித் தவவொழுக் கந் தாங்கினர். இவ்வாறு சின்னாள் செல்ல, வைசயந்தன் மைந்தரினீங்கித் தனியே சென்று, ஒரு பருப்பதச்

சிகரஞ் சார்ந்து, மழை பனி வெயில் முதலியவற்றைத் தாங்கி, நிலைதளராது, மலைமிசை மலையேபோல் தவத்தில் நிலைத்திருந்தான். தவத்தின் ஒளியால் பழவினை யிருட்டுப் பாறலும், அனந்தஞானம் முதலிய நாற்குணங்கள் தோன்றின; அவன் மேனியும் ஒப்பற்ற ஒளியின் ஒளிர்ந்தது. அப்பொழுது வானவர் குழுமி, தூமலர் சொரிந்து, சுண்ணஞ் சிதறி, புகையுஞ் சுடரும் பொறுத்து, தாமமும் சாந்தும் தாங்கி, வைசயந்தனை வணங்கி, 'பெரும, நுமது திருவுள்ளத்தில், பிறரைக் காய்தலும் உவத்தலும் இல்லையே. அங்ஙனமாகவும், நுமது திருவடியிற் காய்தலை யுடையோர் நரகத்தையும், உவத்தலை யுடையோர் துறக்கத்தையும் அடைதற்கு ஏது யாது? அது, நுமது தவத்தின் தன்மையோ, அன்றி, அவர்தம் வினையின் விளைவோ, அறிகிலேம். முனிவர் வேந்தே, தாம் ஒரு குற்றமும் இல்லீராகியும் மூன்று குற்றங்களை உரைசெய்திருக்கின்றீர்; ஒரு பற்றும் இல்லீராகியும் உலகமெல்லாம் உம்மைப் பற்றுதற்குப் பற்றாயுள்ளீர்; சுற்றம் இல்லீராகியும் உயிர்களை யெல்லாம் சுற்றமாக உடையீர். இஃதென்னே மாயம்! அன்றியும், தேவரீர் ஒரே யறிவினை யுடையீர்; யாமோ வேறுபாடான பல அறிவுகளை யுடையேம்; நீவிர் பிறவியிலீராயினீர்; யாமோ பல பிறப்புக்களை யுடையேமா யுள்ளேம்; அடிகள், செல்கதி ஒன்றும் இல்லீர்; யாமோ நால்வகைக் கதிகளை யுடையேம். இத்திறத்தில், எம்மினும் வறியீராகிய நீவிர் எம்மை அடிமை கொண்டது வியப்பினும் வியப்பன்றே! இத்தகைய நுமது சீர்

மையை யாம் என்னென்று இயம்புவேம்!' என்று பல வாறு வழுத்தி மீண்டும் வணங்கினர்.

அவ்வமயத்தில், அவ்வமரார்கள் வியப்புறுமாறு ஒப்பற்ற உருவுடன் தரணேந்திரன் என்பவன் அரிவை யர் பலர் சூழ, வைசயந்த முனிவரை வணங்க வந் தான். நிழல்விடும் மேனியும், நிறைமதி முகமும், கழ லணி கழலும், கமலபாதமும், மதனனும் விரும்பும் வடிவழகும் உடைய அத் தரணேந்திரனைக் கண்டு, அவ னுருவத்தில் ஈடுபட்ட மனமுடையனாகிய சயந்தன், 'ஆ, ஆ! இவருக்கு இத்தகைய உருவம் தவத்தா னன்றே சமைந்தது! யானும், தவத்தான் இவ்வுருவம் எய்துவேன்' என்று, அதன்கண் வேட்கையுற் றான். நஞ்சினை அமிழ்தென்று கருதி உண்டவன் அத னால் தான் துஞ்சுதற் கஞ்சி அதனைக் கான்று, பின்ன ரும் அதனையே அருந்தினதுபோல, தான் இழித்துக் கூறிய இழிநிலைமையில் எண்ணங்கொண்ட சயந்தன் உமி கொண்டவனை யொத்து, தரணேந்திரனாகிப் பவணலோகத்தை அடைந்தான். வைசயந்த முனி வரோ வினைகளை வென்று, மூவுலகும் ஏத்த, மேலெ ழுந்து சென்று உம்பருலகத்தின் உச்சியை யடைந்து, என்றும் நின்று நிலவினர். வீட்டுலகினை எய்திய முனி வரது சரம சரீரத்தை வணங்கி, அமரார்கள் ஆண்டு நின் றகன்றனர்.

2. சஞ்சயந்தன் வீடுபேறு

சஞ்சயந்த முனிவர், வைசயந்தரை வணங்கி மீண்டு, மனோஹரபுரத்தைச் சார்ந்த பீமாரணியத்தை அடைந்து, ஆண்டு இரவும் பகலும் தளர்வின்றிப் படிமத்தில் நின்றார். அவரது தவத்தின் சிறப்பினால், ஆன்கன்றும் யானைக்கன்றும் யாளிக்குழவியோடு விளையாடும்; புலிப்பறழிற்கு மானும், மான்கன்றிற்குப் புலியும் பாலூட்டும்; எலி, அரவின் தலைமேல் ஏறியாடும்; நாகமும் நகுலமும் நண்புற்று நயக்கும்; கவரிமான் வாலின் முள்ளைப் புலி வாங்கும்; ஊன்தின்று வாழும் கொடுவினைமாக்களும் கோறற்றொழிலைக் கைவிட்டனர்; எல்லா உயிர்களும் அமைதியை மேற்கொண்டன.

முனிவர், ஒருவழிப்பட்ட உள்ளத்தராய், இருவகைத் துறவினால் ஐம்பொறிகளை வென்று, ஒன்பது வகை யோகத்தில் நின்று தியானஞ்செய்வா ராயினர். இவ்வாறு இவர் தவத்தினிற்கையில், விஞ்சையர் வேந்தனாகிய வித்துத்தந்தன் என்பவன், தன் தேவியோடு வானவூர்தியி லேறி வழிச்சென்றுகொண் டிருந்தான். அவ்வூர்தி பீமாரணியத்திற் சேறலும், முனிவருக்கு மேலாக இயங்குதலின்றி நின்றுவிட்டது. அதுகண்டு வியப்புற்ற விஞ்சைவேந்தன், கீழே தவம் புரிந்து கொண் டிருக்கும் முனிவரைக் கண்டு, 'இவனே இதனைத் தடுத்தானாகல் வேண்டும்' என்று எண்ணி, எரியெழ விழித்து, விமானத்தினிழிந்து, கதழ்ந்து சென்று முனிந்து, முனிவரைப் பற்றி விமானத்தில் வைத்துக் கொண்டு அதனைச் செலுத்துவா னாயினன். அவ் விமா

னம், வெள்ளிமலையின் வடகிழக்கின்கண், குமுத வதி, அரிவதி, சுவர்ணவதி, கஜவதி, சண்டவேகை என்னும் ஐந்துயாறுகளும் ஒன்றுகூடும் தடத்தின் நடுவே சென்றதும், சலியாது நின்றுவிட்டது. தனது எறுழ்வலித்தோளால் எத்துணை முயன்றும் விமானம் ஆண்டுநின்றும் பெயராதே நின்றது கண்டு உள்ளம் புழுங்கி, 'இவனே இதனை இயங்காவாறு இழைத்துள்ளான்' என்று எண்ணி, முனிவரை அத் தடத்தின் நடுவே தள்ளி, இன்னல் பலவும் இழைத் தான்; வாள் வேல் தண்டு முதலியவற்றைத் தாங்கி முனிவரைத் தாக்கினான். பின்னும் அவன், மத்தயானை யின் வடிவாய்ச் சென்று முனிவர் மார்பில் குத்துமாறு குறுகுவான்; கோண்மா வடிவுகொண்டு ஓடுவான்; அரவின் வடிவங்கொண்டு அங்காந்து செல்வான்; கோளரி யுருவிற் குலுங்கத் தோன்றுவான்; கானத் தோரி யுருக்கொடு கத்துவான்; சுடர்க்கண் வெருவை யாய்ச் சுழலுவான்; கூரெரியைக் கொளுவுவான்; மழை போலக் கற்களைச் சொரிவான்; அண்டமும் அதிர ஆர்ப்பான்; 'தோளைத் துணிப்பேன்' என்று வாளைச் சுழற்றுவான்.

இவ்வாறு, வித்துத்தந்தன் தன் உழைஞரும் நடுங்குமாறு ஊறு இழைத்தானாக, அவையெல்லாந் தம் ஊழ்வினையின் பயனே என்று உளங்கொண்ட முனி வர், சிறிதும் வெகுளாராய், யோகத்திலேயே நினைவைச் செலுத்திச் சலியாது நின்றார்.

அதனைக் கண்ட விஞ்சையன், ஆங்குநின் றகன்று தனதிட மணுகி, ஆண்டுள்ளாரை நோக்கிக் கூறுவான் :

'அன்பரீர், நமது நாட்டிற்கு அணியவிடத்தே அரக்க ெனாருவன் அடைந்துள்ளான். அவன், பிலம்போன்ற பெரிய வாயினன்; பிணங்களை யல்லாமற் பிறிதொன்றனையுந் தின்னான்; மலையை விழுங்கினும் வயிறு நிறைதல் இலன். அவன், பலப்பலபகல் பசியால் வாடினவன் போல் காண்கின்றான். ஆயினும், இரவிலேயே இரை தேடுவான் போலும். ஆகலின், இன்னே நாம் ஒருங்கு சென்று அவனை அடர்த்திலேமாயின், எல்லி யுற்றதும் அவன் நம்மை இரைகொள்ளுதல் உண்மை. நீவிர், "நமக்கு அவன் யாதும் இழைத்திலன்" என்று எண்ணி, என் உரையை இகழன்மின்; யான் கூறும் உறுதி யுரையை உளங்கொண்மின்; யான் கூறியன அனைத்தும் வாய்மையே யாதலை அப்பால் அறிகுவிர்; நாம் காலந் தாழ்க்காமே இப்பொழுதே சென்று, மலைகளை யெறிந்து அவனைக் கொல்லுதலே தக்கது. இன்றேல், நாம் குலத்தொடுங் கூற்றம் வாய்ப்படுதும்' என்று பலவாறு கூறினான்.

'அரக்கன் அருகில் அடைந்துள்ளான்' என்ற சொற்கள் செவியிற் புகுதலும், ஆண்டிருந்தவ ரனைவரும் இரைத்தெழுந்து, வரைத்திர ளேந்தித் துணைவிற் சென்று முனிவரைச் சூழ்ந்தனர். சூழ்ந்தவர், கருமுகில் பொன்மலையைச் சூழ்ந்து மின்னொடுகூடி வெடிபட இடித்துப் பெயல் பொழிதலேபோல், இடியென ஆர்த்துப் பற்கள் கடித்துக் கன்மழை பொழிந்தனர். முனிவர், தானவ ரிழைக்கும் ஊறுகளெல்லாம் வினைகழிந்தோரை யடைதல் இல்லை என்பதை யுளங்கொண்டு, கனகவரைபோலத் தளர்வின்றித் தவத்தில் நிலைத்

திருந்தார். வித்துத்தந்தன், தாங்கள் செய்த தீங்குகளுக்கெல்லாஞ் சலியாதுநிற்றலைக் கண்டு, மேலும் வெகுளி பொங்க எழுந்து விரைந்து, வெற்புக்கள் பலவற்றை வேரொடு பிடுங்கி முனிவர்மேல் எறிந்தான். முனிவர் பின்னும் வெகுளியை யடக்கி, யோகத்தில் நின்று, பிரமத்த குணத்தைக் களைந்து விளங்கினர். அப்பொழுது விஞ்சையன் விண்ணகம் புதைய வெஞ்சரம் வழங்கினன். அதனைக் கண்ட வானவர் கண்கள் புதைத்துக் கலங்கினர். அவ்வமயத்தும் முனிவரர், ஜினனது பண்பும் தவராது தன்மையும் ஆகமத் தியலும் அறிவுற்று, பிரகிருதியின் தொடர்பினை யழித்துப் பிறங்கினர். பின்னரும் வித்துத்தந்தன், கனலெனக் கடுகி உருமெனத் தோன்ற, முனிவரர் பின்னுள்ள பலவகை வினைப்பகைகளை வென்று மேலோங்கினர். இவ்வாறு விஞ்சையன் துன்பம் விளைக்க விளைக்க, முனிவரர் வினைகளை வென்று வென்று மேன்பாடெய்தி விளங்கினர்.

முனிவர் நால்வகைக் காதிகருமங்களைக் கெடுத்து, அனந்தஞானம் முதலிய நால்வகைப் பண்பினை யடைந்தாராக, மூவுலகினரும் அவரை யடைந்து, மருமலர் சொரிந்து, வணங்கி வாழ்த்தினர். அப்பொழுது, பவண லோகத்தில் வாழுந் தேவர்களும் பிறவுலகத்தவர்களும் ஆண்டு அணுகி, முகைமலர் சொரிந்து மொய்த்தனர். அச் சிறப்பினைக் கண்ட விஞ்சையன் உள்ளம் நடுங்கி நிலை தளர்ந்து கீழ்நிலத்தில் வீழ்ந்தான்.

வானவர், முனிவர்த மிருப்பிடத்தைச் சந்தனத்தால் மெழுகித் தாமம் நாற்றினர்; தூமம் புகைத்தனர்; சுடரெரித்தனர்; நறுமலர் சொரிந்தனர். மங்கையர்

சேஷையிட்டனர்; நடனஞ் செய்தனர். பின்னர் வானவர் குழுமி வழுத்தலுற்றனர்: 'பெருமான், நீ நான்கு வினைகளைக் கெடுத்து, நான்கு குணங்களை யார்ந்தனை; நான்கு கதிகளைக் கடந்து அகதியை அடைந்தனை. முனிவர் முதல்வ, நீ இம் மூவுலகத்தையும் ஏந்தும் ஆற்றலை; இவ்வுலகங்களின் அகல நீள வுயரங்களை அணுவினால் அளக்குந் தகைமையை; உயிர்க ளிழைக்குங் கருமங்களைச் செய்தே அவற்றினின்று விலகி நிற்கும் மேன்மையை; உத்தமக் குரிசில், இவ்வுலகத்துயிர்களின் இன்பத்தையும் உனது இன்பத்தையும் ஆராயின், அவை அணுவும் ஆகாயமும் போலும். பெரும, நீ உன்னை உன்னுள்ளே அனுபவித்துப் பேரின்பத்தில் உறைகின்றாய். உன் பெருமையை அளவிட்டுரைக்க யாராலாகும்' என்று, இவ்வாறு பலபட வழுத்தி நிற்ப, மாதவர் எண்குணங்களின் இலங்கினார். அவ்வமயத்தில், பழுமரத்தைச் சாரும் பறவைகள்போல ஆண்டடைந்தோ ரனைவரும் மருமலர் தூவி வணங்கி மகிழ்ந்தனர். அவருள் தரணேந்திரனாகிய சயந்தன், தன் ஐயனது அருஞ்சிறப்பினை யறிந்து, அகமலர்ந்து அடிபணிந்து நின்றான்.

நின்றவன், அவரருகில் சிலையுங் கணையும் வேலும் கோலும் கல்லும் மரனும் பிண்டிபாலமும் பிறவும் குவிந்து கிடப்பக் கண்டு, விஞ்சையன் செயலைத் தன் அறிவினால் அறிந்து, உள்ளங் கொதித்து ஓடிச்சென்று அவனைத் தன்னடிகளால் உதைத்து வீழ்த்தினான். பின்னுஞ் சினந்தணியானாய், 'கொடியனாகிய வித்துத் தந்தனையும் அவனொடு குழுமிவந்த சுற்றத்தாரையும்

இன்னே நாகபாசத்திற் கட்டி, நடுக்கடலி விடுவேன்' என்று விரைந்தான். அவனது வெஞ்சினத்தை யறிந்த விஞ்சையர் நடுக்குற்று, 'இன்னே நமக்கு இறுதி எய்திற்று' என்று தளர்ந்து, தரணேந்திரனைச் சார்ந்து அடிகளில் இறைஞ்சி வணங்கி, 'நுந்தம் சரணங்களுக்குச் சரணம் அண்ணலே, யாங்கள் ஒன்றும் அறியேம். இவ் வெய்யனாகிய வித்துத்தந்தன் எங்களை யணுகி, 'அரக்க னொருவன் நம்மை யழிக்க வந்துள்ளான்; நாம் அனை வரும் ஒருங்கு கூடி அவனை இப்பொழுதே அழித்திலே மாயின், அவன் இன்று இரவில் எல்லாநம்மையும் இரையாகக் கொள்ளுதல் திண்ணம்' என்று கூறி, எங்களைத் தெருட்டி இங்குக் கொடுவந்தான். யாமும் அவன் மாற்றங்களை வாய்மை எனத் தேறிச் சில தீங்குகள் செய்தேம். சிறியேம் இழைத்த தீங்குகளைப் பெரியோய், நீ பொறுத்தருளுதல் கடனாகும்' என்று இரங்கி வேண்டினர்.

இவ்வாறு, புலியைக் கண்ட புல்வாய்களேபோல நடுங்கி, விஞ்சையர் கூறிய செஞ்சொற்களைச் செவியி லேற்ற தேவன், நெஞ்சங் குழைந்து, அவர்களைப் பாசத்தினீக்கி விடுத்து, 'வித்துத்தந்தனை விடுக்கி லேன்; அவனையும் அவன் சுற்றத்தையும் அலைகடலில் இடுகின்றேன்' என்று உடன்றெழுந்தான். அவ்வள வில், சஞ்சயந்த முனிவரை வணங்கிப் பூசனை முற்றி நின்ற **ஆதித்தியாபன்** என்னும் அமரன், சயந்தனை நோக்கி, 'நாகர் வேந்த, யான் கூறுதலைச் சிறிது கேட்பாயாக. இவன், அறிவின்றி இழைத்த தீங்கு களை அகங்கொள்ளுதல் தகாது. அன்றியும், இவன் நின்

சினத்திற்குத் தக்கவனல்லன். ஆகலின், இவன்பால் அருள் செய்தலே தகுதி. இன்னுங் கேள்: முற் காலத்தில், ஆதிநாதராகிய ருஷபதீர்த்தங்கரர், இம் மாநில னனைத்தும் மன்னவர்க் கீந்து, மாதவந் தாங்கி யோகு செய்திருப்ப, நல்லியல் வாய்ந்த நமி விநமி என்பாரிருவர் அவரை யடைந்து, வலஞ்செய்து வணங்கி, "அடிகள், தாம் நிதியும் உலகும் நிருபர்க் கீந்த அந்நாளில் அடியேம் அடைந்திலே மாகலின், இற்றை நாள் எமக்கு நாடும் நிதியும் நல்கி யருள்வீர். இன் றேல், யாங்கள் இவணின் றகலேம்" என்று ஏத்தி வழுத்தி இறைஞ்சி நின்றனர். அவரிருவரும், பறவைகள் வந்து வீழவும் பாந்தர்கள் நின்று கேட்பவும் இன்னிசை பாடி இறைஞ்சி நிற்ப, இறைவராகிய ருஷபர் அசைதலின்றி நிலைத்திருந்தார். அதனைத் தன்னறிவினால் அறிந்த தரணேந்திரன், கலைகளெல்லாங் கற்ற பண்டிதனாய், கமல மலரை வென்ற முகம் வாய் கை அடியிணை இவற்றையுடைய நல்லுருக் கொண்டு, இறைவனை யணுகி இறைஞ்சி, மைந்தர் தஞ் செய்கையை மனங்கொண்டு, "மைந்தீர், நீவிர் எம் பெருமான் திருவடிகளுக்கு இயைபில்லாத இடை யூற்றைச் செய்தீர்; இது தகாது. இதனை விடுமின்" என்றான். அவ்வுரைகளைக் கேட்ட இளைஞரிருவரும், "நன்று, நன்று! இறைவன் பெருமையை யாமறிதும்; அறியாமே இரக்கின்றே மல்லேம்; நீவிர் நுமது கருமத் திற் கண்ணுற்றுச் செல்வீர்; இன்றேல், நுமக்கே அறி யாமை அமைவுறும்" என்ன, நாகேந்திரன், "ஆயின், இறைவன்பால் நீவிர் இரக்கின்றது என்னையோ?"

என்றான். குமரர், "நம்பெருமான், சிலரை அரைய ராக்கி அவருக்கு அவனியைப் பாத்தீந்து, வேண்டுவார் வேண்டுவன நல்கி, ஈண்டுத் தவமேற்கொண்டுள்ளார். யாமும் அரசிளங் குமரரேம். ஆகலின், அவனி பெறு தற்கு ஈண்டுப் போதந்தேம்" என்ன, நாகேந்திரன், "நீவிர் விழைவது இறைவர்பால் இப்பொழுது இல தன்றே! அவர் நுமக்கு எங்ஙனம் ஈதல் கூடும்? இதனை எண்ணாது அவர்பால் இரத்தல் ஏழைமையே யன்றோ!" என்றான். அதனைக் கேட்ட இளைஞர், "நீவிர் நன்று கூறினீர்! மூன்றுலகமும் உடைய கோமானுக்கு ஒன்றும் இல்லை என்றது அமைவுறுதல் யாங்ஙனம்? நீயிர் பித்தர் போலும்" எனலும், தரணேந்திரன், "இந் நிலவுலகு முழுவதும் பரதன் என்னும் பெருவேந் தனது ஆட்சிக்குள் அமைந்துளது. ஆகலின், அதனை வேண்டுதிராயின் அவன்பாற் சென்று இரக்குதிர்" என் றான். எனலும் குமரரும், "இவ்வுலகத்தாருக்கு உறுதி கூறுதற்கு உம்மையோ விடுத்துள்ளனர்; நீர் நுமது வழியே செல்வீர்" என்றனர். அவ்வுரை கேட்ட நாகேந்திரன், "இளையீர், நீவிர் கட்டழகமைந்த காளைய ராயும், சொல்லுந் திறனில் வல்லவராயும் உள்ளீராயி னும், அறிவிற் சிறியீரா யிருக்கின்றனிர். பெரியோர் பெயர்ந்துழி அவர்பின் சேறலும், அவரை நீங்காது வருத்துதலும் அறிவிலார் செயல்களே யாகும். இது நும்போல்வார்க்குத் தகுவதொன் றன்று" என்று நுவன்றான். அவற்றைக்கேட்ட அரசிளங்குமரர், "யாம், எம்பெருமானிடத்தில் யாதேனும் ஒன்று பெறுவோ மாயின், அதற்கு இவ் வையமும் வானமும் ஒப்பாக

மாட்டா. ஆகலின், பரதனே யன்றிப் புரந்தரனே நல்குவதாயினும் யாம் அவ ரளிப்பனவற்றை வேண்டுதல் இலேம். இனி, எம்மாட் டொன்றும் உரையற்க" என்று முனிந்து மொழிந்தனர்.

இளையர்தம் எண்ணத்தை யுளங்கொண்ட தரணேந்திரன், அவர்தம் பெருமிதத்தைப் பாராட்டி, சஞ்சயந்த முனிவரை யணுகி, அவரடிகளில் இறைஞ்சி மீண்டு, தன்னுருக்கொண்டு, ஆரமும் பூணும் முடியும் குழையும் நிழல்விட, அக் குமரரைக் குறுகி, "மைந்தரீர், இறைவன், நீவிர் வேண்டியவற்றை ஈயுமாறு என்னைப் பணித்துள்ளார்; நீவிர் என்னோடு வம்மின், எழுமின்" என்று கூறி, அவர்களைத் தனது விமானத்தில் ஏற்றி, வேதண்ட மலையை விரைவிற் சார்ந்து, அம் மலைமிசை வாழும் மன்னவ ரனைவர்க்கும் மன்னராக்கி, அவருள் விநமிக்கு அம் மலையின் வடசேடியில் அறுபது நகரங்களை யளித்து, கனக பல்லவம் என்னும் அணிநகரைத் தலைநகராகத் தந்தான்; நமி என்பவனுக்கு, அதன் தென்சேடியில் ஐம்பது நகரங்களை யளித்து, இரத நூபுரசக்ரவாளம் என்னும் பெருநகரை இறைநகராக ஈந்தான். அன்றியும், ஐந்நூறு விஞ்சைகளையும் எழுநூறு சிறுமறைகளையும் அவர்க்குத் தஞ்சமாக அருளிச்செய்தான். பின்னர், ஆங்கு வாழுந் தானவரை நோக்கி, "நீவிர் இவர்தம் ஆணைக்கு அடங்கி வாழ்மின். இன்றேல், நீவிர் அழிதலே யன்றி இம்மலையும் துகளாய்விடும்; இதனை மறவன்மின்" என்று அறிவுறுத்தி, அவ ரிருவருக்கும் அவ்வரசை நிலைநாட்டினன். அன்று தொட்டு இன்றுகாறும் நம்மவரால் அருள்செய்யப்

பெற்று வாழ்ந்துவரும் விநமியின் மரபில் வந்தவன் காணும் இவ் வித்துத்தந்தன் என்னும் வேந்தன். ஆக லின், நும்மவர் நாட்டிய அரசை நீயிர் அழித்தல் அமைதியன்று. நச்சுமரத்தை நாட்டி நீரட்டி வளர்த் தாராயின், பின்னர், அதனையும் அழித்தல் யார்க்கும் அரிதாகும். வேந்தே, நும்மவர் நிலைநாட்டிய இவ் விஞ் சையர் வேந்தனை வெகுளாது விடுப்பீராக'' என்று விளம்பினான்.

ஆதித்யாபன் அறைந்தவை யனைத்தும் செவி மடுத்த தரணேந்திரன், அவனை நோக்கி, "ஐய, வினை களைக் கடந்த இம் மேலோர், விதேக தேயத்தில் வீத சோகம் என்னும் நகரில் வீற்றிருந்த வைசயந்தனென் னும் மன்னவனுக்கு மைந்தர்; எனக்கு முன்னோர். இவர், யாருக்கும் தீங்கினை நினையாத செவ்வியர்; பொறை யையே பூணாகப் பூண்ட புகழினர். இப் பெருந்தகைக்கு அருந்துயர் இழைத்தவன் யாவனாயினும் அவனைத் தடியாது விடுவேனல்லேன். அஃது அறனாதலே யன்றி மறனாதல் இன்று'' என்று தன் உளநிலை தெரித் தான். அவற்றைக் கேட்ட ஆதித்யாபன், "அரசே, இவர் நுமக்கு முன்னவர் எனக் கருதி இன்னன இயம் பினீர். இப்பிறப்பில் இவர் அண்ணலாராய தோன்றே யறிவீர். இதற்குமுன் இவர் பிறந்த பிறப்புக்கள் இத்தனை என்பது எண்ணமுடியுமோ? அப்பிறவிகளில் இவருக்கும் நுமக்கும் எத்தகைய தொடர்பு இருந்தது! வினைவயத்தால் ஒருபிறவியில் ஒருவர் தொடர்பாக வருதலே யன்றி, எஞ்ஞான்றும் அவர் தொடர்பினரா யிருத்தல் இல்லை. மின்னலைப் போலத் தோன்றிமாயும்

பிறவிகள் பலப்பலவற்றில் உயிர்கள் தோன்றி மாய்த லின் ஒவ்வொரு பிறவிக்கண் ஒவ்வோருயிர் உறவின தாயே அமைந்திருக்கும். ஆகலின், உறவில்லாத உயி ரும் இல்லை. இதன்முன் நீயிர் எடுத்த பிறவிகள் எண் ணிலவாகும்; அவற்றுள், உமக்கும் இவருக்கும் இவ் வுறவு உண்டாயிருந்ததில்லையே! இவ்வொருநா ளுறவினை யுளங்கொண்டு இவ்வாறு உரைப்பது உரனாகுமோ!

உற்றவ ரேயுறு பகைஞ ராகுவர்
செற்றவ ரேசிறந் தாரு மாகுவர்
மற்றவ ரேமறித் திரண்டு மாகுவர்
அற்றவ ரொருவரிங் காரும் இல்லையே.

அரசர்க ளேயரு நரக ராகுவர்
நரகர்க ளேநல அரச ராகுவர்
சுரரவ ரேதொழு புலைய ராகுவர்
நரரவ ரேகரு நாயு மாகுவர்.

மங்கைய ரேமண வாள ராகுவர்
தங்கைய ரேமறுத் தாயு மாகுவர்
அங்கவ ரேயடி யாரு மாகுவர்
இங்கிது பிறவிய தியல்பின் வண்ணமே.

இவற்றை உணர்வார்க்கு உறவும் இல்லை, பகையும் இல்லை. சஞ்சயந்த முனிவரை, இப்பிறவியில் உற வினர் என்று உளங்கொள்கின்றீர். இவ்வாறே இவர் இதற்குமுன்னும் பல பிறவிகளில் உறவினரா யிருந் திருப்பர். ஆயினும், பல பிறவிகளில் இவர் நமக்குப் பகைவராயும் வந்திருப்பர். ஆகலின், முனிவர் எல்லாப் பிறவிகளிலும் உறவினரல்லர்; அவ்வாறே இவ் வித்துத் தந்தனும் எல்லாப் பிறவிகளிலும் நமக்குப் பகை

வனும் அல்லன். ஆயின் இவரிருவரும் பலபிறப்புக்களில் தம்முட் பகைவரா யுள்ளனர். பழம்பிறவியில், இவ் வித்துத்தந்தனுக்கு முனிவர்மாட்டு விளைந்த செற்றமே இப்பிறவியில் இவ்வாறு இன்னலை இழைத்தது. முனிவர் செயலே இதற்கு மூலமாகும். இம்முனிவர், முன்னொரு பிறவியில் அரசனு யமர்ந்திருந்தார். அந்நாளில் அவர் செய்த தீங்கே, இவ்வாறு இவனுக்கு இன்றும் செற் றத்தை விளைத்து அவர்க்கு இன்னலை இழைப்பித்தது. இதன்முன் நான்கு பிறவிகளிலும் இவன் இவ்வாறே முனிவரை முனிந்து இடையூ றிழைத்துள்ளான். அதற்கு நீயிர் என்செய்தீர்? இச்சிறியோன் செய்த தீங் கெல்லாவற்றையும் அறிவர் பொறுத்ததனுன் அவர், வினைகளை வேரறவென்று உயர்கதியையடைவாராயினர்; இவன், பழியையும் படரையும் படைத்துக்கொண்டான். இவற்றுல் வெகுளியால் விளையும் துன்பமும், பொறை யால் உண்டாகும் இன்பமும் நீயிர்தெள்ளிதிற் றெளிதல் கூடுமே! உண்மை இதுவாகலின், தாம் முனிவரிடத்தில் உறவும், விஞ்சையனிடத்தில் பகையும் பாராட்டுதல் தகுதியன்று. வெகுளியானது, தீச்செயலுக்கு அடியாய் நின்று தீக்கதியிற் செலுத்தும்; உறவினரையும் பகைவ ராக்கும். ஆகலின், வெகுளியினுங் கொடிய பகை ஒரு வற்குப் பிறிதொன்றும் இன்று. இனி, இவன்மேற் கொண்ட வெகுளியை விடுப்பீராக" என்று அறவுரை பலவும் அறைந்தான்.

அவ் வுரைகளைக் கேட்ட உரகேந்திரன், ஆதித் தியாபனை நோக்கி, "அறிவோய், முற்பிறப்புக்களில் இவ் வித்துத்தந்தன் விளைத்த செயல்களைத் தெரித்

தருளல் வேண்டும்'' என்று வேண்டினன். தேவர் கோமான், அவனை யருளி, "உரகர் வேந்தே, நீயிர், வெகுளிவெப்பத்தை அருட்புனலால் அவித் தொளிர் கின்ற சஞ்சயந்த முனிவரை இறைஞ்சி வருதிர். அதன் பின், அவற்றை அறிவிப்பேன்'' என்றான். என்றலும் தரணேந்திரன், ஆதித்தியாபனது அறிவுரையால் சினந் தணியப்பெற்று, சினவரன் திருவடிகளை இறைஞ்சி, அகமலர்ந்து அறிவெய்தி நின்றான். அவ் வளவில் அமரர் கோமான், அவனை நோக்கி, "அரசே, இம் முனிவர்கோமானும் நீயிரும் யானும் இவ் வித்துத் தந்தனும் பல பிறவிகளில் தொடர்புடையேமாய் வந் துள்ளேம். அவற்றுள் ஒன்றும் எஞ்சாது இயம்புவல், கேட்பீராக'' என்று, பண்டைப்பிறவியின் வரலாற்றைப் பகர்வானாயினன்.

3. பத்திரமித்திரன் அறங்கேட்டது

நாவலந் தீவின்கண், பாவலர் புகழும் பரதகண்டத்தின் ஒரு பகுதியதாகிய தருமகண்டத்தில் போக பூமியே போன்ற சீயமாபுரம் என்னுந் திருநகர் ஒன்று உண்டு. அதனை யடுத்து,

'காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்'

செழும்பொழிலுஞ் செய்குன்றும் திகழ்ந்து விளங்கும். அந்நகரம் மாடங்களாலும் மாளிகைகளாலும் கண்டோர் கண்களைத் தடுக்குங் காட்சியதாகிக் கவின்றது. அந் நகரத்தைச் **சீயமாசேனன்** என்னுஞ் செங்கோல்வேந்தன் ஆட்சிசெய்து வந்தான். அவன் தேவி **இராமதத்தை** என்பவள், கலைகளில் கலைவாணியை வென்றவள்; அமிழ்தினை வென்ற இன்சொல்வினள். அவளோடு அரையன் ஒருமனப்பட்டு உவந்து வாழ்ந்திருந்தான். அம்மன்னனுக்கு, சத்தியகோஷன் என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்ற **ஸ்ரீபூதி** என்னும் அந்தணன் அமைச்சனு யமர்ந்திருந்தான். அவனைத் துணைக்கொண்டு, வேந்தன் மேதினியைப் புரந்து மேன்பாடடைந்து விளங்கினான். அவனாட்சியில், மாந்தர் அறநெறியில் ஒழுகினராகலின், நாடு வளஞ் செறிந்து நன்கு வயங்கிற்று.

அக்காலத்தில் **பத்மசண்டம்** என்னும் நகரத்தில் ஈகையிற் சிறந்த **சுதத்தன்** என்னும் வணிக னொருவன், மனைமாட்சி வாய்ந்த மடவரலாகிய **சுமித்திரை** என்

னும் நல்லாளோடு கூடி இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தான். அந்நாளில், அவன்மனைவி, பாற் கடல் திங்களைத் தந்ததுபோல மைந்த னொருவனைப் பயந்தனள். சுதன் பிறந்ததும் சுதத்தன் வறியவருக்கு அருநிதி நல்கி மனம் உவந்து, மைந்தற்குப் பத்திரமித்தி ரன் என்னும் பெயரிட்டு, 'எம் அரந்தையை அகற்றி னான் இவன்' என்று அகமலர்ந்திருந்தான். மைந்தனும் வளர்பிறை என்ன வளர்ந்து, தக்க பருவத்தில் கலை பல கற்று, வாணிகம் பயின்று, மணியும் முத்தும் பகர்ந்து பெருவளம் படைத்தான். பின்னர், மாதர் பலரை மணந்து வாழ்க்கை நடாத்துகையில் ஒருநாள், வளஞ் சுருங்கின் அளந்துண்ண நேரும் என்பதை யுளங் கொண்டு, பொருள்செய எண்ணித் தன்பாலிருந்த முதற்பொருள்கொண்டு மணித்தீவத்தை அடைந்தான். ஆண்டு, பிறவுந் தமபோற் பேணி வாணிகம் நடாத்தி, உயர்ந்தவர்க் குதவிய உதவியொப்ப ஊதியம் படைத்து, 'அறம்பல புரிவோ ரரும்பொருள் சிறப்பர்' என்னும் ஆகமத்திற்குத் தானே எடுத்துக்காட் டாயினான்.

விழுநிதி படைத்த வணிகன், மணியும் முத்தும் வயிரமும் பிறவுங் கொண்டு தன்னகருக்கு மீண்டான்; மீண்டு செல்லும் வழியில், சீயமாபுரத்தைக் கண்டு அதனழகும் பெருமையும் உளங்கொண்டு, ஆங்கு, மன்னவன் இயல்பும், வாணிக வளமும், சொன்னவை பிறழா நன்னர் மாட்சியும், கள்வர் சேராக் காவலின்திற மும், பிறவும் அறிந்து, ஆங்கேயே வாழ்ந்திருக்க உறுதி செய்துகொண்டான்; ஆகலின், தன் கைப்பொருளை ஆண்டு நல்லாரொருவர்கைத் தந்துவிட்டுத் தான்

தன்னகர்ப் புக்கு, கிளைஞரை யுடன்கொண்டு வந்து வதிவான் எண்ணினன். அங்ஙனம் உறுதி கொண்ட வணிகன், அந்நகரத்தில் வாழும் அமைச்சனது சீலமும் வாய்மையுந் தெரிவுற்று, கல்வியும் அறிவுங் கணிப்புற்று, அவன்பாற் சென்று, அற்றங் கண்டு, கையுறையீந்து தன் கருத்தினைத் தெரித்தான். அதனைக் கேட்ட அமைச்சன், 'பிறன்பொருளைக் கொள்ளுதலும், அதனைப் பிறருக்கு வழங்குதலும், மாய்த்தலும், துய்த்தலும், மாற்றுதலும், இருந்தவிடத்தைத் தெரித்தலும், பிறவும் தீவினைக்கு அடியாகும்' என்று அறவுரை பகர்ந்தான். வணிகன், மீண்டும் பணிந்து வேண்டிக் கொள்ள, மந்திரத்தலைவன், 'ஆயின், யாரும் அறியாவாறு அற்றங் கண்டு அதனை என்பால் தந்து செல்' என்றான். அமைச்சனது உடன்பாட்டை யறிந்த வணிகன் மகிழ்வுற்று, அவ்வாறே தன் மணிச்செப்பினை அவன்பா லாக்கி விடைபெற்று, தன்னூருக்கு வழிக்கொண்டான்.

வழியில், வேய்கள் வெந்து வெடித்திடும் ஓசையும், பாய கள்ளியின் பரற்பொடி யோசையும், ஆயர் வேய்ங்குழ லூதிடும் ஓசையும், ஆலைபாய் அரவமும் பிறவும் மிக்க பலநிலங்களைக் கடந்து, வணிகன் தனது பத்மசண்டபுரத்தை யடைந்தான். ஆண்டுத் தன்னில்லம் புக்கு, தன் கருத்தினைக் கிளைஞர்க்குக் கிளந்து, அவர்களை யுடன்கொண்டு, நன்னாளில் நகர் நீங்கி வழி நடந்து, சீயமாபுரத்தைச் சேர்ந்தான். சீயமாபுரத்தில் ஓரில்லத்தில் தன் கிளைஞரை இருத்தி, வழிநடை வருத்தம் போக்கி மகிழ்வுற்றிருந்தான்.

பின்னர், பத்திரமித்திரன் அமைச்சனை யணுகிக் கைதொழுது இன்மொழி இசைத்து, சிறிதுநேரம் போக்கினன். அவ்வளவில் அவனது வரவினை யறிந்த மந்திரி, அவன் பொருளை வவ்விக்கொள்ள உளங் கொண்டு, தன் பிறப்பிற்கும் சிறப்பிற்கும் அறிவிற் கும் புகழிற்கும் அடுக்காவாறு, வணிகனை நோக்கி, 'ஐய, நீ யாரை, எங்குளை, எங்குச் செல்கின்றனை, ஈண்டுப் போந்தது யாது கருதி?' என்று வினவ, வணிகன், 'அமைச்சர் பெரும, சின்னாள் முன்பு தம்பால் மணிச்செப்பினை யீந்து சென்ற வணிகன் யானே; என் பெயர் பத்திரமித்திரன் என்பது தாம் அறிவீரே; யான் அச்செப்பினைப் பெறுவான் இன்று வந்தேன், திருவுளங் கொள்க' என்று வணங்கிக் கூறினன். அவ்வுரையைக் கேட்ட அமைச்சன் அதனை யறியான் போன்று, 'நீ "செப்பு" என்று செப் பினையே, அஃதியாது; அதனைச் செப்புதி' என்றான். வணிகன், 'அண்ணலே, மறவி யறியாத தாமும் மறந்தீர் போலும்!' என்றான். மந்திரி, 'நன்று, நானோ மறதி யுடையேன்? நீயே மயக்குணர் வுடையை; யான், நின்னை என்றுங் கண்டிலேன். நீ என்பால் தந்த தற்குச் சான்று உண்டாயின், காட்டுதி' என்று கடிந்து கூறினன். அவற்றைக் கேட்ட வணிகன், 'அமைச்சே, நீர் என்னை அறியீரோ! ஓர்ந்து நோக்கும். நீர், அன்று யாரும் இல்லாத அற்றங் கண்டு செப்பினைத் தருமாறு செப்பினீர்; யானும் அவ்வாறே தந்தேனாகலின் சான்று வேறு ஏது? அறிவீர், நீர்க்கோல வாழ்வை நெடிதென நம்பி, மாயவாழ்க்கையில் மனங்கொள்ளுதல் நுமக்குத்

தகாது. வாய்மை சிதைத்து, வஞ்சனை செய்து, பிறன் பொருள் வெஃகிய பீடிலாதோர், பழியும் படரும் படைப்பர். தாம் இதனை அறியீரோ!

பிறன்பொருள் வைத்தல் கோடல் பிறர்தமக் கீதல் மாற்றல்
மறம்என அன்று சொன்ன வாய்மொழி மறந்திட் டீரோ!

சத்தியகோஷன் என்னுஞ் சிறப்புப்பெயர் வாய்ந்த தாமே தகாதன கூறுவீராயின், மற்றையோர் யாதுதான் இழையார்! எனது செப்பினை வெஃகியதே யன்றி என்னையும் பித்தனாக்கிப் பிதற்றுகின்றீர். இது நுமக்குத் தகாது, தகாது' என்று சாற்றினான்.

வணிகன் கூறிய வன்சொற்களால் உள்ளம் வெதும்பிய மந்திரக்கிழவன் சினம் பொங்க எழுந்து, இளையரைக் கூவி, வணிகனைப் பொன்றப் புடைத்துப் புறத்திடுமாறு பணித்தான். அவரும் அவனை யடித்துப் புறத்திட்டனர். வணிகன் உள்ளம் மாழ்கி, கண்ணீர் வடித்து மறுகிடைத் திரிந்து, மாந்தர் கேட்ப அரற்றுவான்: 'அந்தோ! கொடுமை! கொடுமை!! சாதியால் மிக்க வேதியனாகிய சத்தியகோடனை, வாய்மையன் எனவும் தூய்மையன் எனவுந் தேறி, யான் எனது அருமணிச் செப்பினை அவன்பால் ஈந்தேன். அவன் அதனை வவ்விக்கொண்டதே யன்றி, என்னையும் பித்தன் என்று பேசுகின்றான். இவ்வூரில், சான்றோர் இலரோ! மன்னவன் வழக்கினைக் கேட்டு முறைசெய்யானோ!' என்று பூசலிட்டுத் திரிந்துகொண் டிருந்தான்.

இவ்வாறாக, தன் குற்றம் காணுதல் இல்லாத கண்ணேபோலத் தான் செய்த குற்றத்தை யுணராத சத்தியகோஷன், வணிகனது அருமணிச் செப்பினைக்

கைக்கொண்டதே யன்றி, அவன் மனையிலுள்ள பொருள்களையும் வவ்வி வருமாறு காவலரை ஏவினான். அவரும் அங்ஙனமே செய்து, அவனையும் கடிந்தோட்டினர். அதனால், தன் மணிகளையே யன்றி வளனையும் இழந்த நாய்கன், பைம்மணிக் கிரங்கிய பாம்பு படத்தையும் இழந்தது போன்று அலமந்து, கேட்டோ ரிரங்கும் வண்ணம் தன் அவலங்களைக் கூறி அரற்றிப் பெரும் பூச விடுவானாயினான்.

நாய்கனது அரற்றலைக் கேட்ட சீயசேனன், தன் அமைச்சனை விளித்து, 'இவன் அரற்றுவது எவன்?' என, அவன், 'அரசே, இவ னொரு பித்தன்போல் காண்கின்றான். இவனை யான் என்றுங் கண்டிலேன். அங்ஙனமாகவும், மணிச்செப்பினைத் தருமாறு என்பால் வினவியதே யன்றி, என்னைக் கள்வன் என்று கடிநகர் முழுதுங் கழறுகின்றான்.

'களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்'

என்னும் அறவுரையை அகங்கொண் டொழுகுவேன் யானே கரவு காண்பேனாயின், பின்னை யாவர்தாம் கட்காதவ ராவர்!' என்று கடுஞ்சூளுரைத்தான். பின்னும், 'அரசே, பிறன்பொருட்கண் செல்லும் வேட்கை யுள்ளமே களவெனப்படும். அஃது, இயல்புகளவு எனவும், காரணக்களவு எனவும் இருவகைத்தாகும். இயல்பாய களவினர், யாண்டும் நற்செயலை நாடார்; கொள்வன நிறையக் கொண்டு கொடுப்பன குறையக் கொடுப்பர். அவர், பொருள்களின்மேல் கடும்பற்றுள்ள முடைய ராவர். காரணக்களவினர், மீன் சென்ற நெறியைப்

போலத் தாஞ் சென்ற நெறியைப் பிற ரறியாவாறு கானெறியிலும் சுருங்கை வழியிலுஞ் சென்று, கைப் படை கொண்டு களவுநூலின்படி களவு காண்பர். கள வினை யுடையோருக்கு, அக் களவு,

பொருளினைப் போக்கும் சீர்த்தி தன்னெடு புகழைப் போக்கும்
அருளினைப் போக்கும் சுற்றந் தன்னெடு மாயு போக்கும்
பெருமையைப் போக்கும் பேறு தன்னெடு பிறப்பைப்போக்கும்
திருவினைப் போக்கும் தேற்றந் தன்னெடு சிறப்பைப் போக்கும்.

அங்கத்தைக் களைந்து வீழ்க்கும் அருஞ்சிறைப் பிணியை யாக்கும்
வெங்கயத் தடியின் வீழ்க்கும் வெந்நுனைக் கழுவி னேற்றித்
தொங்குவித் தொழியுக் தூண்டிற் றூலினை யுரிக்கப் பண்ணும்
கொங்கலர் தாரோய் பின்னும் கண்ணினைக் குடையப் பண்ணும்.

விழுந்தெழு நரகத் துய்க்கும் வெருவுறு விலங்கி லாக்கும்
அழிந்ததீக் குலத்தி லுய்க்கும் அட்டுண வகத்து ளாக்கும்
இழிந்ததஞ் சுற்றத் தார்க்கும் பிச்சையு மிடாமற் காக்கும்
கழிந்தகோ யுடம்பை யாக்கும் தாயருங் கடியப் பண்ணும்.

ஆகலின், களவு காண்போர் இருமையும் இழந்து இட ருறுவர். அத்தகைய தீச்செயலைச் சிந்தையிலுங் கொள் வேனே!' என்று விநயமாக விளம்பினன். மந்திரியின் மாற்றத்தை வாய்மை எனத் தேறிய மன்னன், வணி கனைப் பித்தன் என்றே துணிந்து, அவன தரற்றலைச் செவிக்கொள்ளா தொழிந்தான். அதனை யறிந்த நாய் கன், ' அந்தோ! அரையனும் அமைச்சன் சொற்களால் வஞ்சிப்புண்டான்! அமைச்சன், 'மனம் வேறு சொல் வேறு மன்னுதொழில் வே'ரு யிருத்தலை யாரும் அறிய கில்லாராயினர்! என் செய்வேன் !!' என்று, மறுகு தோறும் அரற்றித் திரிந்தான். பின்னர், அமைச்சனை யண்மி,

'சிறகமை பறவை பேர்ப்பான் உடம்பெலாஞ் செடியின் மூடிப்
பறவையைச் சிமிழ்ப்பின் வாங்கும் பாவியைப் போல நீயும்
மறையவன் அறிவன் என்னும் மாயத்து மறைந்து நின்றென்
பெறலரு மணியைக் கொண்டாய்' என்றவன் பேசி ஞனே

அவ்வுரைகளைக்கேட்ட அமைச்சன் உள்ளம் வெதும்பிக் கடுஞ்சினங்கொண்டு இளைஞரைக் கூவி, 'இவன் மேல், படுமத யானைவிட்டும், பாசத்தின் நாயை விட்டும், கடிநகரினின்று கடிந்து ஓட்டுக' என்று கட்டளையிட்டான். ஏவலர் அவ்வாறே இழைத்தலும், வணிகன் அதற்கஞ்சியோடி, அரையன் கோயிலை யடுத்ததொரு நெடுமரத் தேறி நின்றான்.

பின்னர், நாடோறுங் காலையில் அவ் வுயர்மரனேறி, உம்பரினின்று, உரத்துக்கூறி அரற்றுவாயினன்:

'ஓ, சத்தியகோடனே, உனக்கு இப்பெயர் எதிர் மறையிலக்கணையாக இட்டனர் போலும்! கொடியோய், நீ வேதம் ஓதிய வேதியன் எனவும், அறநெறி நிற்கும் அமைச்சன் எனவும், வாய்மையே கூறும் மாண்பினன் எனவும், தீத்தொழில் சேராச் செவ்வியன் எனவுந் தேறி, யான், நின்பால் அடைக்கலமாக வைத்த அரு மணிச் செப்பினை மாயஞ் செய்து வவ்வினையே! வெற்றி வேந்தனை போன்று வீறுடன் வாழுஞ் செல்வ, நீ, என் மணிகளை வவ்வுதற்கு வறியனும் அல்லையே! மறவேந்தரிடத்து வஞ்சனைசெய்து, அவர் களிறும் பிறவும் வவ்வுதல் அமைச்சருக்கு அமைந்த அறநெறியாதலேயன்றி, தம்மைத் தேறி, அடைக்கலமாக வைத்த அரும்பொருள் வவ்வுதல் அறனுமோ! மந்திரம் வல்லவர் மந்திரத்

தானும் பூதியானும் பேயினைத் தீர்ப்பர் என்று உலகோர் உரைப்பர்; மந்திரமுடைய பூதியே, நீ நின்பால் வந்த ஆசைப்பேயை யகற்றின யல்லையே! குலமும் குடியும் நீர்மையும் சீர்மையும் உடையவனாகியும் என் பொருளை மாயத்தால் வவ்விக்கொண்டனை. இவ்வுண்மையை மன்னவன் தேறுவானாயின், நின் சிறப்பும் செல்வமும் என்னாகும்!

மறம்பழி சிறுமை நிந்தை வந்தெய்த மணியை வவ்வின்
அறம்புகழ் பெருமை சீர்த்தி அறிவொடு செறிவி லாக்கும்
மறந்துவைத் தூறு தொட்டு வைப்பினை வவ்வு வாரைத்
துறந்திடுந் திருவென் றோதுஞ் சுருதியும் விருத்த மாய்த்தோ”

என்று இவ்வாறு கூறும் நாய்கன் கூற்றை இறைவன் செவியேற்காது விடுத்தான். ஆயினும், ஒவ்வொரு நாளும் உரை மாறாதே ஒருதன்மைத்தாக அரற்றுஞ் சொற்களை ஆராய்ந்தறிந்த கோத்தேவி, நாய்கனை வருவித்து, நிகழ்ந்தன கேட்டு நெஞ்சம் மாழ்கி, அவனை நோக்கி, ‘நீ சென்று, இனியும் முன்போலவே முறையிட்டுக்கொண் டிரு’ என்று கூறி விடுத்து, அரசனை யணுகிக் கூறுவாள்:

‘அரசர் பெரும, குடிகளின் குறைகளைக் கேட்டு முறைசெய்த லன்றோ அரசருக் குரிய அறமாகும்! ஈண்டு, நாடோறுங் காலைப்பொழுதில் முறையிடுவோனது குறைபாட்டைக் கேட்டுங் கேளாமே விடுத்தல் என்னோ!’ என்று வினவினள். வினவலும், வேந்தன், ‘மங்கையே, மரன்மீ தேறி முறையிடுபவன் பித்தனொருவன்காண்; அவன்மாற்றத்தைக் கேட்டுச் செய்யத்தக்க தொன்றில்லை’ என்றான். அவ்வுரை கேட்ட

அரசி, 'வேந்தே, தாங்கள் கருதியவாறு அவன் பித்த னல்லன்; பித்தனுயின், முன்பின் முரணின்றி, என் றும் ஒரே தன்மைத்தாக இயம்ப வல்லனே! அவன் முறையீட்டை ஆராய்தல் வேண்டும்' என, வேந்தன், 'ஆயின், நீயே அவனுரைகளை ஆராய்ந்து முறைமை காணுதி' என்றான். உடனே கோத்தேவி, 'யான் அமைச்சனது வஞ்சகச் செயலை நன்கு தெளிவிப்பேன்; அமைச்சனேடு யான் கவறாடுதற்குக் கட்டளை தருதல் வேண்டும்' என்று வேண்டினள். காவலன், 'நீ வேண் டிற்றெல்லாம் இசைந்தேன், விரும்பியன செய்து உண்மை காணுதி' என்று பணித்தான்.

பின்னர் அரசி, அரசனாணைப்படியே அமைச்சனை யழைத்து, சிறிது போழ்து அசதியாடி, 'கவறாடலில் என்னோடொப்பார் எவரும் இலர்' என்றாள். எனலும், அரசன் அமைச்சனை நோக்க, அவன், 'ஆ, அழ கிது!' என்றான். அவ்வளவில் அரசி, நாயகனை நோக்கி, 'வேந்தே, யான் ஓர் ஆட்டத்திலேயே அமைச்சனை உடைப்பேன்' என்றாள். அமைச்சன், 'அண்ணலே, தாம் அருள்வீராயின், பொருதற்குப் பூட்டும் போழ்தே யான் வெல்வேன்' என்றான். அரசன், ஆயின், 'இருவருஞ் சூது பொருவீராக' என்று பணித்து, அரசிபால் அமர்ந்தான்.

அவரிருவருஞ் சூது பொருவுழி, அரசி வெற்றி பெற்று, அமைச்சனது முப்புரிநூலினையும், அவன் பெயர் பொறித்த ஆழியினையுங் கைக்கொண்டாள். அதனால், அமைச்சன் வெய்துயிர்த்து, மயிலொடு பொருது தோற்ற வாளரிபோல மாழ்கிக் கையற்று நின்றான்.

அரசி, முந்நூலும் மோதிரமும் கைக்கொண்டு உட்புக்கு, அரசனுக்குச் செவிலியாகிய நிபுணமதியை விளித்து, அவற்றை அவள்கையிற் கொடுத்து, அமைச்சனகத்திற் போந்து அருமணிச் செப்பினை வாங்கி வருமாறு சூழ்ச்சி சொல்லி விடுத்தாள். அவளும் அவ்வாறே சென்று அமைச்சனது அணிமனைப் புக்கு, ஆண்டுப் பண்டகாரியை விளித்து வேறுகொண்டு கூறுவாளாயினள்: 'அன்னே, மறைமொழி சில கூறுவல், உளங்கொள்வாயாக. அரசரும் அரசியும் நம் அமைச்சரை நோக்கி, "பத்திரமித்திரன் நித்தமும் இடும் பூசல், பழியும் பாவமும் விளைக்குமாகலின், அவன் செப்பு நின்பால் உண்டெனின் கொடுத்தி" என்று ஆணையிடுதலும், அமைச்சர், "தமக்கு வரும் பழியை விலக்குதல் வித்தகர்க்கும் அரிதாகும். ஆகலின், என்கண் தோன்றிய இப்பழியும் பரவை சூழ் உலகமெல்லாம் படர்வதொன்றாயிற்று; இனி, யான் என்செயக் கடவேன்! வணிகன் என்பால் வைத்த மணிச்செப்பினை மறந்து, அவன் கேட்புழி, 'இல்லை' என்று இயம்பி விட்டேன். பின்னர், நெடும்பொழுது நினைத்தேனாக, அது நினைவிற்கு வந்தது. ஆயினும், பின்பு அதனைக் கொடுப்பேனாயின், என் பேரும் புகழும் பிழைக்கும் என்று எண்ணி, என் வினைப்பயன் விளைவினால் அஃது இல்லையென்றே சாதிக்கலாயினேன். இனி, தேவரீர் திருவுளக் குறிப்பின்வழி நிற்கக்கடவேன்" என்றார். அரசர், "நினக்குப் பழி வாராது யான் காப்பேன். நீ அம் மணிச்செப்பினை என்கைத் தருதி; யான் அதனை வணிகன்கை யீந்து, தன் பித்துத்தன்மையை முனிவர

ளொருவன் தீர்த்தான் என்று உலகத்தாருக் குரைக்கு மாறு செய்து, நின் கரவு வெளிப்படாது காப்பேன்" என்றாராக, அமைச்சர், "இது நன்று" என்று உடம் பட்டுத் தமது மார்பினூலும் அங்கிதவாழியும் என் கைத் தந்து, இவற்றை நின்கண் ஈந்து மணிச்செப்பு வாங்கி வருமாறு என்னை விடுத்தார். இவைகாண், அவர் தந்தவை. இவற்றை மறையெனப் பேணு' என்று கூறி, நூலும் ஆழியும் பண்டகாரி கைக் கொடுத்து; மணிச்செப்பு வாங்கித் துணைவின் திரும்பி மீண்டனள்.

செவிலியின் வரவு கண்ட கோத்தேவி, 'கொண்டு வரும்' என்றிருந்தவ ளாகலின், அவள் குறிப்பறிந்து முகமலர்ந்து, 'நிகழ்ந்தது யாது?' என வினவ, செவிலி, மணிச் செப்பினைத் தேவி கைக் கொடுத்து, நிகழ்ந்தன நிகழ்த்தினள். செப்புக் கண்ட தேவி, உளமுவந்து வியந்து, செவிலியை நோக்கி, 'அன்னாய், நீ, மந்தித்த நோக்கத்தால் இம் மண்ணெல்லாம் வணக்க வல்லை; அத்தகைய நீ, சிந்தித்துச் செய்வாயாயின் தேவரும் பிழைத்தல் இல்லை. வஞ்சகர்க்கு முதல்வ னாகிய மந்திரி வைத்த மணிச்செப்பினை எளிதிற் கொணர்ந்தனை. அன்னே, நீ எமன் கைக்கொண்ட உயிரையும் மீட்ட வல்லை! நிபுணமதி என்னும் அரும் பெயர் நினக்கே தகும். இவ்வுதவிக்கு யான் என் செய்ய வல்லேன்' என்று இன்னுரை கூறி, ஆங்கு நின் றகன்று, அரசனைச் சார்ந்து செப்புக் காட்டலும், வேந்தன் வியப்புற்று, தேவியின் செயலை உளங் கொண் டுவந்து, 'ஆ, ஆ! என் செங்கோற்றிறன்

என்னே! இக்கள்வனை அமைச்சாகக் கொண்ட எனது காவல்மாட்சியே மாட்சி!' என்று மாழ்கி, மணிச்செப்பினை வாங்கி, அதனுள் அருவிலை மணிகள் சிலவற்றை யுடன்வைத்துப் பொறியிட்டுக்கொண்டு, வணிகனை வருவித்தான். அவனும் அரசன்முன் சென்று இறைஞ்சி நிற்ப, அரசன் அவன்முன்னர்ச் செப்புக்கள் பலவற்றை வைத்து, 'இவற்றுள் நின் செப்பு உளதேல் கொள்ளுதி' என்றான். வணிகன் ஒவ்வொன்றனையும் உற்றுநோக்கித் தன்னதை வேறு தெரிந்து கைக்கொண்டு நோக்கி, 'வேந்தே, இச்செப்பு என்னதே; ஆயினும் இப்பொறி என்னதன்று; வித்தகரெவரோ இட்டுள்ளனர்' என்று விளம்பினான். வணிகன்திறனைக் கண்ட மன்னவன், 'இவனைப் பித்தன் என்று கூறி விடுத்த யானே பித்தன்! என்னால், நாட்டவர் அடைந்த கேட்டிற்கு யான் என் செய்வேன்!' என்று பெரிது மிரங்கி, வணிகனை நோக்கி, 'நின் செப்புத் திறந்து மணிகளை நோக்கிக்கொள்' எனலும், வணிகன் அவ்வாறே மணிகளை நோக்கி, 'மன்னர் பெரும, என் மணிகளோடு அருவிலை மணிகள் பல வுள்ளன' என்று பகர்ந்தான். வணிகனது வாய்மையைக் கேட்ட மன்னன், 'அருமணிகளை நின்மணிகளோடு வைத்து நினக்குத் தருபவர் யாவருளர்? ஒருவரும் இங்ஙனம் உதவார். மணிகளைக் கண்டதும் கண்கள் குறி தவறின காண்' என்றான். வணிகன் வணங்கி, 'அரசர்பெரும, என் மணிகளின் இயல்பினை யான் அறிகிலேனாயின், என்னைப் பித்தன் என்றவர் பிழைத்ததெவன்! அறிவுடையோன் தான் செய்யும் வினையிற் கருத்தூன்றாது

செய்வானல்லன். என் மணிகளை வேறு தெரிந்து எடுத்துக் காட்டுவல்' என்று இசைத்து, உயர்ந்தோன், தன்னியல்பினை யுட்கொண்டு பிறவற்றைக் கைவிடுதல் போலத் தன் மணிகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, பிறவற்றைப் பிரித்துவைத்தான். அதனைக் கண்ட அரையன், 'அறிவோய், அமைச்சன் தா னாற்றிய குற்றத்தின்பொருட்டு இம்மணிகளை நினக்குத் தந்துளான். ஆகலின், இவற்றையும் நீ எடுத்துக்கொள்ளக் கடவாய்' என்றான்.

வேந்தன் பணித்ததைக் கேட்ட பத்திரமித்திரன் வணங்கி, 'பெரும, பிறன்பொருள் வெஃகிக் கைக் கொண்டு, மின்னினுங் கடிதின் வீயும் யாக்கையையும் ஒக்கலையும் ஓம்பின், எஞ்ஞான்றும் பழியும் பாவமும் நின்று நிலவும். அன்றியும்,

தானத்திற் குரித்தும் அன்று தன்கிளைக் கீயிற் சால
ஈனத்து ளுய்க்கும் நிற்கு மெச்சத்தை இழக்கப் பண்ணும்
மானத்தை அழிக்கும் துய்க்கின் மற்றவர்க் கடிமை யாக்கும்
ஊனத்து நரகத் துய்க்கும் பிறன்பொருள் உவக்கின் வேந்தே!

பேறு இழவு இன்பம் துன்பம் பிணி பகை என்னும் இவ்வாறும் ஒருவற்குக் கருவிலேயே அமைந்தன அல்லாமல், இடையே வருதல் இல்லை. ஆகலின், என் வினை மாறாய் நின்றதே யன்றி மந்திரி செய்தது ஒன்றில்லை' என்று அறிவுரை கூறினன். வணிகனது வாய்மையைக் கேட்ட மன்னவன் வியப்புற்று, தேவியை நோக்கி, 'இவ்வணிகன், வையகம் பெறினும் பொய்யாத வாக்கினன்; உய்யுமருந் தென்றாலும் பிறர் பொருளுக்கு உள்ளம் வைக்கிலன். இவன், தருமம்

நீதி சமநிலை தயை ஒழுக்கம் இவையனைத்தும் ஓர் உருக்கொண்டு உதித்தவ னுவன்' என்று உரைத்தான். அவற்றைக் கேட்டலும் அரசி உவகை நிறைந்த உள்ளத்த ளாயினள். வேந்தன், வணிகனுக்கு 'ராஜ ஸ்ரேஷ்டி' என்னுஞ் சிறப்புப்பெயரை யருளி, மணியும் பொன்னும் தோன்றும் நிலன்களையும், மாடங் களையுடையதொரு பெரியவீட்டையும், மணிகளைக் குயின்ற பொற்பணிகளையும், உயர்ந்த துகிலையும் பிற வற்றையும் நல்கித் தேற்றி, விடைகொடுத்து விடுத் தான். வணிகனைக் கண்ட மாந்தர் அவன்றிறலை வியந்து, 'ஊக்கமும் அறிவும் உடையவர், தாம் தொடங் கிய தொழிலிற்கு இடுக்கண் எத்தனை இடையுறினும், அவற்றான் இடையில் முரிந்துவிடாராய், தொழில் முற்றி வெற்றி பெறுவர் என்பது உண்மையே. இதற்கு இவனே கரி' என்று புகழ்ந்தனர். வணிகனும் மந்திரி யால் வவ்வப்பட்ட பிறபொருள்களையும் பெற்றுத் தன் மனைப்புக்கு அரசனையும் அரசியையும் வாழ்த்தி வாழ்ந் திருந்தான்.

பின்னர் வேந்தன், அமைச்சனது செயலை அகங் கொண்டு, 'களிறு போகும் வழியினைக் குழித்துப் பொய்த்தரை செய்து அதனை வீழ்த்திப் பிடிக்கும் புலையனைப்போல, சத்தியகோடன் என்னுஞ் சடத் தால் என்னைத் தேற்றி வஞ்சித்து வளம்பல வவ்வினன் இவன்!' என்று வெகுண்டு, அறிஞரை விளித்து, 'இவனுக்கு நூன்முறையின்படி செயத்தக்க தண்டங் கூறுமின்' என்றான். அவரும் ஆய்ந்து, 'அரசே, இவன் படைத்துள்ள பொருள்களெல்லாங் கவர்ந்து

கொண்டு, சவட்டையினுல் முப்பது அடி அடித்து, மூன்று தாலத்துச் சாணகநீரைத் தலைமேல் ஊற்றி, இவனை நகரினின்றுங் கடிந்துவிடுத்தலே முறைமை' என்றனர். அரசனும் அவ்வாறே கட்டளையிட்டான்.

உடனே, காவலர் சூழ்ந்து அவன் பொருள்களெல்லாவற்றையும் கைக்கொண்டு மீண்டனர். மான் கன்று, சிங்கவேற்றை வருத்துதல்போல, மல்லர் அண்மிச் சத்தியகோடனைச் சவட்டையால் தாக்கினர். புலையர், அவன் தலையின்மேல் சாணகந் தீற்றிப் 'புறத்தே போக' எனச் சூழ்ந்தனர். அவன்சுற்றத்தார் கருங் கடலில் கலங்கவிழ்ந்த நாய்கர் போன்று கடுந்துயரெய்தினர்.

இச்செயலைக் கண்ட நகரமாந்தர், 'ஆ, முற்பகலில் தேவன் என்று புகழப்பட்டவன் பிற்பகலிற் பேயன் என்று இகழப்பட்டான்! வணிகன்செப்பினை மாயத்தால் வவ்வி, அவனைப் பித்தன் என்று அலமர விடுத்தானுகலின், இவன், இப்பொழுது தன் பொருளெல்லாமிழந்து, தானும் பித்தனேபோற் சுழன்று, பெருந்துயரெய்தினுன். "களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண், வீயா விழுமந் தரும்" என்பது மெய்ம்மையன்றே! இனியேனும், உலகோர் கரவொழுக்கந் துறந்து, பற்றினைப் பற்றற்று, நன்னெறிக்கட் செல்லார்கொல்!

மோகமேபிற விக்குநல் வித்தது
மோகமேவினை தன்னை முடிப்பது
மோகமேமுடி வைக்கெட நிற்பது
மோகமேபகை முன்னை யுயிர்க்கெலாம்.

மோக மேதிரி யக்கிடை யுய்ப்பது
மோக மேநர கத்தில் விழுப்பது
மோக மேமற மாவது முற்றவும்
மோக மேயற மாசுற நிற்பது.

அவாவே என்றும் நிறைதலில்லாத அளவினது; அவாவே இடையூற்றை ஆக்குவது. அவாவற்றவரே துயரற்றவர்; அவாவற்றவரே அறநெறியாளர்; அவாவற்றவரே அழியா இன்பமும் அடைகுவர்' என்று பலவாறு இயம்பினர்.

கிளையும் பொருளும் இன்பமுங் கெட, நகரினின்று நீங்கிய சத்தியகோடன், அதனால் இடர்க்கடற் படிந்தான். அவனுக்கு ஒரு நொடியும் ஓர் யுகம்போலத் தோன்றிற்று; மாடமும் வளமும் மனைவியுங் கிளையும் இழந்து வருந்துதலின், மன்னன் மீது வைரம் உண்டாயிற்று. அவன், 'என் மனையையும் வளனையும் அடைவது எஞ்ஞான்று!' என்று எண்ணி எண்ணி இளைத்தான். இவ்வாறாக, அவன் வாணாள் குறைந்தது. குறையவே, விளக்கு வீந்துழி இருள் எய்துதல் போல, அவன் மக்கட்பிறவி நீங்க, வாளரவாகத் தோன்றினான்; தோன்றி, முன்னைய எண்ணத்தால், மன்னவனது பொருளறை வாயிற் புக்குக்கிடந்தான். பொருள் மேற் சென்ற எண்ணத்தால் மறுமையிலும் பொருளறை வாயிலிற் கிடக்கநேர்ந்தது! அவாவின் கொடுமை என்னே! நிற்க.

சீயசேனன், தன் அமைச்சனதியல்பினை எண்ணி எண்ணி அகம் நொந்து வருந்தினான்; அமைச்சன் களவின் தீங்கினைக் குறித்துத் தன்பாற் கூறியவற்றை

நினைந்து நினைந்து நெடிதுயிர்த்தான்; 'களவின் பயனைப் பலவாறு எடுத்துக்கூறிய சத்தியகோடனே இத்தகைய னாயின், இவ்வுலகத்தில் யாவர்தாம் தேறுதற்குரியவர்!' என்று திகைத்தான். பின்னர், நன்காராய்ந்து நாடி, தமிலன் என்னும் மறையவனை அமைச்ச னாக்கித் தானும் நாடோறும் நாடி முறைசெய்து வந்தான்.

இவ்வாறாக ஒருநாள், பத்திரமித்திரன், வாடா மலர்கள் செறிந்து மணங் கமழ்ந் திலங்கும் அதிங்க வனத்தை யடைந்து, ஆங்கு விமலகாந்தாரம் என்னும் விலங்கலையேறி, ஆண்டு அருந்தவம் புரிந்த வரதர்மன் என்னும் அருந்தவ னடியினை இறைஞ்சி ஏத்தி, வினைகள் தீருமாறு அருள்புரிய வேண்டினான். முனிவன் முகமலர்ந்து நோக்கி, 'அன்ப, கேட்பாயாக: மக்கட்கு அருளும் அறிவும் உண்டியும் உறையுளும் ஈதலும், இறைவனடிகளை இறைஞ்சுதலும், இருளறத் தெளிதலும், சீலத்தினின் றொழுகுதலும் ஆகிய இவை பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தாகும். இவற்றுள் அருளீதலாவது, நோன்பு நோற்றலும், எல்லா வுயிர்க்கும் நன்மை செய்தலும், அவை வருந்துதல் கண்டுழி வெந்தீயிட்ட வெண்ணெய் போன்று உள்ளம் உருகி உதவுதலும், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தலும், கதழ்ந்தெழு சினத்தைக் காத்தலும் ஆகும். அறிவீதலாவது, மூடத்தை நீக்கி மெய்ம்மையை விளக்கும் மெய்ந்நூலை விளங்க வுணர்த்துதலாம். உண்டியீதலாவது, அற்றா ரழிபசி தீர அருத்துதலாம். இஃது எல்லாவற்றினுஞ் சிறந்த அறமாகும். "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" என்பர் உரவோர். அன்றி

யும், உயிர்கட்கு உண்டி யொன்றுமட்டும் உதவியோர், உடம்பு உணர்வு ஒழுக்கம் காட்சி உவகை இன்பம் வாணாள் வீரம் வீடு விடங்கு தருமம் மாதவம் சீலம் முதலிய அனைத்தும் அருளினோ ராவர். உண்டி ஈயுழி, ஊனும் கள்ளும் தேனும் இன்றி, நல்லுண வீதலே அறனாகும். அதுவும், உதவப்பட்டாரை நோக்கின் மூவகையதாகும். ஊனுண்போனுக்கு உதவும் உண்டியினால் அவன் உயிர்களை யோம்பின், அதனால் வரும் பயன் மலையினும் பெரிதாகும்; அவ்வாறின்றி, அவன் உயிர்களை உடற்றுவானாயின் அதனால் நரகத்துன்பம் நண்ணும். ஆகலின், அவர்களுக்கு உண்டி யுதவுதல் நன்றும் ஆகும்; அன்றும் ஆகும். பிணியாளர் அறவோர் பெரியோர் வறியோர் முடவர் குருடர் மூங்கையர் கொலைநினையார் முதலியோருக்கு வழங்குதல் மத்திம தானம் ஆகும். ஒழுக்கத்தில் நின்று, உள்ளம் பொறிவழி செல்லாது காத்து, வாய்மையை மேற்கொண்டு, உயிர்களுக்கு ஊறெண்ணாது நல்லன ஆற்றி, வீட்டினை விழைந்து மாதவம் புரிவோர்க்கு வழங்குதல் உத்தமதானம் என்று உரைக்கப்படும்.

> "உதவி வரைத்தன் றுதவி உதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து"

என்பது மறைமொழியே என்று உளங் கொள்வாயாக. இன்னுங் கேட்டி, இறைவனையும் குருவினையும் நூலினையும் குற்றமறத் தெளிதலே நற்காட்சி யாகும். இறைவனை யுள்ளத்தில் நிறுத்தி நினைக்கின், கனலி, பொன்னொடு கூடிய காளத்தைப் போக்குதல் போல, அது, வினைகளை வேரறுக்கும். கொலை பொய்மை களவு பிறர்

பொருள்விழைவு புலாலுண்ணல் முதலியவற்றை நீக்கி யொழுகுதல் இல்லறத்தோருக்கு நல்லற ஞகும். இதனை உளங்கொண்டு ஒழுகுவாய்' என்று அருள் புரிந்தார்.

வணிகன், அறவோர் அருளிய அறவுரையால் ஞாயிறு கண்ட தாமரைமலர்போல் அகமலர்ந்து, அவ ரடிகளில் இறைஞ்சி ஏத்தி அருள் பெற்றுச் சீயமா புரத்தைச் சேர்ந்தான்.

4. பூரண சந்திரன் அரசியல்

முனிவர்மொழியை உளங்கொண்டு மனையை அடைந்த வாணிகன், விரதம் மேற்கொள்ள விழைந்து, தன் பொருள்களை வறியவருக்கு வழங்கினான். அதனை அறிந்த அவனன்னை அகமழுங்கி, அவனை நோக்கி, 'மைந்தனே, அரும்பொருளை அழித்தல் நலனன்று. பொருளில்லாருக்குப் புகழில்லை, பூணில்லை; உண்டியில்லை, உடையில்லை; அறிவில்லை, அறனில்லை; இன்பம் இல்லை, இருமையும் இல்லை. அன்றியும்,

> "இல்லாரை யெல்லாரும் எள்ளுவர் செல்வரை
> எல்லாருஞ் செய்வர் சிறப்பு"

பொருளின் அருமையை நீ அறியாது அழிக்கின்றனை.

> "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லைப் பொருள்"

என்பதை யுளங்கொண்டு பேணி வாழுதி. கைப்பொருளுடையார்க்குக் கல்வியும் அறிவும் குலமும் குடிப்பிறப்பும் வடிவும் பிறவும் வந்துசேரும். கைப்பொருளில்லானை மனையாளும் மதியாள்; ஈன்ற தாயும் இகழ்வாள்' என்று அறிவுறுத்தினாள்.

அன்னையின் மாற்றம் அகங்கொள்ளாத வணிகன், தன் கைப்பொருள் முழுதும் வறியவருக்கு வழங்கினான். அதனை யறிந்த அன்னை, மனம் மாழ்கி, மைந்தன் மீது வெறுப்புற்று, அவனை மாய்த்தற்கான சூழ்ச்சியை எண்ணிக்கொண் டிருந்தாள். புதல்வன் பொருள்கள் வழங்குதலின் உண்டாய கவலையானும், அவன்மாட் டுண்டாய வெறுப்பானும் முதியவள் உடல் நீத்து,

அதிங்க வனத்தில் ஒரு வேங்கைக்குருளையாய்த் தோன்றினாள்.

சுமித்திரை, தன் மைந்தன்மாட் டுண்டாய வேரத்தால் வேங்கையாய்த் தோன்றி வனத்தில் வதியுநாளில், ஒருநாள், பத்திரமித்திரன் தன் மனைவியரோடு அவ் வனம்புக்குச் சோலை சூழ்ந்த குன்றத்தில் குலாவித் திரிந்தான். திரிவுழி, ஆண்டு வேங்கையொன்று கிடக்கக் கண்டு மீண்டான். அவ்வளவில், அது கடும்பசியாற் பாய்ந்து அவன்மேல் வீழ்ந்து வீழ்த்தியது. அந்தோ, வைரத்தின் கொடுமை என்னே! தன்சொற் கேளாத மைந்தனை மாய்க்க எண்ணியவாற்றான், மறு பிறப்பில் வரிப்புலியாகி மாய்க்க நேர்ந்தது! கருத்தினுற் கருதிற் றெல்லாம் இல்லை யென்னு தீந்த கற்பகம்போன்றவனை வேரங்கொண்ட அன்னை வேங்கையாகி வீழ்த்தினு ளாயின், இவ்வுலகில் உறவாவார் யாவர்!

பத்திரமித்திரன், தன் வழக்கின் உண்மை கண்டு முறை செலுத்திய கோத்தேவியை வாழ்த்தி, அவளது பண்பினை நாளும் உளங்கொண்டு வாழ்ந்துவந்தானுகலின், அவன், வேங்கையால் வீழ்ந்த பின்னர், அத் தேவியின் திருவயிற்றைச் சேர்ந்தான். தேவி வயிறு வாய்த்து வாய் வெளுத்து உடல் பசந்து ஒருபான் திங்களும் பொறுத்து, நன்னுளில் புதல்வனைப் பயந்தாள்.

அரசன் அதனைக் கேட்டு, வறியவர்க்கு விழுநிதி நல்கி, மைந்தற்குச் சீயசந்திரன் என்னும் பெயரை வழங்கி மகிழ்வுற்றான். மைந்தனும் பிறைபோல வளர்ந்து, தக்க பருவத்தில் கல்வி கற்று, சிலை நவின்று, படைக்கலம் பயின்று, இளமைப்பருவத்தை எய்தி

ஞன். அக்காலத்தில், அரசன் அவனுக்கு மணம் புரிவித்து வாழ்வித்தான்.

பின்னர்ச் சின்னாளில், பெருந்தேவி வயிறு வாய்த்து, மற்றுமொரு மைந்தனைப் பெற்றாள். அரசன் அவனுக்குப் **பூரண சந்திரன்** என்னும் பெயரை வழங்கினான். அவனும் வளர்ந்து, கலை பல பயின்று களிப்புற் றிருந்தான். அரசனும் அரசியும் மைந்தர் வளனைக் கண்டு மகிழ்ந்திருந்தனர்.

அரசன், தன் குடிகளின் இன்ப துன்பங்களைத் தன்னவாகக் கருதிச் செங்கோல் செலுத்தி வரு நாளில் ஒருநாள், தன் பொருளறையைக் காணச் சென்றான். ஆண்டுக் கிடந்த அரவம் அரசனைக் கண்டதும் முன்னைய வேரத்தால் முனிவுடன் தீண்டிற்று. தீண்டலும், வெய்யவன் அரவொடு நிலத்தில் வீழ்தல்போல, மன்னவன் விடத்தால் நிலத்திற் சாய்ந்தான். அதனைக் கண்ட சுற்றத்தார் கடலுடைந்தாற்போலக் 'கல்' என் றரற்றிச் சூழ்ந்து வீழ்ந்தனர். மைந்த ரிருவரும் மயங்கி நின்றனர். தேவி இராமதத்தை மலையின்மேல் மயில் வீழ்ந்ததுபோல அரசன்மேல் வீழ்ந்து அழுது அரற்றினள்.

அப்பொழுது கருட தண்டன் என்பா னொருவன் அவணெய்தி மந்திர மோதிக்கொண் டிருந்தான். அவ்வளவில் வேந்தனுயிரும் நீங்கிற்று. பின்னர் அவன் கடுந்தழல் மூட்டி நெய்யால் வளர்த்து, மற்றொரு மறையினால் அரவங்களை யழைத்து, அவற்றை நோக்கி, 'குற்றமில்லாதவர்க்கு இந் நெருப்புக் குளிர்ந்திருக்கும்; மற்றையோர்க்கு வடவைபோற் கனலும். ஆகலின்,

குற்றமில்லாதோர் இதனைக் குறுகி நடுவண் இறங்கிச் செல்லலாம்!' என, அரவங்களெல்லாம் அழலிலூர்ந்து அகன்றன; அகந்தனன் என்னும் அரவமே அரையனைத் தீண்டியதாகலின், அஃது அழல்வாய்ப்பட் டெரிந்தது. பின்னர் அது, காளம் என்னும் வனத்தில், கவரிமானகத் தோன்றிற்று. அரசன் சல்லகீ வனத்தில் களிருகப் பிறந்தான். இது நிற்க.

அரசன்மேல் வீழ்ந்து அழுது புலம்பிய கோத் தேவியைச் சேடியர் எடுத்துத் தெருட்டுவார், 'அன்னய், உலகத்தில் தோன்றிய உயிர்கள் மாய்வது புதுவதன்று; வையகந் தோன்றிய அன்றே தொடங்கியது காண்!

செல்வ முஞ்சில நாளிடை யேகெடும்
அல்லல் என்றும் உருதவ ரும்மிலை
மல்லை வென்ற புயத்தெழின் மன்னவர்
எல்லை யில்லையிம் மண்ணில் இறந்தவர்.

இப்பிறவியில், இறந்தவருக்கு இரங்கி நாம் அழுது மாயின், இதன்முன் நாம் பிறந்த பிறவிகளிலும் இறந்த சுற்றத்தாரை யெண்ணி அழவேண்டாவோ! அதனை நினைக்கின், இறந்தோரை எண்ணுதல் இயலாதே! நாம், யாருக்கென்று இரங்கி யழுதும்! அன்றியும் அழுதலால் வரும் பயன் யாது?' என்று அறவுரை கூறித் தெளிவித்தனர். சிறிது தேறிய தேவி, மைந்தரை நோக்கி மாழ்கினளாக, அவரும் அன்னையின் அடிகளில் வீழ்ந்து இரங்கினர். தேவி, சிறுவரைத் தேற்றித் துயரத்தை மாற்றினள்.

பின்னர்ப் பெருந்தேவி, முதற்புதல்வனை அரச னாக்கி முடி சூட்டி, இளவலை இளவரசாக்கி இன்புறுத்தி வாழுநாட்களில், சீயசேனன் துஞ்சிய செய்தியைச் சாந்திமதி, இரணியமதி என்னும் நோன்பியர் இருவர் கேட்டு, உள்ளம் இளைத்து, தேவியைக் காணச் சென்ற னர். சென்றவர், தேவியைக்கண்டு, 'அம்மா, வருந்ாதிர். நீர் மங்கலமிழந்தது எம்மனோர் பாவமே. இதனைக் கருதி இரங்கிக் கண்ணீர் வடித்துக் கதறினும் வேந்தன் வெளிப்படுதல் இலன். அன்றியும், ஆர்வத்தினால் அரற்றுவமாயின் நெஞ்சம் ஆர்த்தத்தை யடையும். அதனால், பின்றை விலங்கிடைத் தோன்றி இடும்பை யடைந்து, நிரயம் புகவும் நேரும். ஆகவின், சோகந் துறந்து, இப் பெறற்கரும் பிறவியா லாய பேற்றைப் பெறுதற்கு முயறலே பெற்றியாகும். நீயிர் நுமது ஆற் றற்குத் தக்க விரதமும் சீலமும் மேற்கொண்டு, உள்ளத்தில் உவர்ப்பும் வெறுப்பும் ஒன்றி, உறுதிக்கண் உழப்பீராக' என்று நல்லுரை நவின்றனர்.

துறந்தோர் கூறிய அருஞ்சொற்களை உளங் கொண்ட இராமதத்தை தவத்தை விரும்பி, வேந்தனா யிருக்கும் மைந்தனை விளித்து, அவற்குத் தன் கருத் தினைத் தெரித்து, 'இளையுஞ் செல்வமும் குமிழிபோல் மாயும். ஆகலின், நீயும் திருவறம் மறவாதை' என அறிவுறுத்தி, தவத்திற்குச் சேறலாயினள். அதனை யறிந்த மைந்தன், முடியும் கடகமுஞ் சிந்த, உருமுண்ட அரவம்போல விழுந்து கிடந்தான்; பின்னர், பரிசனம் தேற்றத் தேறி, 'அடிகள், நீயிர் எம்மைத் துறத்தற்கு அடியனேன் பிழைத்த தியாது?' என்ன, 'நீவிர் பிழைத்

தது சிறிதும் இல்லை. யான் தவமேற்கொள்ள விழைவுற்றேன். இதுவே யன்றிப் பிறிதின்று' என்று தன் உள்ளக் கருத்தை உணர்த்தினாள். அரசனும் அன்னையின் துறவிற்கு உடம்பட்டான்.

பின்னர், இராமதத்தை துறந்தோர்சூழ லடைய அவர் கருங்குழல் வாங்கினர்; பானிற அறுவை போர்த்தனர். இராமதத்தை, ஆண்டுத் தவச்செயல் தாங்கினாள். சீயசந்திரன் அவ ரடிகளி லிறைஞ்சி, பிண்டி வேந்தற்குப் பெரும்பொருள் நல்கிச் சிறப்புச் செய்து மீண்டு, தன்னகரைச் சார்ந்தான். தாயைப் பிரிந்த சீயசந்திரன் மனைவாழ்க்கையில் உவர்ப்புக்கொண்டு, பிரிவினாற் பெரிதும் பீழையுற்றான். இப்பிறவியிலேயே யன்றி முற்பிறவியிலும் அவள்செய்த நன்றியை உளங்கொண்டவனாகலின், அவள் பிரிவிற்குப் பெரிதும் இரங்குவானாயினான். இத்தன்மை கருதி யன்றே,

> "எழுமை யெழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
> விழுமந் துடைத்தவர் நட்பு"

என்று முதுநூலும் மொழிந்தது.

சீயசந்திரன் இவ்வாறு துயர்கூர்ந் திருக்கையில் ஒருநாள், பூரணசந்திரன் என்னும் முனிவன் அவன்பால் அணுகினான். அணுகுதலும், அரசன் இறைஞ்சி, அடிகளில் அலர்தூவி, தேவியர் மங்கலம் ஏந்த உட்கொடு சென்று, கலசநீரால் கழலிணை கழுவி, சாந்தும் மாலையுஞ் சார்த்தி, நால்வகை யுணவும் நல்கினான். அவ்வளவில் அமரரும் அவணெய்திச் சிறப்புச்செய்தனர்.

பின்னர், மன்னவன் மாதவனை வாழ்த்தி, 'பிறப்பிற்கு முடிவுண்டுகொல்?' என்று வினவ, மாதவன்,

'மன்னவ, தவத்தைச் செய்தோர்க்கே பிறப்புக் கெடுவ தாகும்.

"யான்என தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்."

பிறருக்கு வினைத்தொடர் பெயர்தல் இல்லை' என்றான். எனலும் அரசன், 'இதுகாறும் யான் எனது என்னும் இருவகைப்பற்றினாலும் நாற்கதியிலும் அலமந்து கலிவுற்றேன். இன்பத்தினெழுந்த அவாவினைத் தணிக்கலாம் என்று பின்னும் இன்பம் நுகர்தல், நெருப்பினை நெய்யான் அவிப்பவன் நினைவினை நிகர்க்கும். என்னை,

"கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமும் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனில் நெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவ தின்ப மாகுமோ!"

68057

இன்னும் தவத்தினை மறப்பேனேல், பிறப்பினைப் பெருக்கினேனாவேன்' என்று எண்ணி, தன் இளவலாகிய பூரணசந்திரனை விளித்து, 'துணைவ, முன்செய்த நல்வினையானே இம்மையில் இன்பந் துய்க்கின்றேம் என்பதை எண்ணின், இனியும் தவம்புரிதற்குத் தாழ்த்தலாகாது என்பது தானே போதருமன்றே! யான் இசைப்பதை உளங்கொள்வாயாக. தானமும் சீலமும் தாங்கித் திருந்திய உள்ளத்தராய் வாழும் அரசரைத் திருமகள் நீங்குதலிலள். அவர்க்குப் புகழும் சீர்த்தியும் போகிப் பரவும்; பகைவரும் அவரைப் பணிந்தொழுகுவர். இவ்வாறன்றி, வேட்கை வெகுளி வெஞ்சொல் முதலியனவுடைய வேந்தரைத் திருமகள் தீர்வள்; அவ

ரது மாட்சியும் மாயும். சூழ்ச்சி முயற்சி அமைச்சு முதலியன அரசர்செல்வத்தை வளர்க்கும்.

“இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ.”

இவற்றை மறவாமல் ஒழுகுதி’ என்று அரசியல் முறை கூறி யறிவுறுத்தி, அவனை அரசனுக்கி யமர்த்தி, நகர்நீங்கி, பூரணசந்திர முனிவரைச் சார்ந்து, தவத்தை மேற்கொண்டு, பணமணியும் தோலும் நஞ்சும் பரிந்த பாம்புபோல, மணிமுடியும் ஆடையும் குஞ்சியும் மனமாசும் நீக்கி, சீலம் மேற்கொண்டு, அருள்செறிந்து, உசாவுதலுடையனாய்த் தவத்தில் நின்றான்.

சீயசந்திர முனிவன் இவ்வாறு தவந்தாங்கி, உணவினைத் தேசகாலங்களில் அளவுபடுத்தி யுண்டு, நாச் சுவை தவிர்த்து, உவத்தல் காய்தல் இன்றி ஒரு தன்மைப்பட்ட உள்ளத்தனாய், வேனிலில் வெயிற்கண் நின்றும், மாரியில் மரன்முதல் மருவியும், கடும்பனியில் கடற்புறஞ் சார்ந்தும், நற்காட்சி நல்லொழுக்கம் நல்லுணர்வு ஆகியவற்றைப் பேணி, தவத்திற் சிறந்து, சின்னாளில் வானாறு செல்லுஞ் சாரணர் நிலையை யடைந்தான்.

இவன்செயல் இவ்வாறாக, அரசு தாங்கிய பூரணசந்திரன், மகளிரின்பத்தில் மயல் மிக்கு, அரசியலினும் அறநெறியினும் உள்ளஞ் செல்லானாய், காதற்கடலில் மூழ்கியிருந்தான். அதனை யறிந்த இராமதத்தை, அவன் மாட் டிரங்கி அவனை யணுகி, ‘அரச, உருவும் அழகும்

ஒளியும் புகழும் வெற்றியும் திறலும் பொருளும் இன்பமும் அறத்தினு லாவனவே யாகும். அறஞ் செய்யாதாருக்கு, விண்மிசை யின்பமும் வேந்தர் செல்வமும் இயைதல் என்றும் இல்லைக்காண். வித்தின்றி முளையும், மழையின்றிப் புனலும் உறுதல் உண்டோ! இப்பொழுது நீயடைந்துள்ள செல்வம், முன்செய்த அறத்தினுன் ஆயது. இனி, அறச்செயல் புரிகிலையாயின், மறுமையில் வறுமையே வரும். என் உரையை உள்ளங்கொள். வேந்தே, நீ இன்பக்கடலிற் றிளைத்து, அறமும் தவமும் மறந்தனை ; இது தக்கதன்று. களிறும் அசுணமும் வண்டும் சேலும் பதங்கமும் ஆயவை புலன்களா லடையுந் துன்பத்தை உளங்கொள்ளுதி ; இனியேனும் அறச்செயல் புரிதி' என்று அறிவுறுத்தினுள். மாதவியாகிய மாதாவின் வார்த்தையை மன்னவன் மனங்கொள்ளானுய், ஆங்குநின் றகன்றுன்.

மன்னவன் செயலைக் கண்டு உள்ளமாழ்கிய தவத்தினள் சீயசந்திர முனிவனை யடைந்து வணங்கி, நிகழ்ந்தன பகர்ந்து, 'பூரணசந்திரன் இறைவ னறத்தின் உய்வானே ; அன்றி, புலங்களை யோம்பி வீவானே? நிகழ்வது யாதோ, அறிகிலேன் ; தாமே அருள் செயல் வேண்டும்' என்று வேண்டினுள். அவள் கவற்சியை யறிந்த சீயசந்திர முனிவன் அவளை நோக்கி, 'நீ கவலற்க, புரவன் அறத்தைப் புரிவான். யான் கூறுங் கதை யொன்றனைக் கேட்டு, அதனை அவனுக்கு அறிவிப்பாயாக' என்று கூறுவானுயினுன்.

5. மன்னன் முதலிய நால்வரும் துறக்கம் புக்கது

'வாசநின் றருத சோலை மழையென மதுக்கள் பெய்து
மூசுதேன் முழங்க மஞ்சை முகிலென அகவி முத்தின்
தூசுலா மலங்க லார்போல் தொடங்கிய நடங்க ளோவாக்
கோசலை என்ப துண்டிக் குவலயம் புகழும் நாடே.'

அந்நாட்டின்கண் மறையவ ருறையும் மூதூரில் **மிருகாயணன்** என்னும் வேதியன், **மதுரை** என்னும் மடவரலோடு கூடி வாழும் நாட்களில், அவர்களுக்குப் பெண்மக வொன்று பிறந்தது. அம்மகவிற்கு வாருணி எனப் பெயரிட்டு, அதனைச் சீராட்டி அன்புடன் வளர்த்து வந்தனர். சின்னாட்களில், கமலமுங் குவளை யுங் கூம்பக் கதிரவன் மாய்தல்போல, மதுரையும் வாருணியும் வாட, மறையவன் மாய்ந்தான்.

மாய்ந்த மறையவன், அயோத்தியை ஆளும் **அதிபலன்** என்னும் அரசன் தேவி **சுமதி** வயிற்றிற் பெண்மகவாகிப் பிறந்தான். அவர்கள் அம்மகவிற்கு இரணியவதி என்னும் பெயரையிட்டு,அதனை மாண்புற வளர்த்தனர்.அதுவும் அழகின் கொழுந்து வளர்வதென வளர்ந்து, இளமைப்பருவத்தை எய்திற்று. அக்காலத் தில், அதிபலன் தன் மகளை, சுரமை நாட்டில் போதன புரத்துப் புரவலனாகிய பூரணசந்திரனுக்கு மணம் புரிவித்தான். மதுரை யென்னும் பார்ப்பனி, தன் கணவன்மேல் வைத்த காதலால் இரணியவதியின் திருவயிற்றில் ஒரு புதல்வியாய்த் தோன்றினாள். அவள் காண் நீ; பத்திரமித்தின் என்னும் வணிகன், நின்பால் வைத்த அன்பினாலும், வரதன்ம முனியின் அருளி

னாலும் நினக்கு மகனாய்த் தோன்றினான். அவனே யான். வாருணி என்னும் மறையவன் நினக்கு இளங் குமாரனாகப் பிறந்தனன். ஆகலின், நீ அவன் மாட்டுக் கழிபெருங்காதலை யாயினை. என்னே வினையின் திறன்! அது, வேண்டும் உருவில் நம்மைத் தருகின்றது! அந் தணனை அரையன்மக ளாக்கி, மனைவியை மகளாக்கி, மகளை மைந்தனாக்கி, வணிகனை அரசனாக்கி வேறுபாடு விளைத்த வினையின் திறனை அறிவார் யாவர்!

இன்னுங் கேட்டி: நின் தந்தையாகிய பூரண சந்தி ரன் என்னும் புரவலன், பத்திரபாகு என்னும் முனி வனை யடைந்து தவச்செயல் தாங்கித் தானும் முனிவ னாயினான். அவன்காண், எனக்கு அறிவு கொளுத்திய குரவன். நின் தாயாகிய இரணியவதி, சாந்தமதி என் னும் ஆர்யாங்கனையை அடைந்து தவத்தினளாயினள். அரசனாகிய சீயசேனன் சல்லகீ வனத்தில் அசனி கோடம் என்னும் பெயருடைய கைம்மாவாய்த் தோன்றி யிருந்தான். ஒருநாள் யான் அவ்வனத்தில் ஒரு பொருப்பின் சாரலிற் போந்தேனாக, அஃது என்னைக் கண்டதும் கதத்திற் கதழ்ந்தோடி வந்தது. உடனே யான், வானு றெழுந்தேன். எழுதலும், ஒன்றுஞ் செய்தற்கின்றி, என்னை மேனோக்கி வெகுண்டு பார்க்க, யான், அதனை நோக்கி, 'சீயமாபுரத்து வேந்தனாகிய சீயமாசேன, நீ தீவினைவயத்தால் இக் கானகத்தில் களிறுயினை; இன்னும் யாதாவான் கருதி இவ்வாறு வெகுள்கின்றனை! அந்தோ! உன்னை வேந்தனாகக் கண்ட யான், வேழமாகவும் கண்டேன். இன்னும் இத்தகைய தீச்செயலை விழையாதி. யான், நினக்குப் புதல்வனாகிய

சீயசந்திரன்காண். இப் பிறவியை அஞ்சிச் சினவறம் மேற்கொண்டு தவம் புரிகின்றேன்' என்று சாற்றினேன். யான் கூறியவற்றைக் கேட்டலும் உணர்வு தோன்ற, தனது விலங்குப்பிறவியை எண்ணிக் கவன்று கையற்று நிலத்தில் வீழ்ந்தான். பின்னர்த் தேறி, நிறைதவன்போல நிற்ப, யான் அறவுரை கூறுவேனாகி,

"யாக்கையுங் கிளையும் ஆதி யாவையும் நின்ற இல்லை
வீக்கிய வினையின் துன்பம் விலக்கலா மரணும் இல்லை
தீக்கதி நான்கிற் சார்ந்து செல்வுழித் துணையும் இல்லை
நீக்கருங் குணங்க ளல்லால் நின்றதான் இல்லை யன்றே."

நாம், இவ்வுலகத்தில் பிறவாத இடமும் இல்லை; உண்ணாத பொருளும் இல்லை. பிறவிகள், வினைவயத்தால் தொடர்ந்து வருவன வாகும். முதல்வன்மொழியின் படி நின்றால், நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் இவை உண்டாகும். அவற்றால் வினைகள் வரும் வழியெல்லாம் அடைபட, வீடு பெறுதல் கூடும். உயிர்களுக்கு நால்வகைக் கதியிலும் நலிவு உண்டு. என்னையெனின், விலங்குகளுக்கு வெருவுதற் றுன்பமும், நரகர்களுக்கு எழுந்து கீழ்விழுதற் றுன்பமும், மக்கட்கு ஓக்கலோம்பற் றுன்பமும், வானவர்க்கு அந்நிலைமை வழுத்தரற் றுன்பமும் இயல்பாகும். அன்றியும், உள்ளத்திற் றோன்றுந் துன்பமும், உடற்கண் நேருந் துன்பமும், இடையே நேரும் இடையூறும் யாவர்க்கும் உண்டு. ஆகலின், அறத்தைக் கடைப்பிடித்து ஒழுகுதலே அழிவில்லா இன்பத்தை யாக்கும் என்பதை அறிவாயாக' என்று அறைந்தேன்.

யான் இயம்பியன கேட்ட மால்யானை வணங்கி, மாதவன்போல நோன்பினை மேற்கொண்டு, பிறவுயிர்களைப் பேணி ஓம்பி, தன் உடலம் நையினும் விரதம் நையாவாறு நல்லொழுக்கத்தி னின்றது. வேழம் அவ்வாறு விரதமேற்கொண்டு இன்ப துன்பங்களை ஒருதன்மையவாகக் கருதி நுகர்ந்து, பக்ஷோபவாஸம் மாஸோபவாஸம் என்னும் நோன்பினை நோற்று முற்றியபின், மற்றை யானைகள் தின்றொழித்த தழையும் புல்லும் பாரணையாக உண்டு, இவ்வாறு பல காலங்கள் போக்கி, பின்னர் ஒரு நாள் யூபகேசரி என்னும் நதியை நணுகிற்று; ஆண்டு, ஒரு திங்கள் நோற்று, வரையைப் பிழிந்தாற்போல உடலம் வற்றவே, யாற்றைக் குறுகி நீருளிறங்கிக் கைநீட்டுதலும், கால்கள் சேற்றிற் புதைந்து, பெயர வியலாவாறு நின்றது.

முன்னர், அரவினீங்கிக் கவரிமானாகப் பிறந்த அமைச்சன், அவ்வுருவும் நீங்கப்பெற்று, கோழிப்பாம்பாய்ப் பிறந்திருந்தவன், வேழவேந்தனைக் கண்டதும் முன்னைய வேரத்தால் விரைந்தோடிச் சினங்கொண்டு நெற்றியிற் கதுவுதலும், மலையிற் படியும் மஞ்சுபோல, உடலெங்கும் நஞ்சுபரவ, வேழம் அதற்குத் தளராது, மாதவ னடிகளைத் தலைமிசைக்கொண்டு பஞ்சமந்திரத்தைச் சிந்தை செய்து, அவ்வுடலம் நீங்கப்பெற்று, ஸஹஸ்ரார கல்பம் என்னுந் தேவருலகை யடைந்தது.

ஆண்டு, சீயசேனன் ஒரு முகுழ்த்தத்துள் அமர வடிவம் அமையப் பெற்றுச், சீதரன் என்னும் பெயருடன் விளங்கினன். அவ்வளவில், முடியும் ஆரமும்

குண்டலமும் குழையும் தோடும் பூணும் கடகமும் கழலும் கலாபமும் நூலும் இயல்பில் அமைந்தன. அவனுருவம் ஒளியினை உமிழ்ந்து இலகுவதாயிற்று. அப்பொழுது கற்பகமரங்கள் மலர்களை ஊழ்த்தன; முரசம் முழங்கின; இளந்தென்றல் அசைந்தது. அமர மகளிர் வேரியுந் தாதும் ஏந்த, அமரர் ஆங்கண் அடைந்து வணங்கினர்.

அப்பொழுது சீதரன் நாற்றிசையும் நோக்கி, 'இவ்விடம் யாண்டையது; இவர்கள் யாவர்; யான் யாவனேன்' என்று எண்ணும்பொழுது, அறிவு தோன்ற, தன் வரலாற்றை யுணர்ந்தான். அவன் திருமுன்னர், வானவர்மகளிர் பாடினர்; அரம்பையர் ஆடினர்; துந்துபி முழங்கின. அப்பொழுது வானவர் அவனை யணுகி வணங்கி, 'தேவரீருக்குத் திருவும் ஆயுளும் உலகுள்ளளவுஞ் செல்க' என்று வாழ்த்தி, 'பெரும, தாம் திருமஞ்சனங் கண்டருளி, இறைவனை வழுத்தி, அஞ்சொலார் பாடும் இன்னிசை கேட்டு, பின்னர் இன்பம் நுகர்வீராக' என்று வேண்டுதலும், அவ்வாறே நீராடி இறைவனை வணங்கி,

"அரணடைந்த வெங்கானத் தானையாய் நின்றுன்
சரணடைந்தேன் இன்றிந்தச் சாசார ணுல்
கரணமெலாம் வென்றுன்னைக் கண்டவர்கள் காம
மரணமிலா வீடெய்தல் மற்றோர் பொருளோ!"

என்று பாடிப் பரசி, ஏத்தி இறைஞ்சினன். பின்னர், ஆண்டைய வானவர்மகளிரை மருவி இன்புற்றிருந்தான்.

இவணிலைமை இவ்வாருக, முன்னர்ச் சத்திய கோடனுக்கு அமைச்சுத்தொழிலி லமர்ந்த தமிலன் என்னும் மறையவன், அவ்வுடல் விடுத்தபின், சல்லகீ வனத்தில் வானரவடிவில் தோன்றி, ஆண்டு வதிந்திருந் தான். வானரம் முன்னேயபற்றினுல் வேழவேந்தன் மேல் விருப்பினதா யிருந்ததாகலின், அவனே யழித்த அரவினுயிரை உடனே போக்கிற்று. அதனுல், உயி ரிழந்த உரகம், நிரயம்புக்கு எண்ணற்கும் அரிய கொடுந் துன்ப மடைந்து உழந்தது. இது நிற்க.

கோழிப்பாம்பினுல் கொலேயுண்ட வேழத்தினுட லம், திங்களோடு மங்குலும் வீழ்ந்தது போலக் கீழே கிடப்பக் கண்ட வேடனெருவன், அதன் மருப்பினேயும் அவற்றிலிருந்த முத்தினேயும் எடுத்துச் சென்று தன மித்தன் என்னும் வணிகனுக் கீந்து, தான் விழைந்தன பெற்று மீண்டான். வணிகன் அவற்றை அரசனுகிய பூரணசந்திரனுக்குக் கொடுத்து, அவனுல் அருஞ் சிறப்புப் பெற்றுன்.

மத்தயானேயின் மருப்பும் முத்தும் கைக்கொண்ட மன்னவன், அம் மருப்புக்களே நான்கு கால்களாகக் கடைந்து மஞ்சஞ் சமைத்து, மணியும் பவழமும் பதி த்து, புனேவன புனேந்து, அதன்கண் அமளியி லேறி, அம் முத்தமாலே யணிந்து, அரிவையர் சூழ இனிதிருக் கின்றுன். இவ்வரலாற்றை அவனுக்கு அறிவிப்பை யாயின், அவன் அன்றே அறப்பய னுணர்ந்து தவத்திற் றலேநிற்பான்' என்று இயம்பினுன்.

முனிவன் மொழிந்தவற்றைக் கருத்திற் கொண்ட இராமதத்தை அவனே வணங்கி, அவணின் றகன்று

நகரம் நண்ணி, அரசனுகிய தன்மைந்தனை யணுகி, காதல் பெருகக் கழறுவாளாயினுள் : 'வேந்தே, யான் விளம்புவதைச் சிறிது கேட்பாயாக. நின் தாதை, இரு நிலக் கிழவனுய் இறைமை பூண்டும் புலன்மேற் சென்ற வேட்கையால் விலங்காகத் தோன்றிக் கடுங்கா னுறைந் தான். பின்னர், அறவுரை கேட்டுப் புலனை வெறுத்து விரதம் புரிந்து துறக்கந் துன்னியுள்ளான். ஸ்ரீபூதி என்னும் அமைச்சன், அவாவினுல் அரவாகிப் பின்னர்க் கவரியாகி, அதன்பின், கோழிப்பாம்பாகத் தோன்றிக் கொலைத்தொழில் புரிந்து, நரகிடைக் கிடந்து நலிவுறு கின்ருன். இவற்றைச் சீயசந்திர முனிவர் செப்பத் தெரிந்தேன். இளையோய், நீயும் இப் பிறவிப்பிணியின் வெருவுதி யாயின், செற்றமும் பற்றும் நீக்கி, திருவறம் பயில்தி' என்று தெளிவித்தாள்.

இராமதத்தை இசைத்த இன்சொற்களால் இருள் நீங்க, உணர்வோங்குதலும், பூரணசந்திரன் தாதைபால் வைத்த காதலால், தான் விரும்பிப் பெற்ற வேழமருப் பினையும், மருப்பின் தாளத்தையும் நெருப்பிலிட் டெரித் தான். பின்னர் மகளிர்பால் வைத்த மயக்கினுகுந் துன் பத்தை எண்ணி, அதனை விடுத்து, புலன்களைக் காத்து, படிறும் பற்றும் களிப்புஞ் செற்றமும் மாற்றி, சீலம் பயின்று, உள்ளம் உரை செயல் மூன்றும் ஒன்றுபட முதல்வன் கழல்களை வழுத்தி வாழ்த்திச் சென்னிக் கணிந்து, தானமுந் தவமும் தாங்கி, தத்துவம் பயின்ருன்.

மைந்தன் மாதவம் மேற்கொள்ளக்கண்ட இராம தத்தை யுள்ளமுவந்து, அவனைக்கைவிடாதுநின்று நோற்

றுத் தன்னுடலம் விடுத்து, மஹா சுக்ர கல்பம் என்னுந் தேவருலகமடைந்து, பாஸ்கரப்பிரபை என்னும் விமானத்தில் பாஸ்கரப்பிரபன் என்னும் தேவனாய்த் தோன்றி, வானவ ரிறைஞ்ச வாழ்ந்திருந்தான். ஆண்டு, மின்னுடங் கிடையினார் தம் மேகலை யோசையும், சிலம் போசையும், நரம்போசையும், கீதவோசையும், இன்சொல்லோசையும் உள்ளங்கவர, பாஸ்கரப்பிரபன் பன்னெடுங் காலம் இன்பம் நுகர்வா னாயினான். பூரணசந்திரனும் அப்பிறப்பினை யொழித்து, இராமதத்தை வாழும் இமையவருலகத்திலேயே, வைடூரியப் பிரபையில் வைடூரியப் பிரபனாகி, அரம்பைமார்தம் ஆடல்பாடல்களில் மயங்கி, மாடமுஞ் சோலையும் மலையும் வாவியும் உலவி, உவந்திருந்தான்.

இவர் வரலாறு இவ்வாறாக, சீயசந்திர முனிவன் தன் ஆற்றலுக் கேற்ப உணவும் நீருஞ் சுருக்கி, உள்ளம் உரை செயல் இம்மூன்றனையுஞ் செறித்து, அனைத்துயிருக்கும் அருளுடையனாகி, இன்பதுன்பங்களில் ஒத்த உள்ளத்தனாகி, தவத்தில் நிலைத்துத் தத்துவம் பயின்று கொண் டிருப்ப,

> "சுடச்சுடப் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
> சுடச்சுட நோற்கிற் பவர்க்கு."

என்றவாறு ஒளி துளும்பும் உருவத்த னானான். பின்னர், பஞ்ச மந்திரங்களை ஓதி, உடலை நீத்து, அகமிந்திருலகம் என்னும் உம்பருலகை யுற்று, பிரீதிங்கரம் என்னும் விமானத்தில் பிரீதிங்கரன் என்னும் அமரனாய் அமர்ந்திருந்தான். ஆண்டு வாழ்பவர், அறிவனை வணங்குத லல்லது, மகளிர்மாட்டு மாலுறாராகலின், துன்பமுங்

கவலையும் இல்லாராய், இடையறாத இன்பத்தராய் வாழ்ந்திருப்பர். அவ்வாறே சீயசந்திர முனிவனும் அழிவில்லா உருவத்தை யடைந்து, மாறாத இன்பத் தனைய் மகிழ்ந்திருந்தான்.

சீலமுந் தவமுஞ் செறிந்தனராகலின், சீயசேன னும் அவன்தேவியும் மக்கள் இருவரும் வானுல கடைந்து, இன்பக் கடலுள் திளைத்து வாழ்ந்தனர். தீச் செயலை மேற்கொண்டதனால் ஸ்ரீபூதி என்னும் அமைச் சன் நிரயத்திற் கடுந்துன்பம் உழந்தான். ஆகலின்,

"தீக்கதிச் செலவினை நீக்கிச் சிந்தையின்
நோக்கிலாப் பொருளையும் நோக்கி இன்பத்தை
வீக்கியிம் மாற்றினை நீக்கி வீட்டினை
ஆக்குநல் லறத்தினை அமர்ந்து செய்மினே."

6. மன்னனும் தேவியும் பூரணசந்திரனும் துறக்கம் புக்கது

தாரணேந்திர, வானுல கடைந்த மன்னனும் தேவியும் மைந்தரும் மீண்டும் வையத்தில் தோன்றித் துறக்கம் புக்கனர். அவ்வரலாற்றை அறிவிக்கின்றேன், கேட்பீராக: இராமதத்தை, பாஸ்கரப்பிரபன் என்னுந் தேவனுய்த் திகழ்ந்தாள் என்று மேலே கூறினே னன்றே! அத்தேவனுக்குத் தேவாயுள் கழியப் பதி னைந்து நாட்கள் இருக்குங் காலத்தில், அவன் அமர்ந்திரு ந்த மானத்தில் பாரிசாதம் நடுங்கிற்று. அதனைக் கண்ட வானவர் வாடினர். அவ்வளவில், தேவ னணிந்திருந்த கற்பகத்தொடையலும் பொற்பணிகளும் மாசுண்டன; மதியின்கலைகள் தேய்தல்போல அவனது உடலொளி மழுங்கியது. அதனைக்கண்டு, பாஸ்கரப்பிரபன் கவலை யுற்று வருந்தினன். அதுகாறும் அமரருருவில் தான் நுகர்வுற்ற இன்பமனைத்தும் காட்டுத்தீயாகி அடுதல் போன்ற துன்பத்தை யடைந்தான். அப் பதினைந்து நாட்களில் அவன் பட்ட பாடு பகருந் திறத்த தன்று. இன்பத்தின் நிலையாமை என்னே! சூகரவடிவில் தோன்றித் துன்பத்துழலும் உயிர்களும் அவ்வுடலம் விடுதற் காற்றுவாயின், வானவர்க்கிறையாய் இன்பந் துய்த்த வானவன் சோகமுந் துயருங் கோடற்குக் குறையுண்டோ!

கானெரி கவர்ந்த கற்பகம்போல வானவன் வாடி யிருப்பக் கண்ட வானவர், அவனை யணுகி, 'ஐய, நல்வினை புரிந்தோர் ஈண்டுப்போந்து இன்பம்நுகர்ந்து,

வினைப்பயன் தீர்வுழி வழுத்தரல் மரபுகாண். அறி வில்லாதாரே இவ்வாறு பிரிவினை யுன்னி யழுங்குவர்; உணர்வுடையோர் புணர்ந்தவை பிரியினும், புதியன அடையினும், அவற்றிற்குக் கவலையும் காதலும் அடையார். இறந்ததற் கிரங்கின் எய்துவ தியாதும் இல்லை; அது, பிறந்துழியெல்லாம் துன்பத்தைப் பிணிக்கும். ஆகலின், இரங்குதல் நன்றன்று என்று விடுத்தி; அறத்தை மேற்கொண்டு இறைவனடியை அடைதலே அழகிது ' என்றனர்.

அமரர் கூறிய அறவுரை யோர்ந்த தேவன் இறை வன்சிறப்பின் ஒன்றி யிருந்தான்; பின்னர், நாளுலந்த தும் வானினீங்கி வையத்தில் தோன்றினன். தோன்றி யது யாண்டோ எனின் சொல்வேன், கேட்பீராக:

நாவலந்தீவினுட் பரதத்தின் நடுவண், வேதண்ட வெற்பொன்று உளது. அஃது ஆறு கண்டங்களையும் அடிப்படுத்து, விண்ணவரும் விஞ்சையரும் தன்னைச் சூழ வோங்கி, பரதராஜன்போல் விளங்கிற்று. அம்மலையின் வெள்ளிச்சிமயத்து இரு மருங்கினும் வித்யாதரர் வாழும் நகரங்கள் உள்ளன.

அவ்வெற்பினிடத்து, மறுவில்லாத பளிங்கிற் பாயும் மரகதத்தின் கதிர்களை அறுகென்று செத்து இரலைகள் கறிக்கும்; நீலமணியாற் சமைத்த தலத் தைக் கண்டு கோதையர் குவளைவட்டமெனக் கருதிக் குறுவர். ஆங்கு, வேழத்தின்மதமும் விளைந்ததேறலும் வாழையின்கனியும் வறுக்கைச்சுளையும் அளாவி வீழும் அருவித்திரள், ஆழிபோல முழங்கும்; ஒள்ளிய பொன்

னும் ஒன்பான் மணிகளும் உள்ளூலாய்க் கிடத்தல், உம்பர்கோன் திருவில் உறங்குதலை யொக்கும்; கின்னரமிதுனத்தின் கீதத்தை யாய்ந்து, இன்னரம்பின் எழுந்த யாழொலியின்வழியே மின்கொடி போன்ற அரம்பையர் ஆடுவர். வெறிமலர்ப் பந்தருள் மெல்லணைச் செறிந்து விஞ்சையர் கூடி இன்புற்றிருப்பர். அப் பொருப்பின்கண், கள்ளுமிழ்ந் தலருங் கழுநீர்ச் சுனையும், புள்ளினம் ஒலிக்கும் பூந்தடம்பொய்கையும், உழவின்றியே விளைவுமிகுங் கழனிகளும் ஒவ்வொரு பாங்கர் ஒளி செய்யும்; கோங்கு வேங்கை குடசம் குருந்து சண்பகம் தண்பகம் தாழை வாழை புன்னை பாடலம் நன்னெடுநாகம் இன்னன பிறவும் இலங்கி யோங்கும்.

இத்தகைய பல்வளஞ் செறிந்த அம்மலையின் வடசாரியில் விஞ்சையர் நகரம் மிகப்பல உள. அதன் தென்சாரியில், தரணிதிலகம் என்னும் நகரஞ் சிறப்புற்றிருந்தது. அந்நகரின் மறுகுகளிலெங்கும், மைந்தரும் மகளிரும் மலிந்து அடியிடுதற்கும் இடம் பெறராய், 'எகுமின், எகுமின்' என்னும் ஒலியே நிறைந்திருக்கும். நரம்பின் ஓசையும், நாடகமாடும் அரம்பையரனையார் ஆடலின் ஓசையும், சுரும்பி னோசையும் சூதெறியோசையுங் கலந்து பரந்து கவ்வை செய்வன.

அந்நகரில் **அதிவேகன்** என்னும் அரசன், இலக்கணம் நிரம்பிய **சுலக்கணை** யென்னுந் தேவியோடு வாழ்ந்திருந்தான். முன்னர், பாஸ்கர மானத்தில், பாஸ்கரப்பிரபனு யிருந்த இராமதத்தாதேவி, சுலக்கணையின் வயிற்றிற் பெண்மகவாகப் பிறந்தாள். அம்

மகளுக்குச் சீதரை என்று பேரிட்டுச் செல்வமாக வளர்த்தனர். சீதரை இளமைப்பருவ மடைதலும், அதிவேகன் அவளை அளகாபுரிக்கு அரையனாகிய தருசகன் என்னுஞ் சதுரற்கு வதுவை செய்வித் தான். தருசகன், சீதரையோடு கூடி இன்புற்றிருக்குங் காலத்தில், வைடூரியப்பிரபன் என்னும் வானவனாகிய பூரணசந்திரன் சீதரையின் திருவயிற்றில் மகளாய்த் தோன்றினான். இராமதத்தை, பூரணசந்திரனைப் பின் னரும் மகவாகப் பெறல் வேண்டும் என்று பேணிய காதலால், இப்பிறவியில் அவனை மகளாகப் பெற்றனள். அம்மகளுக்கு யசோதரை என்னும் பெயரிட்டு, இன் புடன் வளர்த்தனர். அவளும் வளர்ந்து, பங்கயமலரின் பாவைபோலத் திருவுரு வெய்தினாள்.

அக்காலத்தில், பாஸ்கர புரத்தில் சூர்யாவர்த்தன் என்னும் அரசன், வானமும் வையமும் வணங்கும் விஞ் சைகள் பயின்று, முனிவ னடிகளை முன்னிய உளத்த னாய், நன்னெறியின் விலகாத நெறியினனாய், ஆற்றல் மூன்றனால் அரசரை யடக்கி, ஆட்சி செய்துவந்தான். அவன், யசோதரையின் உருவும் இயலும் அறிவும் செயலும் அறிந்து, வேட்கைமீதூர்ந்து, தருசகனை வேண்டி, அவளை வதுவை செய்து மகிழ்வுற்றிருந்தான். அந்நாளில், ஸஹஸ்ரார கல்பத்தில் ஸ்ரீதரனென்னுந் தேவனாய்த் திகழ்ந்திருந்த சீயசேனன், யசோதரையின் வயிற்றிற் புதல்வனாய்த் தோன்றினான். தருசகன் அவனுக்குக் கிரணவேகன் என்னும் பெயரிட்டு வளர்த் துக், கலையும் விஞ்சையும் பயில்வித்தான். அவனும் படைக்கலம் முதலியன பயின்று, அடையலர்க்கு அரி

யேறு போன்று விளங்கி, மடவரலாரை மருவி, இன்பக் கடலுள் திளைத்திருந்தான்.

இவ்வாறாக ஒருநாள், சூரியாவர்த்தன், தன் உள்ளத்தில் நிலையாமையை எண்ணி நெடிது நினைந்தான். 'களிற்றரசாயினும் கால்கள் அளற்றி லழுந்தின், ஆவ தியாது? அவ்வாறே, வினையின் வலியினால் வெந்துயரில் வீழின், நாம் யாது செய்ய வல்லேம்! மகளிர்மனத்தினுங் கடிதின் மாயும் உடம்பின்மீது உள்ளம் வைத்தல் உரவோர் செயலாமோ! ஆகலின், உறுதி பயத்தலை அறிதல் வேண்டும்' என்று எண்ணமிட்டு, அம் மலையினீங்கி, நிலத்தை யடைந்து, **முனிச்சந்திரன்** என்னும் முனிவரனைக் குறுகி, இணையடி யிறைஞ்சி எத்தி, வினைகளின் திறனை அருளுமாறு வேண்டினான். முனிவன், எண்வகைக் கருமங்களின் இயல்பும், பொறி புலன்களின் செயலும் புகன்றான். அவற்றைக் கேட்ட அரசன், இன்பநுகர்ச்சியை விடுத்துத் தவத்தை மேற்கொள்வானாயினான்.

அரசன் துறந்து போயபின், அவன்தேவி யசோதரை தன் அன்னையாகிய சீதரையுடன்கூடி, இருவரும் **குணவதி** என்னும் துறவியை யணுகி, நெறி நின்று, மயிர் நீக்கி அணிகளைப் போக்கி, உடலை வருத்தி, நோன்பினை மேற்கொண் டொழுகினர். இவ்வாறு, இவ ரிருவரும் உவத்தல் காய்தல் இன்றி, என்றும் ஒரு தன்மைத்தாய உள்ளத்தினரா யுறையுங் காலத்தில், கிரணவேகன், வேதண்ட மலையின் கீழ்த்திசையிலுள்ள **சித்தாயதனம்** என்னுங் கூடத்தைக் குறுகினான்.

அச்சிகரம், அடியில் இருபத்தைந்து காதம் அகன்று நீண்டது; உச்சியில் பன்னிரண்டரைக் காவத அகல நீளங்களை யுடையது. அதனைச் சூழ்ந்து இரண்டு சோலைகள் உள்ளன. அச்சோலைகட்குள் அமைந்திருந்த அறிவன்கோயிலின் நான்கு தெருக்களிலும் நான்கு கோபுரங்கள் விளங்காநிற்கும். அக்கோயிலின் முன்னர் மண்டபங்கள் துலங்கும். கோயிலில், வேதபுராணங் களின் வரலாறுகள் வரையப்பட்டிருக்கும்.

ஆடன்மாவில் இவர்ந்து சென்ற கிரணவேகன், அவ்வாலயத்தைக் காணுதலும், அதனினிழிந்து நடந்து சென்று, கோபுரங்களைக் கண்டு கும்பிட்டு, மலரை யேந்தி, அதனைச் சூழ்ந்து பலமுறை வலம்வந்து, அதனுட் போதரச் சேறலும், கதவங்கள் தாமே நீங்கி நின்றன. உள்ளே இறைவனுருவினைக் காணலும், கெடுகலங் கண்ட நாய்கன்போல் உள்ளங் கிளர்ந்தெழ, அடிமிசை யலர் தூய், படிமிசை வீழ்ந்து பணிந்தெழுந் தான். எழுந்தவன், நெறிமுறையின் அருச்சனை செய்து, 'பெரும, நீ அறிவினால் அறியப்படாத அறிவனாகலின், நின் குணங்களை அடியேன் எவ்வாறு அறிந்து வாழ்த்துவேன்! கடலில் வீழ்ந்தவன் கரை சேர்ந்ததுபோல, பிறவித்துன்பந் தொலைத்து நின் திருவடி சேர்ந்தேன். வேரிமலர்மேற் சென்ற வீர, அடியனேன் வினைதீர அருள்புரிய வேண்டுவேன்' என்று புகன்று, இறைஞ்சி ஏத்தி, வலஞ்செய்தான்.

பின்னர், அக்கோயிலுள் ஒருசார் விளங்கி நின்ற **அரிச்சந்திரன்** என்னும் முனிவரைக்கண்டு, அவரடிகளை வணங்கிப் படிமிசை வீழ்ந்து, எழுந்து நின்றான்.

முனிவர், கிரணவேகனை நோக்கி, 'வளன்கொல்?' என்ன, வேந்தன் மீண்டும் வணங்கி, 'எம்பெரும, பிறவிக்கும் வீட்டிற்கும் ஏதுவாயிருப்பவற்றைக் கூறி விளக்கி யருள வேண்டுகின்றேன்' என்றான்.

முனிவர், நித்தம், அநித்தம், அவாச்சியம், வேற்றுமை, ஒற்றுமை, சூன்யம் என்று கூறப்படும் அறுவகைத் தத்துவங்களின் இலக்கணங்களை இயம்பி, பின்னர், உண்மைவாதம் முதலியவற்றின் உண்மையையும் உரைத்து, 'அரசே கேட்டி: காட்சியும் அறிவும் விளங்க நல்லொழுக்கந் தாங்கி, ஐம்பொறிகளை வென்று, தியானமாகிய வாளால்வேட்கையை வேரற அறுத்து, வினைகளை வென்ற போழ்தே மூவுலகாட்சியும் கைகூடும்' என்று மொழிந்தார்.

மாதவர் கூறிய வாய்மையாகிய மணிவிளக்கு எறிப்ப மயக்கம் முதலிய இருள் இரிந்தது; அறிவும் காட்சியும் தோன்றின. உடனே அரசன், 'பொருளும் போகமும் நிலையில்லன; சுற்றமும் உறவும் துயரினை யாக்கும்; வானமும் நிலனும் பெறினும் நாலைந்து நாட்களுள் வேறாகும். ஆகலின், அடியனேன் யோகுசெய்து, வினைகளை வெல்வேன்' என்றான். முனிவர், அவனை நோக்கி, 'தவம் புரிதலே தக்கது' என்று கூறி, விடை கொடுத்து விடுத்தார்.

அரசன், முனிவர் அருளிய மொழிகளை மேற்கொண்டு, பற்றினைப் பற்றற ஒழித்தானாக, முன்னர் அவனால் ஆதரிக்கப் பெற்ற மாதரார் அங்கணத்தே யுமிழ்ந்த தம்பலம்போலாயினர். அவன் அணிந்திருந்த முடியும் தோடும் குழையும் பூணும் ஆரமும் தாமமும்

அருவிலைப்பட்டும் வென்றிமாலையும் விளங்குமங்கதமும் பிறவும் அவனால் வெறுக்கப் பட்டனவாகிச் சாயை யிழந்து வீழ்ந்தன. அரசன், நெறிந்து நீண்டு குழன்ற குஞ்சியை வாங்குவித்து, அறத்தின்வழியே முனிமை தாங்கித் தலைசிறந்து, செல்விற் செல்லுந் திறனும் படைத்தான். மருவிய கொள்கை விடாது மாதவரும் மருளச்செல்லுங் கிரணவேகன், காஞ்சனக் குகையைச் சார்ந்து, ஆங்குக் கரியிளவேறு போன்று காலங் கழித்திருந்தான்.

அந்நாளில், எரிமூழ்கினாற் போன்ற கொள்கை யைத் தாங்கிய யசோதரையும் சிதரையும் அச் செம் பொற்குகையைச் சேர்ந்து, ஆங்கிருந்த அருந்தவனாகிய கிரணவேகனை வாழ்த்தி, அவன்மாட் டமர்ந்தனர். முனிவரன் அவர்கள் முகநோக்கி, 'மதியினாற் பெரியோர் மக்களாய்த் தோன்றி, தானமும் தவமும் தாங்கி, கதிகளைக் கடந்து வீட்டை யடைவார்கள். ஆயின், மாதரார் வீடு பெறுதல் இல்லை. இந்திரன்தேவிய ராயினும் அவர் இறைமை எய்துதல் இலர். மகளிர், பாவத்தாற் பெரியவர். அவர், மைந்த ரின்மையானும், பெற்ற பிள்ளைகள் இறத்தலானும், பிறவற்றானும் அள விடற்கரிய துன்பத்தை நுகர்கின்றனர். ஆயினும், கற் புடை மகளிர், கணவற் பேணி, நோன்பு தாங்கி, தவத் தோர்க்குத் தானஞ் செய்து, ஆன்றோர்க்கு ஆவன ஆற்றி, இறைவனை ஏத்தி வாழ்ந்து, தம் பிறவி நீங்கித் தேவராகுவர். அத்தகையோர், பின்னர், வையத்தில் ஐயராய்த் தோன்றி, அருந்தவந் தாங்கி வீடு பெறுவர்.

ஆகலின், நீவிரும் இப்பிறவி யொழிந்தபின் காலத்தால் வீடு பெறுவீர்' என்று கூறினான்.

முனிவன் கூறிய மொழிகளைக் கேட்ட மாத ரிருவரும் அவனை வணங்கிச் செல்லுதலும், அவன் அம் மலையின் குகையை அணுகினான். முன்னர் நரகத்தி லுழந்த ஸ்ரீபூதி, அதனினீங்கி விலங்குகளாய்த் தோன்றி, பின்னர்ப் பாந்தள் வடிவிற் சமைந்து, அப் பருப்பதத்துக் குகையைக் குறுகினான். கிரணவேகன் முன்போல அக் குகையைக் குறுகுதலும், பாந்தள் அங்காந்து அவனைப் பற்றிற்று. பாந்தள் பற்றுதலும், முனிவன்,அருகனை வழுத்தினான்.அச் சொல்லைக் கேட்ட அங்கனைய ரிருவரும் பரிவி னோடிச் சென்று, பாந்தள் வாய்ப்பட்ட முனிவனைக் கண்டு, அழலுமிழ்ந்து சீறி அங்காந்த அவ்வரவினை யஞ்சாது, முனிவன் தோள்களைப் பற்றி யீர்த்தனர். அவ்வளவில் மாசுணம் மாதவத்தோர் மூவரையும் வயிற்றிடைப் படுத்திற்று. அருக்கனைச் சனி செவ்வாயோடு அரவு விழுங்குதல் போல, மாதவனையும் மாதரையும் மாசுணம் விழுங்கவும், அவர்கள் அதனை முனியாராய், அருகனை யுளங்கொண்டு துதித்தனர். அவர் மூவருள், முனிவன் அவ்வுடல் விடுத்து, செகப்பிரபை என்னும் விமானத்தில் அருக்கப்பிரப னாயினான்; மாத ரிருவரும் வானவ ராயினர் மாபெரும் பாந்தளாகிய ஸ்ரீபூதி, முன்னைய நரகத்தி லுங் கடுநரகத்தில் வீழ்ந்து, கொடுந் துன்பத் துழந்தான்.

"அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு"

என்னும் வாய்மொழி, இவர்தம் வரலாற்றான் வலியுறு மன்றே! தரணேந்திர, இதுகாறும், சீயசேனனும், அவன்தேவி இராமதத்தையும், இளையபுதல்வன் பூரண சந்திரனும் புடவியிற் றோன்றித் துறக்கம் புக்கதை யுரைத்தேன். இனி, சீயசந்திரமுனிவரது வரலாற் றைத் தெரிப்பேன், கேட்பீராக என்று ஆதித்யாபன் பின்னுங் கூறுவான்.

7. சக்கராயுதன் முத்தி பெற்றது

இவ்வுலகத்தில், நாவலந் தீவினிடத்துப் பரதத்தின்கண் உள்ள தருமகண்டத்தில் சக்கரபுரம் என்னும் நகரம் ஒன்று உளது. அந்நகரைச் சூழ்ந்து, உவர் நீர்க்கடல்போல் ஆழ்ந்த கிடங்கும், அதனகத்தே வச்சிர வேதிகையே போல் உயர்ந்த மதிலும், அதன் உட்புறத்தில் குலமலைகளேபோலச் சிறந்த மாளிகைகளும், அதன்நாப்பண் மேருமலையேபோல வேந்தன்நகரும் விளங்கினமையின், அந்நகரம் நாவலந்தீவினை நிகர்த்திருந்தது.

அந்நகரத்தில், ஒருபால் வணிகர் மறுகுகளும், ஒருபால் செய்தொழில் வல்லோர் தெருக்களும் சிறந்திருந்தன. ஒருசார் படைக்கொட்டில்களும், ஒருசார் பரிநிலையங்களும், ஒருசார் ஓங்கல் உறைவிடங்களும் உயர்ந்து ஒளிர்ந்தன. ஒருபுறம் நடன மடந்தையர் ஆடும் அரங்குகளும், ஒருபுறம் பாவை போல்பவர் பாடு மிடங்களும், ஒருபுறம் அறிவ னுறையுஞ் சினகரங்களும் அமைந்திருந்தன.

அந்நகரின் மன்னவன் வயப்புலி யனைய அபராசிதன் என்பவன். அவன், வசுந்தரி என்னும் மடவரலோடு இன்ப நுகர்ந்து வாழ்ந்துவரும் நாட்களில், தேவனா யிருந்த சீயசந்திரன் அந்நிலைமை வழுவி, அம்மங்கையின் வயிற்றில் மகனாய்த் தோன்றினான். வானத்தில் தோன்றிய திங்கள்போல வசுந்தரியின் வயிற்றிற் றோன்றிய மகனைக் கண்ட மன்னன், களிப்பு மிக்கு, 'இவன், வினைகளை வென்று விளங்குவான்' என்று

ஓர்ந்து, அவனுக்குச் சக்கராயுதன் என்று பெயரிட்டு, பேணி வளர்த்துவந்தான். அவனும் இளம்பிறை போல வளர்ந்து, நிலமகள் மீது அடிகளை வைத்துத் தளர்நடை நடந்து, விடையேற்றின் நடை பயின்று, நாமகளொடு நவின்று, சிலையொடு பழகி, ஒப்புயர்விலனாய்த் திகழ்ந்தான்.

அப்பொழுது அபராஜிதன், தன் மைந்தனுக்குச் சித்திர மாலை என்னும் பெயருடைய செல்வியை மணம் புரிவித்தான். சக்கராயுதன், மின்னலோடு கருமுகில் விளையாடுதல் போல் அவளோடாடி இன்பம் நுகருங் காலத்தில், வானுலகில் வாழ்ந்த கிரணவேகன் அதனின் வழுவி, அவரிருவருக்கும் புதல்வனாய்த் தோன்றினான். வான்மின்னல் நிறைமதியைப் பயந்தாங்கு, சித்திர மாலை செல்வனைப் பயந்தது கண்ட செம்மல், சிறக்க மகிழ்ந்து, அக்குழவிக்கு வச்சிராயுதன் எனப் பெயரிட்டான். அவனும் வளர்ந்து, வேந்தர்கலையும் விஞ்சையர்விச்சையும் பயின்று, மேன்மை யடைந்து விளங்கினான்.

அந்நாளில், முல்லை முதலிய நானிலங்களும் மயங்கியதாய், கால வேறுபாடின்றித் தண்ணிதினிரும் பொழிலதாய், பருதியின் வெம்மை தணிக்கும் பதாகை மாடத்ததாய், பிருதிவிதிலகம் எனப் பெயர் பெற்ற நகரம் ஒன்று பிறங்கிற்று. அந்நகரின் அரசனாகிய அதிவேகன் என்பவனுக்குப் பிரியகாரிணி என்னுந் தேவியின் வயிற்றில், தேவனாய் விளங்கிய சீதரை பெண்மகவாய்த் தோன்றினாள். அம்மகவிற்கு அரதன மாலை எனப் பெயரிட்டுப் பேணி வளர்த்துவந்தனர்.

கற்பகவல்லி பெற்ற மஞ்சரி போன்ற அரதன மாலை வளர்ந்து, நெறிந்து நெய்த்து நீண்டு நீலக்கதிரைக் கற்றையாய் வைத்தது போன்ற கவரிபந்தமும், முயலின்றி விளங்குந் திங்கள்போன்ற முகமும், கொவ்வை போன்ற செவ்வாயும், தரளம்போன்ற முறுவலும், வடியணைய விழியும், சிலையணைய நுதலும், வடிந்த காதும், ஒடுங்கிய இடையும், சிறிய அடியும், அன்னமென்னடையும், குழலின் மொழியும் உடையளாய்க் கண்டோர் வேட்கும் இளம்பருவத்தை எய்தினள்.

அரதனமாலையின் இயல்பும் அழகும் அறிந்த வேந்தர் பலரும் அவளை யடைய விழைந்தனர். அதனை யறிந்த சக்கராயுதன், அதிவேகனுக்குத் தூதுவிடுக்க, அவனும், 'நீவிர் விரும்பியதெல்லாம் இசைந்தேன்' என்று உடம்பட்டான். பின்னர், நன்னாளில் வேள்வி விதியின், வச்சிராயுதன் அரதனமாலையை வேட்டான்.

வேழம், பிடியொடு கூடி விளையாடுதல்போல, வச்சிராயுதன் தன் தேவியோடு கூடி, கொடிமலர்ப்பந்தரும், குன்றமும் வாவியும், நெடுநீர் யாறும், ஒளிர்பூங்காவும் படர்ந்து, ஆங்காங் குறைந்து, இன்பக்கடலுட் டிளைத்து மகிழ்வுற்றிருந்தான். அந்நாளில், தேவனா யிருந்த யசோதரை, அதனின் வழுவி வையம் நணுகி அரதனமாலையின் வயிற்றில் புதல்வனாய்த் தோன்ற, மதியைக் கண்ட கடல்போல் உலகத்தார் உவப்பெய்தினர். அக் குழவிக்கு, **அரதனாயுதன்** எனப் பெயரிட்டுப் பேணி வளர்த்தனர். அரதனாயுதன் கற்பகக் கன்றுபோல வளர்ந்து இளமை எய்தி, மெல்லியலாரை வேள்வியினெய்தி, அன்பு பெருக இன்பந் துய்த்திருந்தான்.

தன்மகன், பேரன், அவன்புதல்வன் ஆகியவ ரோடு இன்பமெய்தி யிருந்த அபராசிதன், வையத்து வாழ்வில் உவர்ப்புற்று, முனிவரொருவரை யடைந்து, தீவினை தீரும் வழியைத் தெரிக்குமாறு வேண்டினன். முனிவர், அரசனை அன்புடன் நோக்கி யகமலர்ந்து, 'தினைத்துணையேனும் பற்றின்றி, வினைநீங்கினோனைகத் தன்னை நோக்கி, வீட்டின் மெய்ம்மையைத் தேறின் வினைகள் கெடுதல் மெய்ம்மை' என்றார். எனலும், வேந்தன் அவரை வணங்கி, நகரம் போந்து, தன் புதல் வன் சக்கராயுதனை விளித்து, 'இவ்வுலகத்தை உனக் காக்கி, யான் துறவு கொள்கின்றேன். நீயும் உலகத்தைச் சிலநாள் காத்துப் பின்னர், அதனை உன் சிறுவனுக் காக்கி, துறவு கொள்வாயாக' என்று அறிவுறுத்தி, தன் அரசியலை அவன்பா லாக்கி, வனம்புக்குத் தவம் புரிந்து முனிவனாயினன். சக்கராயுதன் உலகத்தைத் தளர் வின்றிக் காத்து, அபராஜிதனே யாயினன்.

சக்கராயுதன் இரவும் பகலும் இன்பம் நுகர்ந்தும் அது நிறைவாகாதொழியவே, 'விருப்பம் என்றும் நிறை தலிலது ; ஆகலின், இதனை முயல்பவர் உணர்வில்லாத வரேயாவர். இன்பத்திற்குத் தடையாயிருக்கும் வினை களைத் தவத்தால் தடைவேன்' என்று எண்ணி, மா நிலத்தை மைந்தன்பா லாக்க உன்னி, அவ்வாறே முடி யும் படியும் வச்சிராயுதன்பா லாக்கி, கடிவனம் புக்கு அபராஜித முனிவனை யடைந்து, அவனடிகளை முடியாக அணிந்து, அவனு லறிவு பெற்று, தவந் தாங்கி முனிவனாயினன்.

இவ்வாறு சக்கராயுதன், தாதையைச் சார்ந்து தவம் தாங்கி, படிமம் நின்று, வெள்ளிடை நிற்றல்

முதலிய யோகிற் பயின்று, பொறிகளைச் செறித்து, வெப்பம் குளிர் முதலிய புறப்பரிசைகளையும் வேட்கை பசி நோய் முதலிய அகப்பரிசைகளையும் வென்று, தவத்தில் நிலைநின்றான்.

சக்கராயுதன் செயல் இவ்வாறாக, அவன்புதல்வன் வச்சிராயுதன், முன்னைய நுகர்ச்சியே பின்னும் புதிய வையாகத் தோன்றி மயக்கத்தை வளர்க்கின்றது என உண்மையறிந்து, அது மின்னலைப்போல வீயும் எனத் தெரிந்து, இன்ப நுகர்ச்சியில் உவர்ப்புற்று, வீட்டை நல்கும் மெய்த்தவம் புரிய விழைவுற்றான். அதனால், அரதனுபுதனை விளித்து, அவனுக்கு அரசிய லளித்து, அறவுரை பகர்வான் :

திருமலி யார மாலை திளைக்குந்திண் புயத்த ராகி
உருமலி களிற்றி னுச்சி யோங்கிய குடையி னீழல்
வருமவர் முன்பு தாஞ்செய் நல்வினை மாய்ந்த போழ்தின்
எரியுறு திருவின் ஒன்னார்க் குழையரா யியல்வர் கண்டாய்.

பஞ்சநல் லமளி யின்கட் பருமணிப் பவழத் தின்காழ்
மஞ்சின்மே லஞ்சொ லார்கள் வருடமா போற்று யின்றார்
முன்புதாஞ் செய்த தீமை முளைத்தழிக் கணத்தின் வேறாய்த்
துஞ்சினர் போல மாலைத் துகணிலத் துறைவர் கண்டாய்.

செல்வம் எஞ்ஞான்றும் ஒருவர்பால் நிலைத்திருப்ப தன்று. ஆகலின், உறுதிகண்டு ஒழுகுவாய்' என்று அறிவுறுத்தி, நகரினீங்கிச் சென்று சக்கராயுதனைச் சார்ந்து, அவனடிகளை முடியிற் றீட்டி, 'அடிகள், புயவலி யுடையராயின் புலையரும் நிலமகளுக்குத் தலைவராகுவர்; புயவலி மாயின், மலையன குலத்தவராயினும் ஒன்னார்தா ளடைந்து உழையராகுவர். ஆகலின், உலகியலை வெறுத்து, வினைகளின் பயனை வெருவி, மீளாநெறி

எய்தும் விழைவுடையேனுய்த் தம்மைச் சார்ந்தேன்' என்று சாற்றினுன். அவன் கருத்தினையறிந்த சக்கரா யுதன், 'சமை தமம் சாந்தி தயை என்பன மலிய, தமர் பிறர் என்பதொழிய ஒழுகுதல் தவமாகும். அத் தவத் தால் வீடுபேறு கூடும்' என்று விளங்க வுரைத்தலும், உடனே வச்சிராயுதன் தவம் புரியத் தொடங்கினுன். செயற்கரிய செய்வார் பெரியராயின், அபராஜிதனும், அவன்மகன் சக்கராயுதனும், அவன்மைந்தன் வச்சிரா யுதனும் அல்லாமற் பெரியவர் பிறர்யாவர்? உலகத்தை யாண்ட இவர் மூவரும் அதனை யொரு துகள்போல எண்ணி யொழித்தனர்! அரியன செய்ய வல்லவர் ஆன்றவரே யல்லரோ! இரவியே யன்றி இருள் கடிந் தெழுவது பிறிது யாது?

சக்கராயுத முனிவன், தியானத்தினுல் வினைகளை வென்று, யோகு புரிந்து, அனந்தஞானம் முதலிய நான் கனையும் அடைந்து விளங்கினுன். அப்பொழுது விண்ண வர் விசும்பிடம் மறையக் குழுமி வந்து அடி பரவினர். வானவர் மாரிமுகில்போல் மலர்மழை சொரிந்து, அலை கட லொலியெனத் துதிசெய்வுழி, சக்கராயுதன் எல்லா வினைகளுங்கெட, எண்குணந் தோன்றப்பெற்று, உல கின் உம்பரை யுற்றுன். அமரர் அலர் தூவி வணங்கி யகன்றனர்; வச்சிராயுதனும் இறைஞ்சி யேகினுன்.

பத்திரமித்திரன் என்னும் வணிகன், நல்வினைப் பயனுல் சீயசந்திர னென்னும் வேந்தனுகத் தோன்றி, பின்னர் மாதவம் ஆற்றி அஹமிந்திரலோகத்தில் அமரனு யமர்ந்து, மீண்டும் தரையின்கண் சக்கராயுதன் என்னும் அரசனுகப் பிறந்து, அருந்தவம் புரிந்து, நிர்வாணநிலையை யடைந்து, அழியா நிலைமைய னுயினுன்.

8. வச்சிராயுதன் வானடைந்தது

நரேணேந்திர, வச்சிராயுதன் மாதவத்திற் சேற லும், அரசு மேற்கொண்ட அரதனாயுதன் தன் முந்தை யோரியல்பினைச் சிந்தை செய்யானாய், மாதர்மேல் மால் கொண்டு, அறவுரை கேளானாய், அரசும் ஆயுளும் கிளையும் இன்பமும் அழிவுறுவன என்று எண்ணாமல் நிலையாவன என்று கருதி மயங்கினான்; தான் அடை யும் இன்பநுகர்ச்சி முன்னைய புண்ணியப்பயன் என் பதை உள்ளங்கொள்ளான்; இறந்தவர் பிறத்தல் இலர் என்று எண்ணினான்; தாம் எய்திய இன்பத்தை வெறுத்து நீத்து, இன்பமடைவான் எண்ணித் துன்பம் மிக்க தவத்தை மேற்கொண்டு வருந்துதல், தன் வாயகப் பட்ட ஊனை விடுத்து மற்றையஊன் வேண்டிய நரியின் செயலோடொக்கும் என்று நகைபுரிந்தான்; துன்பத் துழந்து இன்பத்தை யெய்த எண்ணுதல், காஞ்சிரம் வளர்த்து மாங்கனி தின்ன விழைதலை நிகர்க்கும் என்று கூறி, தவத்தொழிலை இழித்துரைத்தான்.

இவ்வாறு அரதனாயுதன் தீவினை வயத்தனாகி, நல்லன இகழ்ந்து விடுத்து, மெல்லியலாரை மேவிச் செல்வுழி, வச்சிரதந்தன் என்னும் முனிவன், அந்நக ரினை யடுத்த மனோகர வனத்தைக் குறுகினான். மாதவர் பலரும் நாற்புறஞ் சூழ, தாரகை நடுவண் தண்மதி போல வந்த முனிவன், உயிர்களின் இயல்பினை உலகிற்குத் தெரிவிக்கக் கருதி, ஆண்டையார்க்குக் கூறுவானாயினான்:

'உலகில் வாழும் உயிர்கள்—ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூன்றறிவுயிர், நான்கறிவுயிர், ஐந்தறிவுயிர் என ஐந்து

வகையனவாகும். அவற்றுள் ஓரறிவுயிர்கள், நீர் நிலம் நெருப்பு காற்று மரம் என்னும் ஐந்து திறப்பட்ட உடம்பினையுடையவாய் வாழ்வனவாம். அவ்வுயிர்களுள் நீருடலன, திரை யலைத்தலானும் நீரைக் காய்ச்சுத லானும் தரையை நனைத்தலானும் சாவனவாம்; நில னுடலன, உழுதல் கல்லுதல் அடைத்தல் எரித்தல் முதலியவற்றான் அழிவனவாம்; நெருப்புடலன, அழலை யாற்றுதலானும் அவித்தலானும் இறப்பனவாம்; காற்றுடலன, வரையோ டெற்றுதலானும், வட்டம் முதலாகச் சுழறலானும் மாய்வனவாம்; மரனுடலன, வெயில் மழை காற்று தீ படைகள் முதலியவற்றாற் படுவனவாம்.

நந்து சிப்பி வளை முதலிய ஈரறிவுயிர்கள் கடலிற் பிறப்பினும் வலைஞர்கைப் பட்டு மாயும். விலங்கு முதலியன மலை கானம் வாவி முதலியவற்றில் வாழி னும், வலை சிலை பொறி முதலியவற்றாற் பொன்றும். இன்னும் பலவகை விலங்குகள் ஊனகாரர் போர் வீரர் சிறுதெய்வம் தீவேள்வி முதலியவற்றான் அழிவுறும். மால்மதக்களிறும், கூரிரும்பினாற் குடுமி போழவும் பாரமேற்றவும் கால்யாப்பவும் கடுந் துயரெய்தும். இனி, எருது முதலியன படும் இன்னல் இயம்புதற்கு அரியனவாகும்.

இத்தகைய இன்னல்படும் விலங்கிடைத் தோன் றும் உயிர்கள் யாவையோ எனின், நெஞ்சிற் றுறவாது துறந்தார் போன்று வஞ்சிப்பவர்களும், உள்ளம் மெய் மொழி இவை ஒன்றுதலில்லாத வெள்ளைமாந்தரும், கள்ள நெஞ்சினரும் ஆகிய உயிர்களே. அன்றியும்,

மன்றினின்று பிறன்பொருள் வவ்வுபவரும், ஊனும் தேனும் உண்போரும், உண்மைவழக்கு விடுத்து, வலியாரோடுகூடி வெல்வோரும், நல்வினை தீவினை இல்லை என்போரும், அரசநீதி கெடுத்த அரசரும், இறைவனைக் கெடுத்த அமைச்சரும், தீநெறிச் செல்வோரும் ஆகிய இவர்களும் விலங்கிடைப் பிறந்து வெந்துயருறுவர், காண்மின்!' என்று பலவாறு விரித்துக் கூறினான்.

முனிவன் மொழிந்த பொருண்மொழிகளை யுட்கொண்ட மேகவிஜயம் என்னும் வேழம், தன் பிறப்பினை யுணர்ந்து, தனக்கிட்ட ஊன் விரவிய கவளத்தை உண்ணாது உயிர்த்து உழந்தது. மால்யானை மதம் புலர்ந்து, மறம் ஒழிந்து, கவளம் வாங்காது நீங்கி, நெடிதுயிர்த்தலும், உடனே பாகர் பரிந்து சென்று, அரசனுக்கு அறிவித்தனர். அரசன் அமைச்சருடன் ஆண்டடைந்து, மருந்தறி புலவரை வருவித்து, 'இவ்வேழத்திற்கு உற்றதியாது?' என வினவ, அவரும் ஆராய்ந்து, 'அரசே, இதற்கு ஐயொடு வாத பித்தம் அடைந்தில; வெய்யது பிறிதில்லை. இதன் நெட்டுயிர்ப்பினை நோக்கின், இது முற்பிறப்பறிந்து வருந்துகின்றதுபோல் தோன்றுகின்றது. இதன் கையில் ஊன்விரவாத கவளத்தை யிடுதும்; அதனை வாங்கி உண்ணுமோ உண்ணாதோ என்பதைப் பின்னர் அறிதும்' என்றனர். அரசன் அவ்வாறே ஏவ, அதனை அவ்வோங்கல் வாங்கி உண்ணக் கண்டு, வேந்தனும் பிறரும் வியந்தனர்.

பின்னர் வேந்தன், மனோகரவனத்தி லிருக்கும் வச்சிரதந்த முனிவனை யணுகி, யாழ்வல்லோனைக்

கண்ட யானைபோல இறைஞ்சி, 'அடிகள், மேகவிஜயம் என்னும் வேழத்திற்கு உற்றதை உணர்த்தி யருள்வீர்' என்று வேண்டினான். முனிவன், தனது ஞானத்தால் அதனை யோர்ந்து, நரபதியை நோக்கிக் கூறுவான் :

'இப்பரதத்தின்கண் அத்தினபுரம் என்னும் நகரில் பிரதிபத்திரன் என்னும் பெருவேந்தன், வசுந்தரி என்னுந் தேவியோடு வாழ்ந்திருந்தான். அவர்களுக்குப் பிரீதிங்கரன் என்னும் மைந்தனொருவன் உளனாயினான். பிரதிபத்திரனுக்கு அமைச்சனாகிய சித்திரமதி என்பவனுக்குக் கமலை என்னும் மனைவியின் வயிற்றிற் றோன்றி, விசித்திரமதி என்னும் பெயர் பெற்ற மைந்தனொருவன் விளங்கினான். அக்குமர ரிருவரும் அழகினும் அறிவினும் ஒப்புமை யுடையவர்களா யிருந்தது போலவே, உள்ளத்தானும் ஒற்றுமையுடையராய்க் கெழுமிய நண்பின ராயினர்.

ஒருநாள் அவரிருவரும், தருமருசி என்னும் முனிவனைச் சார்ந்து அறவுறை கேட்டுப் பிறவிப்பிணியை யஞ்சி, அவரை வணங்கி, 'அடிகள், புலன்களை யொறுத்துத் துறந்தோமாயின், பிறப்புக் கெடுமன்றே! அவ்வாறாயின், எமக்குத் தெளிவுரை கூறித் துறவினை யளித்தருளல் வேண்டும்' என்று வேண்டலும், முனிவன் அவர் விருப்பத்திற் கிணங்கத் துறவினை யருளினான். அவரும் தமது வணர்கருங்குஞ்சியை வாங்கி, மாதவம் பயின்றனர்.

இவ்வாறு இருவரும் தவம் பயில்வுழி, அரசிளங்குமரன் சிறந்த முனிவரனாயினான். அவர்கள் அயோத்தியின் புறத்தில் தங்கியிருக்கும் நாளில், முனிவர

னாகிய அரசகுமாரன், சரிகைக்கென்று அங்நகருட் புக்கு, வாள்வாயிற் பிடி நடத்தலே போன்று நூனெறி யொழுகி, இல்லந்தோறும் இரந்துண்டு சென்றான்.

ஆங்கு, புத்திசேனை என்னுங் கணிகைமகளொருத்தி, தன் அகத்தைச் சார்ந்த தவத்தோனை எதிர்கொண்டு இறைஞ்சி, 'அடிகள், விழுமிய தானஞ் செய்தற்கு உரிய உயர்குடியில் தோன்றுதற்கு வழி யாது?' என வினவ, முனிவன், அவளை நோக்கி, 'தன்னை யிகழ்தலும், தக்கோரைப் பழிச்சலும், உயிர்களுக்கு அருள்செய்தலும், புலேசும் தேனும் உண்ணமல் ஒழுகுதலும், வஞ்சகமில்லாத மனத்தினராதலும், ஆகிய இவையே உயர்குலத்தை உதவும்' என்று உரைத்தான்.

முனிவன் கூறிய மொழிகளை யுளங் கொண்ட புத்திசேனை, முனிவனை இறைஞ்சி எத்தி, புலேசு தேன் கள்ளின் நீங்கி, பொருந்துஞ் சீலங்கள் மேற்கொள்வாளாயினாள். முனிவரன் அவளை யருளி, நகர்ப்புறஞ் சென்று, நண்பனை நணுகினான். அவனை நோக்கி, விசித்திரமதி, 'இத்துணை நேரம் தாழ்த்த தெவன்?' என வினவ, முனிவன், புத்திசேனையைக் கண்டதும், அவளுக்கு அறவுரை தெரித்ததும் அறிவித்தான். அவற்றைக் கேட்ட விசித்திரமதி, கணிகையின் இல்லமும் அவள்பெயரும் அவளது இயல்பும் பிறவும் பிரீதிங்கரனால் அறிந்துகொண்டு, ஊழ்வினையின் விளைவினால் அவள்மாட்டுக் காதல் மிக்கு, பாரணைக்கென்று நெபமுரைத்துத் தனியனாய்ச் சென்று, அவளில்லத்தை யணுகினான். அவனைக்கண்ட புத்திசேனை அடிவணங்கி,

விரதத்தின் பயனை விரித்துரைக்குமாறு வேண்டினாள். அதற்கு விசித்திரமதி வேட்கையை மிகுக்குங் கதைகளை விரிக்க, புத்திசேனை, 'இவன் நென்னல் வந்தவன் அல்லன்; புதியன்போலும்' என்று தேர்ந்து, வேட்கையின் அழிந்தோர் கதைகளை விரித்துக் கூறினாள். பின்னரும் விசித்திரமதி வேட்கை மீதூர்ந்து விளம்புதலும், மெல்லியலாள் அவனை வெறுத்துக் கூறுவாள்:

'அறிவுடையவர், தீண்டா வழும்புஞ் செந்நீரும் சீயும் தசையும் விரவி, வேண்டா நாற்றம் மிகுகின்ற இவ்வுடலை வெறுப்பாரே யன்றி விருப்பங் கொள்கிலர்.

" குடருங் கொழுவும் குருதியும் என்புந்
தொடரும் நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தசையும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்தள் ஈர்ங்கோதை யாள் "

கூறுதிர். மாலையும் சாந்தும் எண்ணெயும் சுண்ணமும் மஞ்சளும் கலிங்கமும் தமியே நிற்பின், சிலநாள் கழியினும் செவ்வி நீங்கா. அவை, மானிடர்தமது ஊனுடல் சேரின் ஒரு கணத்தளவில் இயல்பு கெடுவனவாகும். இத்தகைய முடைநாற்றத்துடலை முனிவு செய்யாமல், விழைவு கொள்வது வெள்ளறிவன்றே! இதனை உளத்தால் வெறுத்து உமிழ்ந்து நீங்குதலே ஊனுடையோருக்கு இயல்பாகும்' என்று கூறிச் சுளிந்து, வாசமாலை வேய்ந்த கூந்தல் தலையினிழிந்த காலை அதனைத் துறத்தல்போல விசித்திரமதியை யிகழ்ந்து உட்புகுந்தாள்.

பொறிப்புலத் தெழுந்த போகத்தைப் போக்கி வெறுத்த உளத்தினராயின் வீட்டின்பம் விளையும்;

அன்றாயின், மாற்றிடைச் சுழல்வர் என்பதை மனங் கொண்டு, புழுக்குலம் பொதிந்த யாக்கையை விசித் திரமதி வெறுக்கானாய், புத்திசேனை கூறிய உறுதியை உளங்கொள்ளானாய், மாசெலாந் திரண்ட வடிவின்மீது கழிபெருங்காதல் கொண்டான்.

> "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை யறிவே மிகும்"

என்றது உண்மையே யன்றோ!

விசித்திரமதி, தன்னை வெறுத்துக் கூறிய மெல்லி யலை வெகுண்டு சோகத்தோ டெழுந்து, தன்னியல்பினை யுன்னாய்ப், பின்னரும் அவளைக் கூடும் உபாயம் நாடி, நகரெங்கும்புக்கு ஒன்றுங் காணாய், இறுதியில், அந் நகரை யாளுங் **கந்தமித்திரன்** என்னுங் காவலன் ஊன்சுவை விரும்பி உண்பதை யறிந்து, அவன் கோயில் எய்தி, மடைத்தொழி லமர்ந்து ஊனைச் சுவை மிகச் சமைத்துக் காட்டி, அவனது அன்பினைப் பெற்றான். பின்னர், அவ் வரசனாதரவினால் புத்திசேனையின் அகத்தை அடைந்தான்.

விசித்திரமதி, புத்திசேனையின்மேல் வேட்கை யுற்று, அதனால், தான் மேற்கொண்ட தவத்தை விடுத்து, ஊனையட்டு வதிந்த வல்வினையினால், அவன், இம்மையில் இவ்வேழமாகத் தோன்றினான். வேழம், அப்பிறவியை யறிந்து இரங்கிற்றாகலின், விரத சீலம் மேற்கொள்வதாயிற்று. அரசே, மாதரார்மீது வைக் கும் வாஞ்சையால் விளையுந் துன்பத்தை அறிந்து கொள்ளுதி. அரசரும் விழுமம் எய்தி நிரயம் புக்கு வெந்துய ருறுவர்; வாழ்க்கை துறந்து செறிந்து செய் தவஞ் செய்பவரே துன்பவெள்ளத்தின் நீங்குவர். அவரை இமயவருலகும் வீடும் எதிர்கொள்ளும்.

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு."

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்."

என்பன உளங்கொள்ளுதி. நல்லறனீத்து, நில்லா இன்பத்தை விரும்புவது, விலையிலா மணியை விடுத்து, காசத்தை விரும்புதல் ஒக்குங்காண்!' என்று உரைத்தான்.

வச்சிரதந்தன் கூறியவற்றைத் தேறிய அரதனுயுதன் உணர்வெய்தி, 'ஆ, கெட்டேன்! கானலை நீரெனச் சென்று ஓடியுழந்த உழையைப்போல, உறுதி யுணராது, இடரினை யீனும் புலங்களில் இவறினேன். எரியிடைப் பதங்கம்போன்றும், இளம்பிடிக் களிறுபோன்றும், கரிமதத் தளியைப்போன்றும், கானத்தின் அசுணம் போன்றும், தூண்டிற்பொன் விழுங்கிய மீன்போன்றும் புலன்களினின்பம் நுகர்ந்த தீமை தீருமாறு அடியேன் துறவு கொள்ளத் துணிந்தேன்; அடிகள் அருளுதல்வேண்டும்' என்று முனிவன்பால் மொழிந்தான். பின்னர், நகர்ப்புக்கு, முடியும் அரசும் மகனுக்கீந்து, இனத்தினீங்கிச் செல்லும் ஏறுபோல மகளிர் குழாத்தினீங்கி வனம்புக்கு, ஏற்ற காலத்தில் ஈயும் முகில் போன்ற அம்முனிவனைச் சார்ந்து, துறவுகொண்டான்.

அரதனுயுதன் மாதவம் புரிய வனஞ் சேறலும், அதுகாறும் அவன்மீது வைத்த காதலால் அகத்திலிருந்த அரதனமாலை, தானும் அவனோடு துறவொழுக்கம் பூண்டு, புரையெலாம் அகன்று நீங்க நோன்பு நோற்

பாளாயினள். தவமேற் கொண்ட அரதனுயுதன், முன்னர் மகளிர்பால் வைத்த காதல் போலவே தவத்தின்மீதும் நிலைத்த சிந்தையனுய்ப் பல காலங்கள் நோற்று, முடிவில், தன் தாயாகிய அரதனமாலையோடு அச்சுத கற்பத்தை யடைந்து, ஆண்டு அமரரின்பத்தை யெய்தினுன்.

இவன் வரலாறு இவ்வாருக, நரகத்தில் வீழ்ந்து துயருழந்த ஸ்ரீபூதியின் செய்தியைச் செப்புகின்றேன், கேட்பிராக: நிரயத்தில் வீழ்ந்து துயருழந்தவன், பின்னர்த் தாவரங்களாகி, அதன்பின், பரதத்தின்கண் உள்ள **கச்சை** என்னும் நகரத்தை யடுத்து வதிந்த **தாருணகிரணன்** என்னும் வேடனுக்கு, **மங்கி** என்பாள் வயிற்றில் மகனுய்த் தோன்றினுன். அவன், எரியுண்ட தாலதுண்டத்தை நிகர்த்த நிறத்தனுய், மறமே வடிவெடுத்தவன் என்னுமாறு கொடுமையிற் கனலிபோன்று, பலவகை யுயிர்களையும் படுக்குங் கருத்தினனுய், சிலையும் கணையும் ஏந்தித் திரிந்து கொண் டிருப்பான். அக்கொடியோன், துள்ளுதல் காண்பான் உயிர்களைக் கொன்றுகொண்டே, அருகிலிருந்த விலங்கலை யணுகி, அதன்மேல் ஏறினுன். அவ்வரைமிசை, வரையேபோல அசைவின்றித் தவஞ் செய்துகொண்டிருந்த வச்சிராயுதனைக் கண்டு, வோத்தெழுந்த வெகுளியின் எரியென விழித்து விரைவின் அண்மி, எண்ணரும் இன்னல்கள் இழைப்பானுயினுன் அவன், தன் கைநின்ற வடிநுனைப் பகழியின் செவியிடைக் குடைவான்; சிலையினை யெடுத்துச் சென்னியில் அடிப்பான்; அருமுட்சலாகையை அகங்கையி லேற்று

வான்; கொடியைச் சுற்றிக் குறங்கிடைக் கடைவான்; வடி நீண் முளையை அடியினில் தறைவான்; அச்சுமுட் கொண்டு சுற்றுமடிப்பான்; வயிரவாணியைத் தலை மிசை யறைவான்; கல்லாலெறிவான்; கணைகளைத் தொடுப்பான்.

இவ்வாறு இடும்பைக ளிழைத்த வேடன் செயலை முனிவன் உணர்தலின்றி, உள்ளத்தைத் தியானத்தில் ஊன்றி நின்றான். எத்தகைய இடும்பைக்கும் அசை வின்றி யோகு செய்திருந்த வச்சிராயுதன், தன் உடம்பு நீங்கி உலகத்துச்சி யெய்தி, சர்வார்த்தசித்தி யடைந் தான்.

கூன்சிலைப் பகழி கோத்து, மான்களும் மரையும் வீழ்த்து, பின்னர், மாதவனையும் வருத்திய வேடுவன், சில நாட்களில் உயிர் விடுத்து, கடுநர குற்றுக் கடுந் துன்பத் துழந்தான்.

"ஆர்வத்தால் ஒருவன் யானை ஆயினன் ஒருவன் நின்ற
வேரத்தால் நரகத் தாழ்ந்தான் விளம்பிய இவர்கள் இன்ப
பாரத்தை முடியச் சென்றார் பன்னகர்க் கிறைவ பாராய்
ஆர்வசெற் றங்க ளின்றிப் பகைநமக் கில்லை கண்டாய்."

9. பலதேவன் துறக்கம் புக்கது

போதும் தளிருஞ் செறிந்து, வண்டும் மிஞிறும் பாட, தாதும் மதுவுஞ்சொரியும் தாதகிமரன்களையுடைய தாதகி என்னுந் தீவு, சக்கரவாள கிரியைப்போல விளங்கியிருந்தது. அத்தீவின் கீழ்மேற் பாகங்களில் இரண்டு மந்தர மலைகளும், பன்னிரண்டு குலகிரிகளும் உள்ளன. அவற்றினிடையே இருபத்தெட்டு யாறுகள் இடையீடின்றி யொழுகிக்கொண் டிருக்கும். ஆங்கு, கீழ்பாலுள்ள மந்தரமலையின் மேல்பாற்பாயும் சீதுதை என்னும் யாற்றின் வடக்கண், யாவருங் காமுறத்தக்க வளம் மிக்க **கந்திலை** என்னும் நாடு உளது. அந்நாட்டில், விலங்கல்வீ ழருவியும், வேழ மும்மதமும், வேரித் தேறலும் விராயொழுகிக் கயங்களிற் பாயும்.

இத்தகைய செழுமை மிக்க கந்திலை நாட்டில், அயோத்தி என்னும் மூதூரில், ஞாயிறன்ன திறலினையும், திங்களன்ன அளியினையும் உடைய **அருகதாசன்** என்னும் அரசன் அரசு செலுத்திவந்தான். அவன் **சுவ்ரதை** என்னுந் தேவியோடு கூடி வாழும் நாட்களில், முன்னர் அரதன மாலையாகத் தோன்றி அச்சுத கற்பத்தில் தேவனாய்த் திகழ்ந்த இராமதத்தை, சுவ்ரதையின் திருவயிற்றில் மகனாகத் தோன்றினாள். அரசன், அப்புதல்வனுக்கு, **வீதபயன்** என்று பெரியோரால் பெயரிட்டான். அவனுக்குப் பலதேவன் என்னும் பெயரும் வழங்கிற்று.

பின்னர், அவ் வேந்தன்தேவியாகிய **சினதத்தை** என்பவள் வயிற்றில் அரதனாயுதன் புதல்வனாகத் தோன்றினான். வேந்தன், அம்மகனுக்கு **விபீடணன்**

என்று பெயரிட்டான். அவன், வாசுதேவன் என்றும் வழங்கப்பட்டான். குமாரிருவரும் வளர்ந்து, தரைக்கண் இழிந்த தருமமும் புகழும் போன்று, பலராமனையும் வாசுதேவனையும் நிகர்த்து, ஒரு நொடியளவும் பகிராது, இரதமும் இவுளியும் இவறித் திரிந்தனர்.

இவ்வாறு இவரிருவரும் குலமலைபோல ஓங்கி விளங்கி, அரசர்க்கரசராய்ச் செல்வுழி, இவர்க்குப் பகைவனாகிய பிரதிவாசுதேவன் என்பவன், உள்ளங் கொதித்து இவருடன் போர் தொடங்கினான்.

போருக்குச் சென்ற புரவிகள் திரைகளாகவும், களிறுகள் மகரங்களாகவும், வீரர்கள் சுறவுகளாகவும், வாட்கள் மீன்களாகவும், காலாட்கள் கடலாகவும், தேர்கள் நாவாயாகவும், காவலர் நீகாமராகவும் அமைந்து, கடலொடு கடல் பொருவதேபோல் இரு படைகளும் எதிர்ந்தன.

யானையோடு யானையும், இவுளியோடு இவுளியும், மல்லரோடு மல்லரும், வாட்படையோடு வாட்படையும் தாக்கிப் பொருதன. கதலிக்கானம் கால்பொர மடிதல் போல, கொடியினீட்டம் கோல்பொர வீழ்ந்தது. வில்லாளர் கணைகள் பாய மேகங்கள்போல வீழ்ந்தனர்; மல்லாளர் மடங்கல்போற் பொருது மாய்ந்தனர். காலாட்களின் தலைகள் பெண்ணைக்கனிகள்போல் வீழ்ந்தன; புரவிகள் திரையெனப் பொருது பொன்றின; வேழங்கள் வெற்பெனக் கிடந்தன; அவற்றின் மீது பாய்ந்து கிடந்த வாளங்கள் எழிலியினிடத்து மின்னல் போன்று ஒளிர்ந்தன. போர்க்களத்தில் குமிழிவிட் டெழுந்த குருதியாறு, வரையகத்துத் தாது கலந்து வரும் பேர்யாற்றை நிகர்த்தது. அவ்யாறு, வேழங்களை யுருட்டி, குடைகளை யேந்தி, விரைந்

தோடிற்று. அதில், தேர்த்தொகைகள் கலங்கள்போல மிதந்து சென்றன.

களத்தில் விழுந்துகிடந்த வேழங்களின் உயிர்ப்பு, பெரும்பாந்தள் செழுங்குகை நின்று சிறிது பேர்ந்து சீறுதல் போன்றது. அழிந்து கிடந்த வயவர், தம் அருகிற் செல்லும் நரியினை முனிந்தது, முழஞ்சிற் கிடக்குஞ் சிங்கம் ஆங்குப் போதரும் விலங்குகளை வெகுள்வது நிகர்த்தது.

கார்காலத்துக் கருமுகில்போலச் சிலைகள் அப்பு மாரி பெய்தற்கும் அஞ்சாமல், அரம்பையரை அணையலாம் என்னும் ஆசையினால், மள்ளர் முன்னின்று பொருது மாய்ந்தனர். அப்பெரும்போரில் தன்படைகள் இரிந்தோடக் கண்ட வீதபயன் என்னும் பலதேவன் வெகுண்டு, ஒன்னாருடலாகிய பைம்புற்கள் சாயுமாறு படைமடுத் துழுது, செருக்களத்தைச் சேறுசெய்தான். அதனைக் கண்ட மாற்றவனாகிய பிரதிவாசுதேவன், காற்றெறியுங் கடல்போலத் தன் காற்படையுடைதலை யாற்றானாய்க் கூற்றம்போலக் குறுகி, நுதிநுனைப் பகழி தூறித் தோன்றினான். அவனமருக்கஞ்சித் தம் படைகள் இரிந்தோடக் கண்ட பலதேவ வாசுதேவ ரிருவரும், எரியுருமென்னச் சீறி அமரில் முனைந்தனர். அவருள் பலதேவன் தன்முன் தோன்றிய சியத்திலேறிச்சென்று கார்முகம் வளைத்துக் கணைமாரி பெய்தான்; வாசுதேவன் கலுழன்மே லிவர்ந்து, செம்பொன் வரையிற் றோன்றும் அருக்கன்போலச் சிவந்தெழுந்தான். அவரிருவராலுஞ் செருக்களஞ் சேறுபட்டது; பாறு பறந்தது; பருதி கரந்தது.

இவ்வாறு பொருகையில், பகைவனாகிய பிரதி வாசுதேவன், விபீடணன் என்னும் வாசுதேவன்மேல்

வெகுண்டு, தன் சக்கரத்தை விடுத்தான். அப்படை, பாவையின் நடுவிற் செல்லும் பருதிபோல விரைய, அதனைக் கண்ட முடிமன்னரும் நடுங்கினர்; படைகள் முதுகிட்டோடின; அவ்வளவில் மாற்றவன் பக்கத்தவர் ஆர்த்தனர். அதுவுஞ் சென்று, மேருவினை வலஞ் செய்யும் ஆழிபோன்று வாசுதேவனை வலம்வர, வாசுதேவன் அதனைக் கையாற் பற்றித் திரித்து, தன் பகைவன்மீது விடுத்தான். அவ்வாழி, தன் தலைவனை நோக்கி விரைந்தோடி, கவசங் கீண்டு, மார்பினுருவித் துருவிப் போயிற்று.

தன்படை தன்னை மாய்க்க வீழ்ந்த பிரதிவாசுதேவனைக் கண்டோ ரனைவரும், 'ஈதென்ன விந்தை! மலைமிசை மதியினீழலிற் பருதிபோல, யானைத்தலைமிசை யெடுத்த குடைக்கீழ் நின்று நிலமுழு தாண்ட அரசரெவரும் நிலைத்திலராயினும், இவ்வாறு தலைவனைத் தடிந்த படையை இதுகாறும் கண்டிலேம்' என்று கரைந்தனர்.

அப்பொழுது வாசுதேவன் கருடனி னிழிந்து கைமாமிசை ஏறிவர, ஆங்குப் புரோகிதனணுகி, குரவர்க ளுறையுங் கோடிசிலை என்னும் பொருப்பைக் காட்டினன். வாசுதேவன் அவ்வரையை வலம்வந்து, அதனை யெடுத்துக் கையிலேந்தி நின்றான். அவ்வளவில் விஞ்சைவேந்தரும் விண்ணோரும் திறையொடு வந்து பரவினர். பின்னர் வாசுதேவன், அம் மலையை முன்போல் வைத்துவிட்டு, மன்னவர் சூழ்தர ஆழியுடன் சென்று, திசையனைத்தும் அடிப்படுத்து, சோதரனோடு அயோத்திநகரை யடைந்தான்.

மதியத்தோடு கருமுகிலைக் கண்ட வாரிதிபோல, பலதேவனையும் கேசவனையும் கண்ட பதியவர், காதல்

பொங்கப் பரவினர்; விதியறி புலவர் சூழ்ந்து அரியணையில் அமர்வித்து, மதியன்ன கவிகை கவித்துச் சாமரையிரட்ட, ஆயிரத்தெண்மரமரரால் கொணரப்பட்ட பரவைநீர்க் கும்பங்களை மந்திர மோதி நான்முறையி னீராட்டினர்; பின்னர் முடியை யணிந்து வாழ்த்தினர். அப்பொழுது முரசம் முழங்கின; பார்த்திபர் ஏத்தினர்; பாவலர் வாழ்த்தினர்; விஞ்சையர் இறைஞ்சினர்; விண்ணவர் பணிந்தனர்.

விபீடணன் என்னும் வாசுதேவன், பதினாறாயிர நாடுகளை வென்று திறை கொண்டு, ஆழி வேல் தண்டு சங்கம் வில் வாள் மணி என்னும் ஏழனையுமுடையனாய், ஏழாயிரவர் அமரர் காவல் செய்ய, மனைவியர் பதினாறாயிரவரோடுகூடி வாழ்ந்திருந்தான். வீதபயன் என்னும் பலதேவன், இயக்கர் நாலாயிரவர் காவல் செய்ய, மாலை தண்டு வாளி கலப்பையுடையனாய்த் தேவியர் எண்ணாயிரவரோடு கூடி இன்புற்றிருந்தான். இவரிருவரும் அந்தரத் திறைவன்போல இன்பநீர்க்கடலையாடிப் பல யாண்டுகள் வாழ்ந்திருக்கையில், விபீடணன் பெரும்பிறிதாயினான். அதனால், அருமணி யிழந்த அரவம்போலப் பலதேவன் அவலமுற்று அலமந்து துயரம் பெருகிப் பேதுற்றான்; பின்னர்ப், பிறவியை வெருவி, பொருளும் நாடும் புதல்வர்கட் கீந்து, மாற்றினை எறியும் வழி நின்று வீதராகனாகி, உடம்பு நீங்கி, இலாந்தவ கற்பத்தை யடைந்தான். தரணேந்திர, அவன்காண் யான்! சஞ்சயந்த முனிவருக்குப் பூசனை புரிவான் யான் இங்கெய்தினேன். இனி, விபீடணன் என்னும் பெயர் வாய்ந்த வாசுதேவனது வரலாற்றைக் கூறுவல், கேட்பீராக' என்று, பின்னரும் ஆதித்யாபன் கூறுவான்.

10. விபீடணன் நிரயத்துழந்தது

நரனேந்திர, விபீடணனாகிய வாசுதேவன், தான் வைத்த ஆர்வத்தால் நிரயம்புக்கு இடருழந்தான். யான் ஆங்கு அவனைக் கண்டு அவன் படும் இடும்பைகளை யறிந்து, மிக்க வெந்துயரில் வீழ்ந்து, அவன் இன்னல் தீருமா றெண்ணி, அவனை நோக்கி, 'நீ என்னை அறிதியோ? யான், மதுரை என்னும் பெயருடைய பார்ப்பனியாய் வாழ்ந்த காலத்தில், நீ எனக்கு மகளாய்த் தோன்றி வாருணி என்னும் பெயர் பெற்று வாழ்ந்தனை. பின்னர், யான், போதன புரத்து வேந்தனுக்கு இரணியவதி என்னும் பெயர் வாய்ந்த தேவியின் கருவிற் புதல்வியாகத் தோன்றி, இராமதத்தை என்னும் பெயரேற்றுச் சீயசேனனுக்குத் தேவியானேன்; நீ எனது அகட்டிற் றோன்றிப் பூரணசந்திரன் என்னும் பெயருடன் அரசனாகி வாழ்ந்திருந்தாய். அப்பிறவியில் நாம் இருவாமும் தவஞ் செய்து துறக்கம்புக்கேம். ஆண்டு நின்று மீண்டு, யான் விஞ்சையருலகிற் சீதரையானேன்; நீ எனக்கு மகளாகி யசோதரை என்னும் பெயர் பெற்றாய். அதன்பின் அமருலகடைந்து மீண்டும் யான் நிலவுலகில் அரதனமாலையாக, நீ என் புதல்வன் அரதனாயுதனாயினை. ஆங்கு, நாமிருவாமும் தவம் புரிந்து அச்சுத கற்பத்தை யடைந்தனம். மீண்டும், அயோத்தியின்கண் யான் பலதேவனாக, நீ வாசுதேவனாயினை. ஆர்வத்தால் நீ இந்நரகத்தில் ஆழ்ந்தனை. அதனை யறிந்து நினக்குறுதி யுரைப்பான் யான் இங்கு வந்தேன்காண்!' என்று மேலைப் பிறவிகளை யெல்லாங் கிளந்து கூறினேன். யான் இயம்பியன கேட்டு அவன் மயங்கி

விழுந்தான். யான் அவனைத் தேற்றி, 'இந்திர விபவ மாயினும், யாருக்கும் நிலைத்ததில்லை; வெந்துயர் நர கத்தில் விழாத வுயிர்களும் இல்லை. உயிர்கட்கு, செல்வம் சேர்தலும் மாய்தலும் மாலையேகாண்; இது கருதிக் கவலுதல் வேண்டா. அன்றியும், நீ கிடப்பது இரண்டாவது நிரயம். இன்னும் இதன்கீழ் ஐந்து நரகங்கள் உள்ளன. அவற்றின் துன் பத்தை யறியின், இத்துன்பம் எளிதாகத் தோன்றும்' என்று கூறி, ஏழு நரகங்களையும், அவற்றின் இயல்பு களையும், ஆண்டுக்கிடப்போர் படும்பாட்டையும் பகர்ந்து, பின்னர் நரகில்விழும் பாவிகள் இவரிவர் என்பதையுந் தெரிவித்தேன். அவற்றைக் கேட்ட அந் நாரகன், 'அறிவோய், யான் மீளுதற்குரிய வழியை அறிவித் தல் வேண்டும்' என்று வேண்ட, 'நின்னை இப் பொழுதே இதனின் மீட்குதல் இறைவற்கும் அரிதா கும். ஆயினும், நினக்கு இனி நன்மை பயக்குஞ் செயல்களைத் தெரிக்கின்றேன்' என்று கூறி, 'நீ தவத் தான் அமரனாகி, பின்னர் மன்னனாகி, பொறி புலன்களிற் சென்ற மனத்தினை யாயினை. ஆகலின், இந்நரகத்தை நண்ணினை; இனி, நீ அறத்தொடு புணர்ந்து அமர ருலகு அடைதியோ, மறத்தொடு மலிந்து எழுநிலத்து மாழ்குதியோ; இதனை எண்ணுதி. நின்னை முனிந்து நினக்கு இன்னல் விளைப்பாரையும் நீ முனிதலின்றி, "இஃது எனது முன்வினைப் பயன்" என்று உளங் கொள்ளுதி. அவ்வாறன்றி அவர்மாட்டுச் செற்றங் கொள்குவையாயின், பின்னர் விலங்கிடைத் தோன்றி வெந்துய ருறுவை. வெகுளி மதம் மாயை பற்று

இவை தீவினை சேரும் வழிகளாம்; பொறை வணக்கம் செம்மை ஈதல் இவை நல்வினை நண்ணும் வாய்தலாம். ஆகலின், நீ, நற்காட்சி நல்லொழுக்கம் முதலியன மேற்கொண்டு, அறிவன் முதலிய ஐவரையும் சரணம் புகுதி யாயின், பிறவிச்சுழியினின்று பிழைப்பாய், "இவ்விடும்பை நீங்குவது என்றுகொல்!" எனக்கருதி நீ ஏதமுறுதை; வினைநீங்கியஅன்றே இதுவும் கெடும். அவ்வாறன்றி, துன்பந்தீர ஆர்வங்கொள்ளின் அதனாற் பின்னும் வினை பெருகும். நீ இந்நிரயத்துட் கிடக்கவேண்டுங் காலத்திற் பெரும்பாலன கழிந்தன; இனி இருப்பது சிறிதே. இனியேனும், அறநெறியில் நிற்றி; நின்வினைகள் விரைவிற் கெடும்.

"வாளரி புழுவை வாயின் மதகரி கையின் நஞ்சிற்
சூழெரி யகத்திற் போரிற் சுறுவெறி கடலிற் கானில்
நீளரா ணுகி நிற்கும் நிரையத்து விழாமற் காக்கும்
கேளினி யறத்தைப்போலக் கிடைப்பதொன் றில்லை கண்டாய்."

"உம்பர்தம் உலகின் உய்க்கும் உலகினுக் கிறைமை யாக்கும்
வெம்பிய பிறப்பின் வாங்கி வீட்டின்கண் வைக்கும் மெய்யே
நம்பிநல் லறத்தைப் போலுந் துணையில்லை நமக்கு நாடின்
கம்பமில் நிலைமை யாகித் திருவறங் கைக்கொள் ஐயா!"

என்று கூறினேன். அவற்றைக் கேட்டலும், 'ஐய, தாம் என்கண் இறப்ப வைத்த அன்பினால் இவ்விருளுலகில் வந்து உறுதிமொழிகள் பலவும் உரைத்தனிர். யான், நுமது மொழிவழி நில்லேனேல் இந் நிரையத்தில் நீங்காது நிற்பேனாவேன்!' என்று இறைஞ்சினான். யானும், 'நன்று' என்று கூறி, என்னுலகம் அடைந்தேன்.

11. வித்துத்தந்தன் மீட்சி

நரகிடைக் கிடந்த விபீடணன், நிறை பொறை சாந்தி முதலியன வோம்பி, அறிவனடிகளை யுள்ளி, அந்நரகி னீங்கி, நிலவுலகத்தின்கண் இரேவதத்தில் உள்ள அயோத்திநகரில் ஸ்ரீவர்ம்மா என்னும் வேந்தற்குச் சுசிமா என்னுந் தேவி வயிற்றில் புதல்வனுய்த் தோன்றினன். அவன், சீதாமா என்னும் பெயரிடப் பெற்றுப் பிறையென வளர்ந்து, அரசர்க்குரிய கலைகள் பலவும் பயின்று, அரசனுகி, கொடுங்கோலரசரை நிலை கெடுத்துத் தனியரசாய் விளங்கினன்.

கடுவெயில் திரிந்தோர், நிழலைச் சார்ந்து வெப்பந் தீரத் தங்குதல்போல, நிரயத்துப்பட்ட துயரந்தீர மகளிரை மருவி இன்பமடைந்த சீதாமன், பழவினை துணிக்கும் பான்மை வருதலும், முனிவனொருவனை முன்னி, பிறவியினியல்பு முடியக்கேட்டு, இறைமையை யிகழ்ந்து விடுத்து, யோகு பயில்வானுயினன்; யோகு பயின்று, மோகங்கள் முதுகிட்டோட முனிமை கொண்டு, பிரமகற்பத்தை யடைந்தான்.

> " தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
> தானே தனக்கு மறுமையும் இம்மையும்
> தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
> தானே தனக்குக் கரி."

என்பதற்கு நாம் இலக்கமாயினேமல்லெமோ?

முன்னர்ச் சர்வார்த்தசித்தி யடைந்த வச்சிராயுதன் காண் இச் சஞ்சயந்த பட்டாரக ராயினன். பிரமகற்ப மடைந்த சீதாமன் சயந்தனுய்த் தோன்றி, சித்தியடை யத்தக்க நற்காட்சி நீங்கவே நாகத்திற்கு நாயகனுயினன். அவன் காண், நீ!

மேற்கூறிய வேடனாகிய ஸ்ரீபூதி, தீவினை துரப்ப, அப்பிறவி கழிந்து, பின்னும் நரகம்புக்குத் துயரெய்தி, அதன்பின் விலங்கிடைத் தோன்றி யுழந்தான். அதன் மேல், பரதத்தின்கண் உள்ள பூதரமண வனத்தின் இடையே யொழுகும் ஐராவதம் என்னும் யாற்றின் கரையில், தவம்புரியுந் தாபதர்களுக்குத் தலைவனாகிய கோசிருங்கன் என்னும் முனிவனுக்குச் சங்கி யென்னும் பன்னியின் வயிற்றில் மைந்தனாய்த் தோன்றி, மிருக சிருங்கன் எனப் பெயர் பெற்று வளர்ந்து, விஞ்சைகள் பயின்று விளங்கினான். அவன், தவத்தை மேற் கொண்டு பரல்மிசைப்படுத்தும், முட்பலகையிற் றுயின் றும், நண்பகற் போழ்தில் ஐந்தெரி நடுவண் நின்றும், இரவின்கண் பெயலில் நனைந்தும், தூங்குறிக்கிடந்தும் ஒழுகிவந்தான். அந்நாட்களில், திவிதிலகத்தின் தலைவ னாகிய விஞ்சைவேந்தன் விஞ்சுமாலி என்பான் ஆங்குச் செல்ல, அவனைக் கண்ட தாபதன், 'எனக்கும் இத் தவத்தான், இவனைப்போலச் சுற்றமும் செலவும் வேந் தும் தொக்கு நிற்க' என்று விழைந்தான். அதனால், அப்பிறவி நீங்கியதும், வெள்ளிவெற்பின் வடசாரில், கனகபல்லவத்தில், விஞ்சையர்வேந்தனாகிய வச்சிர தந்தனுக்கும் வித்துப்பிரபை என்னும் தேவிக்கும் மகனாய்த் தோன்றினான். அவன்காண் இவ் வித்துத் தந்தன் என்னும் விஞ்சையன்.

ஸ்ரீபூதி என்ற அமைசசன், அரசன்மேல் வைத்த வேரத்தால் அரவாயும், கவரிமாவாயும், கோழிப்பாம் பாயும், பின்னர் நரகனாயும், அதன்மேல் பாந்தளாயும், பின்னும் நரகனாயும், அதன்பின் வேடனாயும், மீண்டும்

நரகனும், நாகமாயும் பிறந்து, பின்னரும் நரகனாகி, அதன்மேல் மிருகசிருங்கன் என்னும் மறையவனாகி, இவ் வித்துத்தந்த னாயினான். சீயசேனன் என்னும் வேந்தன் வேழமாகி, பின்னர்ச் சாசார கற்பத்தில் தேவனாகி, ஆங்கு நின்று, கிரணவேகன் என்னும் விஞ்சை வேந்தனாகத் தோன்றி, மீண்டும் விண்ணவனாகி, பின்னர் வச்சிராயுதனாகி, வானவருலகத்தில் அமரனாய் அமர்ந்து, இறுதியில் இந்தச் சஞ்சயந்தராக வந்தான். இவ் விருவர் வரலாறுகளால், பிறருக்குத் துன்பம் விளைப்பவர் இழிபிறப்படைதலும், இடும்பைகளைப் பொறுத்துச் சாந்தம் மேற்கொள்பவர் உயர் பிறப்படைதலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உறுதிப்படு மன்றே! ஆகலின், தாமும் வித்துத்தந்தன்மேல் வேரங்கொள்ளீராய், அவனைப் பாசத்தின் விடுத்து, அவனோடு நட்புப் பாராட்டுதிர்' என்றான்.

ஆதித்யாபன் அறிவித்தவை கேட்டுத் தரணேந்திரன், 'அண்ணலே' அன்றும் நிரையத்துள் என் இடும்பையை நீக்கி யருளினை; இன்றும், பிறவித் தொடர்பனைத்தும் அறிவித்து, நற்காட்சி முதலியவற்றில் நிற்கச் செய்தனை. ஆகலின், எனக்கு இறைவன் நீயே; ஆயினும், யான் நினக்குக் கூறவேண்டுவது ஒன்றுளது. இவ் வித்துத்தந்தன் குலத்தினர், விஞ்சை மிக்கவரா யிருத்தலின், மேதக்கோரையும் பற்றிச் சிறையிட்டு வருத்துகின்றனர். ஆகலின், இவரது விஞ்சையைப் பறித்து, சிறையிழந்த பறைபோலச் செய்யத் துணிகின்றேன்' என்றான். அதனைக் கேட்ட ஆதித்யாபன், 'இவன் பிழையைப் பொறுத்து, வெகு

ளியை விடுத்திர்' என்ன, தரணேந்திரன், 'இறைவ, விஞ்சையர்களின் விஞ்சையை நீக்காவிடின், அவ் வெய்யோர் தஞ்செருக்கினல் பல விடங்களிலும் பரந்து, எளியவ ரனைவரையும் இடரில் வீழ்த்துவர். ஆகலின், இவர் விஞ்சையை, இவர் மகளிர்க்கு அடிப்படும் வண்ணம் ஆக்குவேன்' என்று அறிவித்து, சஞ்சயந்தரைத் தாள் வணங்கி, 'விஞ்சையர் மகளிர், சிறப்பயர்ந்தோதின், அவர் விஞ்சைகளைப் பெறுவாராக; இக்குலத்துட் டோன்றும் மைந்தர்கள் நாணமடைவாராக' என்று ஆணையிட்டு, அவ் வரையின்மேல் சஞ்சயந்தருக்குக் கோயில் எடுப்பி, ஐம்பொன்னல் திருவுருவமைத்து நாட்டினன்.

ஆங்கு, வலம்புரி முரன்றன; காகளம் ஒலித்தன; முழவும் தண்ணுமையும் முழங்கின; குழலும் வீணையும் ஏங்கின; கின்னரர் கீதம் பாடினர்; அரம்பையர் நடனமாடினர்; தரணேந்திரன் இறைஞ்சி ஏத்தினன்.

"அமலனீ யறிவனீ அருகனீ அசலனீ
விமலனீ வீரனீ வேரமில் லொருவனீ
துமிலனீ துறவனீ சுகதனீ சிவனுநீ
கமலனீ கருணைநீ கைவலச் செல்வனீ"

என்று இன்னணம் பலவாறு வழுத்தி வணங்கி, தரணேந்திரன் அமரர்களோடு அகன்றான்.

அப்பொழுது ஆதித்யாபன் விஞ்சை வேந்தனாகிய வித்துத்தந்தனை யருள்செய்து, அவனுக்கு அறவுரை கூற வுளங்கொண்டு, அவனை விளித்து, 'விஞ்சை வேந்தே, மதியுடைய மேலோர் பிறவிக்கண் வரும் இன்பத்தை விரும்பார். விதியின் விளைவை எண்ணிப் பார். வெகுளியும் வேரமும் மேற்கொண்ட

தனால், சீயசேனனுக்கு அமைச்சனாயிருந்த நீ, அரவம் முதலியவாய்ப் பல பிறப்புக்களில் பிறந்து உழந்ததே யன்றி, நிரயத்தும் பலமுறை கிடந்து நெடுந்துய ருற்றாய். நீ அடைந்த துயரத்தை உரைத்தற்கு ஒருவராலும் ஆகாது. யான், இராமதத்தை என்னும் பெயர் பெற்று, அவ்வரசனுக்குத் தேவியா யிருந்தேன்; அதன்பின், பற்பல பிறவி பிறந்து, இப்போது அமரனா யமர்ந்துள்ளேன்காண்! இனியாயினும், நீ, வினைத்தாபத்தைத் தணிக்கும் நிழல்போன்ற நல்லறத்தை மேற்கொள்ளுதி. பிறப்பின்கண் காணும் இன்பமானது, அழலின்கண் மலையை யேந்தி வந்தவன், அம்மலைக்கீழ்ப்படும் நிழலிற்பெற்ற இன்பத்தை நிகர்க்கும். பொருளில்லார்க்கு நிலவுலகத்தில் இன்பமில்லாதவாறுபோல, அருளில்லாருக்கு அவ்வுலகத்தில் இறையும் இன்பம் இல்லைக்காண்! ஆகலின், நீயும் மருளில்லா மனத்தினையாகித் தெருளுதி; திருவறத்தைப் புரிதி' என்று அறவுரை பலவும் அறைந்தான்.

ஆதித்யாபனது அறவுரையைத் தெளிந்து கொண்ட வித்துத்தந்தன், உள்ளத்துக் கறுவு விடுத்து, அவனை வணங்கி, 'அரசன்மேற் கறுவுகொண்டு பிறவி தோறுஞ் செய்த தீமை நீங்கும்வழி அருள் செய்ய வேண்டும்' என்று வேண்ட, அவன், இறைவனாகிய சஞ்சயந்தமுனிவர் திருவடிகளில் நறுமலர் தூவி, "நமோ" எனப் பரவி, பிழை பொறுக்க வேண்டுதி' என்றான். அவ்வாறே வித்துத்தந்தன் சஞ்சயந்த ரடிகளில் வீழ்ந்து வணங்கி, தன் பிழைகளைப் பொறுக்கு மாறு வேண்டி, மீண்டான். ஆதித்யாபனும் தன்னுலகை யடைந்தான்.

68057

12. மேருமந்தரர் வீடு பெற்றது

போதுந் தளிரும் மிண்டி, வண்டும் மிஞிறும் பாட, தாதும் தேனும் வீயுந் தண்டலை சூழ்ந்த உத்தரமதுரை என்னும் அணிநகர் ஒன்று உளது. அந்நகரில், பல நிலைகளையுடைய உயர்ந்த மாடங்களும், மச்சு மாளிகைகளும் ஓங்கி விளங்கும். ஆங்கண், ஓங்கிய மாடங்களில் கட்டிய துகிற்கொடிகள், முகிற்குலம் படிய நனைந்து, அகிற்புகை தழுவ உலர்ந்து ஆடும். அந்நகரத்தில்,

"காயக் கண்டது சூரிய காந்தி
கலங்கக் கண்டது வெண்டயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறிக்கக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்கதிர்ச் செந்நெல்
தணிப்பக் கண்டது தாபத ருள்ளம்
தேயக் கண்டது உரைத்திடு சந்தனம்
சிதறக் கண்டது தேமாந் தேறல்."

ஆங்கு, மறையவரே தீத்தொழில் பயில்வர்; மாலைகளே வாடும்; களிறுகளே நிகளம் பெய்வன; அரிச்சூடுகளே அடிபடுவன.

இத்தகைய வளம்பல மிக்க அந்நகரத்தில், அனந்தவீரியன் என்னும் அரசர்கோமான், நனந்தலை யுலகின் நவைதீர அரசு புரிந்தான். அவன், மேருமாலினி, அமிர்தமதி என்னுந் தேவியரிருவரோடு இன்பவாரியுள் திளைத்து, உவப்புடன் வாழ்ந்துவந்தான்.

அந்நாட்களில், ஆதித்யாபன் மேருமாலினி வயிற்றிலும், தரணேந்திரன் அமிர்தமதியின் கருவிலும் புதல்வராய்த் தோன்றினர். புதல்வர்க்கு முறையே

மேரு எனவும் மந்தரன் எனவும் பெயரிட்டு, அன்புடன் பேணி வளர்த்து வந்தனர். இருவரும் தவிசிடைத் தவழ்ந்தும், நிலத்திடை நடந்தும், சீயக் குருளைகள்போல் திண்மையும் வன்மையும் உடையராய் வளர்ந்து, கலைகள் கற்று, களிறு தேர் முதலிய ஊர்ந்து, வாள் வில் முதலிய பயின்று, வல்லராயினர். அவர், தமது இளமைப்பருவத்திலேயே தியானத்தால் பிறவியின்நிலைமை யுணர்ந்து, காயத்தி னுவர்ப்பும் இன்பத்தின் வெறுப்பும் உடையராயினமையின், நிலையாமை முதலியவற்றை நினைந்து, உலகவின்பத்தில் உளங்கொள்ளா திருந்தனர்.

அக்காலத்தில், விமலதீர்த்தங்கரர் என்னும் பரமதேவர், அவ் வுத்தரமதுரையின்கண் ஒரு காவகத்தை யடைந்தார். இறைவர் ஆண்டெழுந்தருளுதலை யறிந்த வானோர், அகன்ற மண்டபமொன்றனைச் சமைத்து, அதனைச் சூழத் திருவீதியை அமைத்தனர்; நறுந்துகள் நீக்கி, நறுநீர் தெளித்தனர்; மருமலர் தூவினர்.

விமலர், நறுமலர்மிசை யெழுந்தருளும் பொழுது, இந்திரன் முதலிய இமையவர் வந்து வணங்கினர்; கின்னரமகளிர் யாழ் குழல் வீணை முதலியன ஏந்தி இசைத்தனர்; அரமகளிர் நடம்பயின்றனர். முரசம் முழவம் மொந்தை செகண்டை திமிலை காளம் சங்கம் தண்ணுமை முதலியன முகிலொலி கரப்ப ஒலித்தன. அறிவர், கமலமலரில் திருவடி மிதித்தலும், திங்கள் முக்குடை செறிந்தன; சாமரை யிரட்டின; வானவர் மலர்மழை பொழிந்தனர்; மாதவர் எழுந்து பணிந்தனர்; மாந்தர்கள் முகமலர்ந்து வணங்கினர்; மூகர் மொழிந்த

னர்; முடவர் நடந்தனர்; செவிடர் கேட்டனர்; குருடர் விழித்தனர்; அரவும் நகுலமும் உறவாடின; மானும் புலியும் மருவின ; களிறும் மடங்கலுங் கலந்தன. இவ்வாறு பிறவிப்பகையும் தவிர்வன வாயின. உலகில் இடர்கள் இரிந்தன. ஆகலின், அனைவரும் ஆங்காங் கெதிர்கொண்டனர்.

இவ்வாறாக விமலர் எழுந்தருளல் கண்டோர் சிலர், விரைந்து சென்று, குமரரிருவர்க்குக் கூறினர். அவரும் எழுடி நடந்து இறைவனை இறைஞ்சி, வரவு கூறினோர்க் குப் பலகலன்களை நல்கி விடுத்து, 'நாம், இறைவனடி களை இறைஞ்சச் சேறும் எழுக' என்று பணித்தனர். உடனே, சங்கம் முரல, முரசம் முழங்க, அரசர் தொடையல் எந்தித் துரங்கத்தின்மேலும் தும்பியின் மேலும் ஏறிவந்து, நிலமகள் நெளிய நிரந்தனர்; மாத ரார், சந்தனக்குழம்பும் குங்குமக்குழம்புஞ் செப்புக் களிலேந்தி, அகிற்புகை புகைத்து அருகணைந்தனர்.

அரசிளங் குமரரிருவரும் வேழத்தெருத்தில் ஏறி, மணியும் பொன்னும் ஏந்திச் சென்றனர். சென்றவர், இறைவர் கோயிலைத் தொலையிற் கண்டதும் யானையி னிழிந்து, சாமரம் முதலியன விட்டு, நடந்து சென்று, மதிலைக் கடந்து, முதல்நிலத்தின் அகத்திற் புகுந்தனர். ஆங்கு வீதிநடுவண், தோரண முதலியன சூழ்ந்த மானஸ்தம்பங்கள் நான்கனையும் வணங்கி, இரண்டு, மூன்று, நான்காம் நிலங்களைக் கடந்து, ஐந்தாம் நிலத்தை அடைந்தனர். ஆங்கண், கோயில்மதிலைச் சூழ்ந்து, சிங்கம் யானை மாலை மஞ்ஞை அன்னம் கலுழன் ஏறு கமலம் மகரம் ஆழி என்னும் பத்துவகைப் பதாகைகள்

வானமாகிய பரவைக்கண் வெண்டலைப்புணரிபோல அசைந்தாடுதலையும், அரங்கங்களில் பவணமகளிர் நடனம் புரிதலையுங் கண்டு, வேந்தரிருவரும் மரபின் எய்தி, கல்யாணகோபுர மதிலைக் குறுகினர். அம்மதிற்கண் உள்ள நான்கு கோபுரங்களும் ஏழு நிலையவாய், ஏழு பவத்தொடருங் காட்டுங் கண்ணாடிகளை இருமருங்கிலு முடைய வாய்தல்களை யுடையவாய், பெருவிலை மணி மாலைகள் தாழ்ந்தனவாய், பிறங்கி யொளிரும். உலக பாலர் என்னும் வானவர் அவ்வாய்தலிற் காவல் செய்தனர். குமாரிருவரும் அவ்வாயிலைக் கடந்து, ஆறும் நிலத்தின் உட்பக்கம் புக்கனர்.

ஆங்கண், நான்கு திசைகளிலும் நந்தை பத்திரை சயந்தை பூரணை என்னும் நான்கு வாவிகள் விளங்கின. அவற்றின் நீரைத் தம்மேல் தெளித்துக் கொள்பவர், தம் முற்பிறப்பினையும், முன் பின் ஏழு பிறப்பினையும், தாம் நினைத்தவற்றையுங் காண்பர்; தந்நோயும் ஒழியப்பெறுவர். ஆங்கு, மணமருத சோலை, பலவகை மரங்கள் செறிந்து துலங்கும். அப் பொழிலில், மலர்களும் கனிகளுஞ் செறிந்த கிளைகள் பொறையினால் தளர்ந்து ஒசியும். அவற்றைக் கண்டு வண்டினங்கள், அவற்றின் பொறையைத் தவிர்ப்பவை போலப் பறந்து திரிந்து தேனை வாங்கும். அப்பொழிலினைக் குறுகின், துறக்கத்தவர்களும் தம் இருக்கையை மறப்பர். இன்னும், ஆங்காங்குள்ள பளிக்கறைகளைப் பார்ப்பவர் அவை வெள்ளப்பரப்பென்று கருதி மீள்குவர்; ஒளிப்பிழம்பினைக் கண்டு பித்திகை எனச் செத்துச் செலவொழிந்து நிற்பர்; வாவிகளைப் பளிக்குத்

தலமெனக் கொண்டு அவற்றில் அடிவைத்து நீரில் விழுவர். கதிர்மணி மாடங்களைக் காண்போர், தம் சாயையைக் கண்டு எதிரே வருபவராகக் கருதி, இடைந்து இடைந்து ஒதுங்கி நிற்பர்.

இன்னும் அவ்விடத்தில், ஒருபால் வரையினைப் புரையும் மாளிகைகளும், ஒருபால் பருதியொளியைத் தெறலுறும் மண்டபங்களும், ஒருபால் பாடல் பயில்வோர் பாடுமிடங்களும், ஒருபால் நாடகம்புரிவோர் ஆடுமிடங்களும், ஒருபால் ஆடவர் பலரும் கூடுமிடங்களும் அமைந்திருந்தன. ஒருசார் கோடியர் செய்குன்றுகள்; ஒருசார் வேதிகைய கூடங்கள்; ஒருசார் பூவல்லியில்லங்கள்; ஒருசார் தேஞ்சொல்லார் ஊஞ்சல்கள். ஒருபக்கம் மலையனைய மாதவர்; ஒருபக்கம் நிலை தவறு மவுனிகள்; ஒருபக்கம் தருமநெறி விரோசனர்; ஒருபக்கம் வெயில்மழையி னீங்காத தவசிகள். ஒருழை பட்சோபவாசியர் முதலிய நோன்பியர்; ஒருழை உள்ளந் தமக்காக்கிய யோகியர். ஒருதேத்து அவதி ஞானியர்; ஒருதேத்துக் கைவல்யம் கைவந்தவர்; ஒரு தேத்து வான்வழி யேகுஞ் சாரணர். ஒருபாங்கரில் வேதமோதுநர்; ஒருபாங்கரில் வாதஞ் செய்குநர்; ஒரு பாங்கரில் கேட்டன தெளிகுநர்; ஒருபாங்கரில் தியானஞ் செய்குநர்.

இத்தகைய இயல்பினையுடைய முனிவனத்தைக் குமரரிருவருங் கண்டு, இறைஞ்சி யேத்தி, ஏழாம் நிலத்தின் உம்பரதாகிய ஜயாசிரய மண்டபத்தை அடைந்தனர். ஆங்கு, நிறைமதி தோன்றக் கடலோதம் வெளியேறுதலும் ஆற்றுநீர் உட்புகுதலும் போல,

வெளிச்செல்வாரும் உட்புகுவாரும் மிடைந்து, இடைவெளியின்றி நிறைந்திருந்தனர். அம்மண்டபத்தின் உட்புறத்தில் உள்ள பொற்பீடத்தின் நடுவண், இந்திரத் துவசம் என்னும் கொடிகள் ஓங்கி ஒளிர்ந்தன. குமரர் அக்கொடியிடத்தைக் கடந்து உட்புக்கனர். ஆங்கு, ஆயிரக்கால்மண்டப மொன்று இறைவன் கோயிலின் எதிரில் இலங்கிற்று. அம்மண்டபத்துள் மணிப்பீடிகையின்கண், சுருதக்கடலே ஒரு வடிவு கொண்டாற்போன்று விளங்கிய மேதையாளை வலப்பால் வைத்து, தாரகை நடுவட் டிங்கள்போல மாதவர் நாப்பண் சுருதகேவலி என்பவர் அமர்ந்து, உயிர்களுக்கு அறத்தைத் தெரித்துக்கொண்டிருந்தார்.

வேத்திளங்குமரர், அவரை வணங்கி, ஆங்குநின்று உட்புக்கு, அங்கேயுள்ள பலிபீடத்தைக்கண்டு, வாயிலுட்போந்து, ஆங்கு நிதிக்கோன் நின்று எஞ்ஞான்றும் ஈகை புரிகின்ற மண்டப மிரண்டனையுங் கண்டு, கடந்து சென்று, ஸ்ரீநிலயம் என்னுங் கோயிலைக் குறுகினர். அக்கோயிலைக் காண்போர், ‘இவ்விடம் இவ்வண்ணமாயிருப்பின் நன்று’ என்று எண்ணின், அவ்விடம் அவ்வண்ணமாக அமைந்து தோன்றும். ஆங்கு, இறைவனது நான்முகம்போல நான்குவாயிலை யுடைய மண்டபங்கள் நான்கும் ஓங்கி ஒளிரும்; முரசும் சங்கும் முழங்கும்; வாய்தலின் இருமருங்கினும் கந்தருவமாதர் இன்னிசை யெழுப்புவர்.

திருநிலையத்தின் மேலிடத்தில், இரவி உதயஞ் செய்ததுபோலப் பொற்கும்பம் உயர்ந்து இலங்கும். ஆங்கு, **கந்தகுடி** மண்டபம் என்னுஞ் சிறந்த மண்ட

பம் நாற்புறமும் முத்துமாலைகள் நாலப்பெற்றுக் கவின் செய்யும். அம்மண்டபத்தைச் சூழ, மார்பள வுயர்ந்த சுவர்களையுடைய இருக்கையில், இறைவன்கணங்கள் தங்கியிருக்கும். கந்தகுடி மண்டபத்தின்மேற்பால் த்வஜ பீடத்தின்மேல் நிலைபெற்று ஓங்கியுயர்ந்த அசோகு, எல்லாப் பருவங்களிலும் கடிமலர் மிடைந்ததாய், அம்மண்டபத்தைச் சூழ்ந்து குலாவும். முத்துக்கள் விளிம்பிற் செறிக்கப்பட்டனவாய், நிறைமதி போன்று ஒளிரும் மூன்று கவிகைகள் கவிந்து மேனின்றன. ஆங்கண், வானவர் பூமழை பொழிய, மாதவர், துறக்க மாதர், தவம்புரியும் அங்கனையர், சோதிட தேவமாதர், வியந்தர தேவமாதர், பவண தேவமாதர், பவணர், வியந்தரர், தேவர், சௌதர்மகற்பத்தேவர், அரசர், சொல்வன அறியும் விலங்கு என்பன பன்னிரு கணங்கள் சூழ, தாரகை நடுவட் டிங்கள் போன்று வீற்றிருந்த விமலரைக்கண்டு, மேருவினை வலஞ்செய்யும் ஞாயிறு திங்கள்போல, மேருவும் மந்தரனும் வலங்கொண்டு மலர்தூவி வணங்கி, மண்டபத்தினுட் புகுந்தனர்.

உட்புக்கு இறைவனைக் காணலும், கரங்கள் குவிந்தன ; கண்ணீர் சொரிந்தன ; புளகம் பரந்தன ; உள்ளம் விரிந்தன ; காதல் சுரந்தது ; அடிபெயர் வொழிந்தது. வினைகளும் இரவிமுன் இருள்போல இரிந்தது. இருவரும், இறைவன்முன் நின்ற தருமசக்கரபீடத்தின்மேல் ஏறி வலங்கொண்டு, அர்ச்சனை செய்து வீழ்ந்தெழுந்து ஏத்திப் பழிச்சுவாராயினர்.

“ ஆதியாய் ஆதியிலாய் அந்தமாய் அந்தமிலாய்
அடையா தெய்தும்
போதியாய் போதியிலாய் புறத்தாயெப் பொருளினுக்கும்
அகத்தாய் மூன்று

சோதியாய் சோதியிலாய் சுருங்காதாய் பெருகாதாய்
தோன்று மாயா
நீதியாய் நீதியிலாய் நினைப்பரியாய் வினைப்பகையெம்
இறைவன் நீயே.''

என்பன பலகூறிப் பரசி, தம் வினைகள் வேர றஎண்ணி, 'பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குத் தெப்பமாகிய திருவுரு அருளுதி' என்று இறைஞ்சி, தம் முடிகள் கடகம் பொற்பூண் காஞ்சி முதலியவற்றை வாங்கிவிட்டனர். அவை, விளக்கின்முன் சுடர்ப்பொறிபோல் இமைத்து விழுந்தன. பின்னர், அறிவன் முதலிய ஐம்பதங்களை நவின்று, தமது குஞ்சியை நெறிமுறையின் நீக்கினர். மயிரும் அணிகளும் வாங்கி, இலையும் மலரும் ஊழ்த்த கற்பகம்போல நின்ற மேருமந்தர ரிருவரும், இருவகைப் பற்றும் விடுத்து, உவத்தல் காய்தல் இன்றி, ஒழுக்க நீரில்முழுகி, மாதவச்சாந்து மட்டித்து, குணமணிகளைப் பூண்டு, சீலமாலை சூடி, சினேந்திரனுக்கு இளவரசாகச் சுருதகேவலி என்னும் பட்டம் பெற்றனர். அப்பொழுது வானவர், மாலையும் சாந்தமும் ஏந்தி வாழ்த்தினர்.

சுருதகேவலிகள், இறைவனை இறைஞ்சி, 'எம்மான், உலகத்தின் இயற்கையும், பொருள்களின் அளவும், பிறவியின் வேறுபாடும், வீட்டின் பெற்றியும் அருள் புரிதல் வேண்டும்' என்று வேண்டினர். வேண்டுதலும், கேவலத்திரு விடுத்த தூதுபோலச் சொன்மகள் எழுந்து, அவ் விருவர்தம் மனத்தையடைந்து, அனைவருக்குங் கேட்கும்படி அறிவித்தாள். தாம் வினய பொருள்களெல்லாம் நன்கு தெளியப் பெற்ற சுருதகேவலிகள், தனித்தனியே நாற்பத்-

திரண்டு ஆகமங்களாக அருளிச்செய்து, அவற்றை முனிவர்களுக்கு ஓதினர்.

அவ்வாறு ஓதி, விமலதீர்த்தங்கரரின் பன்னிரண்டு கணங்களுக்குந் தலைவர்களாகிய மேருமந்தரரிருவரும், தம் வினை கெடுக்க எண்ணி, இனத்திடைப் பிரிந்து போகும் ஏறுகள் போல அக்கணங்களிற் பிரிந்து, கானங் கெழுமிய வரையினது உச்சியைச் சார்ந்து, குறைப்பவர்க்கும் நிழலைத் தரும் மரத்தைப் போன்றும், அரைப்பவர்க்குங் குளிர்ச்சி செய்யும் ஆரத்தைப் போன்றும் இன்னா செய்தார்க்கும் நன்மையே செய்து, பொறையினை மேற்கொண்டனர். அவர், ஆர்வமும் செற்றமும் இன்மையின், உயிர்களுக்கு உறுதியல்லாதன சொல்லார்; சோர்ந்தேனும் ஒருவிய புலத்திற் செல்லார்; மாதரை நோக்குதலும், புகழ்தலும், அவர் அட்டதனை ஆதரித்துண்ணுதலும், அவரிருக்குமிடத்தில் உறைதலும், அவர் சொற்களை விழைந்து கேட்டலும், சிரித்தலும், அவர்தம் விழைவினை நோக்குதலும் செய்யார்; இருத்தல் கிடத்தல் நிற்றல் இயங்குதல் முடக்குதல் நீட்டுதல் முதலியவற்றான் எவ்வுயிர்க்குந் தீமை நேராவண்ணம் பேணிக்கொள்வர்; முன்னும் பின்னும் நுகத்தளவு நோக்கி உயிர்களை யோம்பிச் செல்வர். இருவரும் இவ்வாறு விரதம் பேணி, பஞ்சபரமேஷ்டிகளைப் பணிந்து, தடவரைச்சூளி போன்று அசைவின்றி, வெயிற்காலத்தில் யோகு பயின்றிருப்ப, மரங்கள் மலர்கொண்டு பணிந்தன; பனிக்காலத்தில் பங்கயங் கூம்ப, மனமலர் மலர்ந்தன; கார்காலத்தில் மரங்களைச் சார்ந்திருப்ப, வானஞ் சொரிந்தன. பின்

னர் இம் முக்கால யோகத்தை விடுத்து, இருது, அயனம், வருடம் இவற்றை எல்லையாகக் கொண்டு, முக்கரணமுஞ் செறித்து, யோகுபயின்றனர்; பயின்று, வினைகளை வென்று, பின்னுந் தியானத்தினல், பசித்தல் மூத்தல் துயிலல் முதலியன இல்லாமே, இளஞாயிறு போன்று பிறப்பிருளைத் தூர்த்தனர்; பின்னர், அச்சம் பகை பணித்தல் ஆர்வம் செற்றம் கவர்ச்சி சோகம் வியப்பு வெகுளி வேர்ப்பு விருப்பு மயக்கு தெளிவு வருத்தம் களிப்பு மாயம் முதலிய எல்லாவற்றையும் எறிந்து இலங்கினர்.

அப்பொழுது, அமரர்தம் முடியும் ஆசனமும் துளங்க, அவர் இந்திரனேடு வானமும் விண்ணும் மறைய வந்தனர். முரசம் முழங்கின; வளைகள் முரன்றன; காளம் இயம்பின; பூமழை பொழிந்தன; பதாகை நிரந்தன; ஏத்தொலி எழுந்தன; நரம்பொலி பொலிந்தன; அரம்பையர் நடம்புரிந்தனர். அமரர்தம் கரங்கள் குவிந்தன; கண்கள் நீர்சொரிந்தன.

இவ்வாறு இமையவர் குழுமி இருவர்தம் இணையடி பணிந்தனர். இந்திரன், பிண்டி குடை அரியணை சாமரை முதலிய பிறவும் அமைத்தான். விஞ்சையரும், மண்ணவரும், பிறரும், சாந்து தூபம் நறுமலர் முதலியன ஏந்தி, அவ்விருவர் பாதமும் பணிந்தெழுந்தனர். பின்னர், வானவர் முதலியோரனைவரும்,

"உயர்வற வுயரிய உலகினின் உயிர்களின்
அயர்வற அறவமு தருளுவ அமரர்கள்

மயர்வற மணிமுடி யணிவன பணிவார்
துயர்வற எறியுநம் துணையடி தொழுதும்."

என்பன முதலிய வாழ்த்துக்களை வாழ்த்தி, வணங்கினர். அப்பொழுது அவ்விருவரும் எல்லா வினைகளுங் கெட, மூவுலகத்தினும் உம்பராதாகிய சித்திக்ஷேத்திரத்தை யடைந்தனர். விண்ணவரும் மண்ணவரும் அவர்தம் திருமேனியைச் சேவித்து, பொன்னரிமாலை பூமாலை சுண்ணம் தூபம் சாந்தம் முதலியன ஏந்தி இறைஞ்சும் எல்லையில், அம்மேனி மின்னென மறைந்தன. அதனைக் கண்டோர் அனைவரும் வியந்து பன்னருந் துதியிற் பழிச்சிப் பணிந்தனர்.

" அறமல துறுதிசெய் வார்கள் தாமிலை
மறமலா திடர்செய வருவ தும்மிலை
நெறியிவை இரண்டையும் நினைந்து நித்தமும்
குறுகுமின் அறநெறி குற்றம் நீங்கவே."

" ஆக்குவ தேதெனில் அறத்தை யாக்குக
போக்குவ தேதெனில் வெகுளி போக்குக
நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக
காக்குவ தேதெனில் விரதம் காக்கவே."

குறிப்புரை

வசனம்

அகடு = வயிறு.
அகதி = நான்கு கதிகளும் அற்றது; வீடு.
அகப்பரிசை = மனத்தைப்பற்றி வரும் துன்பம். அது, வேட்கை முதலிய பதின்மூன்று என்பர்.
அங்கதம் = தோளணி.
அங்கிதவாழி = அடையாள மோதிரம்.
அசதியாடி = பரிகாச வார்த்தை பேசி.
அடையலர் = பகைவர்.
அநித்தம் = தத்துவப்பொருள் அநித்தம் என்னும் வாதம்.
அமளி = மெத்தை.
அரந்தை = துன்பம்.
அரவம் = ஓசை.
அரிச்சூடு = நெல்லரிச்சூடு.
அருக்கன் = சூரியன்.
அலமருவேன் = சுழல்வேன்.
அவாச்யம் = தத்துவப்பொருள் சொல்ல இயலாத தன்மையது என்னும் வாதம்.
அழல் = தீ.
அழுங்குவர் = இரங்குவர்.
அளி = வண்டு.
அற்றம் = சமயம்.
அனந்த ஞானம் முதலியன - அனந்த ஞானம், அனந்த தர்சநம், அனந்த சுகம், அனந்த வீர்யம் என்பன.
ஆர்த்தம் = துக்கம்.
ஆலை = கரும்பு யந்திரம்.
ஆழி = சக்கரம்.
ஆற்றல் மூன்று = மூன்று சக்தி; உத்ஸாஹசக்தி, பிரபுசக்தி, வித்யாசக்தி என்பன.
இடும்பை = துன்பம்.
இயம் = வாத்தியம்.
இரலை = மான்.
இருவாம் = நாம் இருவரும்.
இவர்ந்து = எறி.

இவுளி = குதிரை.
இளையர் = ஏவலாளர்.
இறை = சிறிது.
இறைமை = தலைமை.
ஈர்த்தனர் = இழுத்தனர்.
உசாவுதல் = ஆராய்தல், ஆலோசித்தல்.
உடற்றுவான் = வருத்துவான்.
உடன்று = கோபித்து.
உம்பர் = உச்சி, மேலிடம்.
உம்பர்கோன் திருவில் = இந்திர தனுசு ; வானவில்.
உயிர் முதலியன ஒன்பது : அவை - உயிர், உயிரல்லது, புண்ணியம், பாவம், ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு, கட்டு, வீடு என்பவை.
உரகம் = மார்பினாற் செல்வது ; பாம்பு.
உரவோர் = அறிவுடையோர்.
உரும் = இடி.
உவர்ப்பு = அருவருப்பு.
உழை = மான்.
உழைஞர் } = பக்கத்தி லிருப்பவர் ;
உழையர் } ஏவலர்.
ஊதியம் = லாபம்.
ஊழ்த்தன = உதிர்த்தன.
ஊறு = இடையூறு.
எடுத்துக்காட்டு = திருஷ்டாந்தம்.
எடுப்பி = எழுப்பி ; கட்டி.
எண்குணம் - அனந்த ஞானம், அனந்ததர்சநம், அனந்த வீரியம், அனந்த சுகம், நாமமின்மை, கோத்திர மின்மை, ஆயுவின்மை, அழியா இயல்பு.
எண்வகைக் கருமங்கள் = ஞானாவரணீயம் முதலிய **காதி கருமங்கள்** நான்கும், நாமம், கோத்திரம், ஆயு, வேதநீயம்(வேதனையுண்டாக்குவது) என்னும் கருமம் நான்குமாம்.
எதிர்மறை யிலக்கணையாவது: மூடனைக் குறித்து, 'இவன் மிக்க அறிவுடையவன்' என்பது போல்வது.
எருவை = கழுகு.
எல்லி = இரவு.
எல்வை = சமயம்.
எவன் = யாது.

எழில்=அழகு.
எழிலி=மேகம்.
எழு நிலம்=ஏழு நரகங்கள்.
எறுழ் வலி=மிக்க வலிமை.
ஏறு=காளை.
ஐ=கோழை; சிலேட்டுமம்.
ஐந்தெரி=நாற்றிசையிலுமுள்ள குண்டங்களின் தீ நான்கும் வெயில் ஒன்றும்.
ஐம்பொன்=பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு.
ஐயர்=இருடிகள்.
ஐயன்=அண்ணன்.
ஐவகைத் தாயர்=பாலூட்டுந் தாய், உணவூட்டுந் தாய், பாராட்டுந் தாய், கைத்தாய், செவிலித்தாய் என்பவர்.
ஒக்கல்=சுற்றத்தார்.
ஒருபான் திங்கள்=பத்து மாதம்.
ஒற்றுமை=தத்துவப்பொருள் ஒன்றே(அபின்னம்) என்னும் வாதம்.
ஒன்பது வகை யோகம் - மனம், வாக்கு, காயம், கிருதம் (தான் செய்தது), காரிதம் (தான் செய்வித்தது), அநுமோதம் (பிறர் செய்ததை ஆமோதித்தல்), ஸம்ரம்பம், ஸமாரம்பம், ஆரம்பம் என்பன.
ஒன்னார்=பகைவர்; ஒன்றார் என்பதன் மரூஉ.
ஓங்கல்=யானை.
ஓர்ந்து=நினைந்து.
கட்காதவர்=களவு செய்யாதவர்.
கடும் பற்றுள்ளம்=உலோபம்.
கடுவளி=கடுங்காற்று
கதம்=கோபம்.
கதழ்ந்து=விரைந்து.
கரப்பேன்=மறைப்பேன்.
கரவு=களவு.
கரி=சாட்சி.
கலம்=கப்பல்.
கலிங்கம்=உடை
கவ்வை=பேரொலி.
கவறுடுதல்=சூதாடுதல்.
கவன்று=கவலைப்பட்டு.

கழிபெருங்காதல் = மிக்க காதல்.
கள் = தேன்.
களிப்பு = செருக்கு.
கறிக்கும் = கடிக்கும்.
கறுவு = பழம் பகை, வைரம்.
கனலி = தீ.
காகளம் = எக்காளம்.
காசம் = ஒருவகைப் பளிங்கு.
காஞ்சனக்குகை = பொற்குகை.
கார்முகம் = வில்.
கால் = காற்று.
கால்யாப்ப = காலில் தளையிட ; கால்கட்ட.
காளம் = கறுப்பு ; பிற உலோகங்களின் சேர்க்கையா லாய மாசு.
கான்று = உமிழ்ந்து ; கக்கி.
கானெரி = காட்டுத்தீ.
கிளந்து = சொல்லி.
குடசம் = வெட்பாலை.
குடுமி = மத்தகம்.
குயிற்றப்பெற்று = பதிக்கப்பெற்று.
குரம்பை = குடிசை.
குறங்கு = தொடை.
குறுவர் = பறிப்பர், பறிக்கப்போவர்.
கூன்சிலை = வளைந்த வில்.
கைம்மா = கையுள்ள மிருகம் ; யானை.
கையுறை = கையில் வைத்திருப்பது ; காணிக்கை.
கைவல்ய பதவி = கேவல ஞானத்தை யடைந்த நிலை.
சதுரன் = சாமர்த்தியமுள்ளவன்.
சரமசரீரம் = கடைசி யுடம்பு. அஃதாவது, இறுதிப் பிறப்பின் உடல்.
சரிகை = சரியை மார்க்கம்.
சல்லகீ = யானை விரும்பித் தின்னும் ஒருவகை மரம்.
சாணக நீர் = சாணித்தண்ணீர்.
சாயை = ஒளி.
சார் = வரிசை.
சிலை = வில்.
சிறை = சிறகு, அணை
சீயம் = சிங்கம்.

சுருங்கைவழி=சுரங்க வழி.
சுருதகேவலி=சாஸ்திரங்களினால் கேவலஞானத்தை யடைந்தவர்.
சூகரம்=பன்றி.
சூளி=உச்சி.
சூன்யம்=தத்துவப்பொருள் சூன்யம் என்னும் வாதம்.
சூக்ஷ்மகாய யோகம்=சூக்ஷ்மசரீரத்தோடு கூடியிருக்கும் நிலை.
செகண்டை=ஒரு வாத்யம்; செயகண்டை என்பதன் மரூஉ.
செத்து=கருதி.
செல்=மேகம்.
செற்றம்=பகை.
செற்று=கெடுத்து.
செறிவு=அடக்கம்.
சென்னி=தலை.
சேடி=வரிசை.
சேல்=சேல் மீன்.
சேஷை=மங்கலத்துக்காக இடும் அரிசி.
சோதரன்=(ஸ+உதரன்) ஒரே வயிற்றிற் பிறந்தவன்.
தஞ்சம்=பற்றுக்கோடு.
தண்ணுமை=மத்தளம்.
தரணேந்திரன்=நாகர்களுக்கு அரசன்.
தரளம்=முத்து.
தன்னியல்பு=ஆத்மஸ்வபாவம்.
தாபம்=வெப்பம்.
தாமம்=மாலை.
தாலம்=சட்டி, உண்கலம்.
தாழ்த்தல்=தாமதித்தல்.
தானவர்=தனுவின் வயிற்றிற் பிறந்தோர்; அவுணர்.
திமிலை=பம்பை என்னும் மேளம்.
தீத்தொழில்=வேள்வி.
துகில்=உயர்வான உடை.
துஞ்சுதல்=இறத்தல்; மங்கல வழக்கு. நிலைபெறுதல் என்பது அதன் பொருள்.
துய்த்தல்=அனுபவித்தல்.
துறந்தோர் சூழல்=துறவிகள் இருப்பிடம்.
துனைவு=விரைவு.

தெவ்வேந்தர்=பகையரசர்.
தேறல்=தெளிந்ததேன்.
தோற்றம்=பிறப்பு.
நகுலம்=கீரி.
நவின்று=பழகி.
நாய்கன்=வாணிகன்.
நால்வகைக்கதி=தேவகதி, மானிடகதி, நரககதி, விலங்கின்கதி.
நால்வகைக் காதிகருமம்=ஞானுவரணீயம், தர்சநாவரணீயம், மோகநீயம் (மோஹத்தை உண்டாக்குவது), அந்தராயம் (இடையே தடுப்பது).
நாள் உலந்தது=வாணுள் தீர்ந்தது.
நிகளம்=தளை.
நித்தம்=தத்துவப்பொருள் நித்தம் என்னும் வாதம்.
நிரயம்=நரகம்.
நிருபர்=நரர்களைக் காப்பவர் ; அரசர்.
நிழல்=ஒளி.
நீகாமர்=மாலுமிகள்.
நுனை=நுனி.
நூறி=அழித்து.
நெபம்=வ்யாஜம்; சாக்கு.
நென்னல்=நேற்று; நெருநல் என்பதன் மரூஉ.
பகர்ந்து=விற்று.
பகழி=அம்பு.
பகிராது=பிரியாது, இடைவிடாது.
பஞ்சமந்திரம்=அருகன், சித்தன், உபாத்யாயன், ஆசாரியன், சாது என்னும் ஐவரை வணங்கும் ஐந்து மந்திரம்.
படர்=துன்பம்.
படர்ந்து=சென்று.
படிமம்=தவவேடம்.
படைக்கலக் கொட்டில்=ஆயுதச் சாலை.
பண்ணவர்=முனிவர்.
பணி=ஆபரணம்.
பதங்கம்=விட்டில்.
பதாகை=கொடி.
பரசி=வழுத்தி, வாழ்த்தி.
பரவை=கடல்.

பரிசனம்=ஏவலர்.
பரிந்து=நீக்கி.
பருதி=சூரியன்.
பவணலோகம்=நாகலோகம்.
பவம்=பிறப்பு.
பறழ்=புலிக்குட்டி.
பாத்து=பகுத்து, பகிர்ந்து.
பாந்தர்=வழிப்போக்கர்.
பாந்தள்=பாம்பு.
பாய=பரவிய.
பாரணை=விரதம் முடிந்தபின் உண்ணும் ஊண்.
பாறல்=கெடுதல்; ஓடுதல்.
பாறு=பருந்து.
பானிற அறுவை=வெண்ணிற உடை.
பிடி=பெண்யானை.
பிண்டி=பிண்ணாக்கு.
பிண்டிபாலம்=எறியும் ஆயுதம்.
பிண்டி வேந்தன்=அருகன்; பிண்டி=அசோகு.
பித்திகை=பிச்சி.
பிரமத்த குணம்=உன்மத்த குணம்.
பிலம்=குகை.
பீடிலாதோர்=பெருமையில்லாதவர்.
புரந்தரன்=இந்திரன்.
புலைசு=புலால்.
புளகம்=மயிர்ச்சிலிர்ப்பு.
புறப்பரிசை=உடலைப்பற்றி வருந் துன்பம். அது, வெப்பம், குளிர் முதலிய ஒன்பது என்பர்.
பூசல்=ஆரவாரம்.
பூதி=விபூதி.
பூவல்லி யில்லம்=பூங்கொடிகளா லமைந்த வீடு; லதாக்ருஹம்.
பூழை=நுழைந்து செல்லுஞ் சிறுவாயில்.
பெண்ணைக்கனி=பனம்பழம்.
பெரும்பிறிது=இறத்தல்.
பொழில்=சோலை.
பொறி=யந்திரம்.
பொறித்த=எழுதின.
பொறை=சுமை.

போகி=நெடிதாகி; மிகுதியாகி.
மங்குல்=மேகம்.
மஞ்சம்=கட்டில்.
மஞ்சரி=பூங்கொத்து.
மடங்கல்=சிங்கம்,
மந்திரம்=ஆலோசனை.
மரன் முதல்=மரத்தின் அடி.
மறுகு=தெரு.
மன்று=நியாய சபை.
மாசுணம்=பாம்பு.
மாய்த்தல்=மறைத்தல்.
மால்=மோகம்.
மாலை=இயல்பு.
மானப்புள்=ஈண்டுச் சாதகப் பறவை.
மானஸ்தம்பம்=சிறப்பிற்கு அறிகுறியாக நாட்டுந் தம்பம்.
மிஞிறு=வண்டு.
மிண்டி=நெருங்கி.
முழஞ்சு=முழை, குகை.
முனிமை=முனித்தன்மை.
மூகர், மூங்கையர் } =ஊமைகள்.
மூடம்=அறிவின்மை. அது மூவகைப்படும்: உலக மூடம், தேவமூடம், பாஷண்ட மூடம் என்பன.
மேதையாள்=அறிவுடையவள்.
மொந்தை=ஒருகண்பறை.
மோலி=முடி.
வடவை=வடவாமுக அக்கினி.
வடி=கூர்மை, மாவடு.
வண்டானம்=கொய்யடி நாரை.
வணர்=வளைவு.
வருக்கை=பலா.
வழும்பு=நிணம்.
வளை=சங்கு.
வாய்தல்=வாயில்.
வானவூர்தி=ஆகாய விமானம்.
வானாறு=ஆகாயமார்க்கம்.
விடங்கு=அழகு.
விரோசனர்=ஒளியுள்ளவர்.

விலங்கல்=குறுக்கே கிடப்பது; மலை.
விழுநிதி=சிறந்த பொருள்.
விழுமம்=இடும்பை.
விழையாதி=விரும்பாதை.
வீத சோகம்=சோக மற்றது.
வீந்துழி=கெட்டவிடத்து.
வீறு=மேன்பாடு.
வெஃகிய=ஆசைப்பட்ட.
வெண்டலைப்புணரி=வெண்மையை உச்சியில் உடைய அலை.
வெய்யவன்=சூரியன்.
வெருவுதல்=பயப்படுதல்.
வேதிகை=திண்ணை.
வேரம்=வைரம்; பகை.
வேரி=வாசனை.
வேற்றுமை=குணமும் குணியும் வேறு(பின்னம்) என்னும் வாதம்.

குறிப்புரை

செய்யுள்

பக்கம்

1. பெற்றி - தன்மை. உரை - மொழி; பாஷை. ஜினன் கூறியருளிய திவ்யமொழி ஒன்றே பதினெட்டு மொழியிலுங் கேட்கப்பட்டதாகலின் 'ஈரொன்பதாய தொன்றால் உரைத்தான்' என்றார். விமலன் - விமல தீர்த்தங்கரர். இவர், தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் பதின்மூன்றாமவர். தீர்த்தங்கராவார், முப்பத்துநான்கு சிறப்பியல்புகளை யுடையவர்.

3. வாமன் - அருகன். அருமை - கலைக்கு இடனும் அருமை. கணை ஐந்துடைத் திருமகன் - மன்மதன்.

22. செற்றவர் - பகைவர்.

25. தேன்றொடை - தேன்போல இனிய நீரையுடைய தாறு. போழ்ந்து - பிளந்து, பிளவுசெய்து.

30. கன்றிய - அடிப்பட்ட; மிகுந்த. வீயா விழுமம் - அழியாத துன்பம்.

31. சீர்த்தி - பெரும்புகழ். ஆயு - ஆயுள்.
அங்கம் - உறுப்பு. சிறைப்பிணி - சிறைச்சாலையில் தளைப் பட்டிருத்தல். வெங்கயம் - மத யானை. நுனை - கூர்மை. கொங்கு - பூந்தாது. தாரோய் - பூமாலையை யுடையவனே.
உய்க்கும் - செலுத்தும். வெருவுறு - அச்சம் பொருந்திய. அட்டு உண்ணு அகம் - சமைத்துச் சாப்பிடுதல் இல்லாத வீடு; எளிய குடி.

32. சிமிழ்ப்பின் வாங்கும் - வலைக்குட் பிடிக்கின்ற.

33. செறிவு - அடக்கம். இனி, நெருங்குதல், சேர்தல் எனலுமாம்.

38. ஈனம் - இழிவு. எச்சம் - சந்ததி. மானம் - பெருமை. துய்க்கின் - அனுபவித்தால். ஊனம் - குறைவு.

பக்கம்

41. திரியக்கு - விலங்கு. மறம் - பாவம். மாசு - குற்றம்.

43. உதவிவரைத்து - உதவியின் அளவினது. சால்பு-அமைதி.

45. எள்ளுவர் - நிந்திப்பர்.

48. மல் - மல்லர்.

50. எழுமை எழுபிறப்பும் - வினைத்தொடர்பால் உண்டாகும் எழு பிறப்பினையுடைய எழுவகைப் பிறப்பிலும். உள்ளுவர் - நினைப்பர். விழுமம் - துன்பம்.

51. எனது - என்னுடைய பொருள். செருக்கு - கர்வம். கச்சை - கழுத்திலிடுங் கயிறு. கடகரி - மதயானை. பிச்சம் - மயிற்பீலி. கவிகை - குடை.

52. எண்ணினன் - ஆலோசனை யுடையவன். விழுமியன் - சிறப்புடையவன்.

54. மூசுதேன் - மொய்த்த வண்டுகள். மஞ்ஞை - மயில். அலங்கலார் - மாலையையுடைய மகளிர்.

56. வீக்கிய வினையின் - பந்தித்த வினையினுலாகிய. அரண் - காப்பிடம்.

58. சாசாரன் - ஸஹஸ்ரார கல்பத்தினன். காணமெலாம் - மனோ வாக்கு காயம் என்னும் மூன்றும்.

61. நோற்கிற்பவர்க்கு - தவம் செய்பவர்களுக்கு.

62. வீக்கி - மிகுத்து. மாற்றினை - பிறவியை.

72. அறத்தின் ஊங்கு - அறத்தினும் மிக்க.

77. ஒன்னார்க்கு - பகைவர்க்கு. உழையர் - ஏவலர். பஞ்சசயன அமளி - ஐந்து பொருள்களா லமைத்த மெத்தை: ஐந்தாவன, 'சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், உறுதூவி சேக்கையோ ரைந்து' என்பதனால் அறியப்படும். மஞ்சின்மேல் - கட்டிலில். துகள் நிலத்து - தூளடைந்தவிடத்தில்.

84. கொழு - கொழுப்பு. குருதி - இரத்தம். தடி - தசை. வழும்பு - நிணம். ஈர் கோதையாள் - குளிர்ச்சியான பூமாலையை யுடையவள்.

85. உண்மையறிவு - ஊழ்வலியான் உண்டாகும் பேதைமையறிவு.

பக்கம்

86. அவம் - கேடு.

வேண்டியாங்கு - விரும்பியபடியே. எய்தலால் - அடைதலால்.

88. ஆர்வம் - அன்பு. வேரம் - வைரம். விளம்பிய - மேற்கூறிய ஆர்வமும் வேரமும்.

96. வாளரி - சிங்கம். உழுவை - புலி.

கம்பம் - சலனம், அசைவு.

97. கரி - சாக்ஷி.

100. அமலன் - மலமற்றவன். அசலன் - சலனமில்லாதவன். தமிலன் - ஒலிவடிவினன்; ஓங்கார வடிவினன். சுகதன் - சுகந்தருபவன்.

102. தாபதர் - தவஞ் செய்வோர்.

108. போதி - அறிவு.

112. மயர்வு - மயக்கம்.

உறுதி - நன்மை.

இந்நூலிற் கூறப்பட்டுள்ளோரின் வரலாற்றுச் சுருக்கம்

அகந்தனன் - ஸ்ரீபூதி என்னும் மந்திரி அரவாய்ப் பிறந்திருந்த போது பெற்ற பெயர் 48.

அதிபலன் - அயோத்தி யரசன்; இராணியவதியின் தந்தை 54.

அதிவேகன் I - வேதண்ட மலையின் தென்சாரிலுள்ள தரணி திலகம் என்னும் ஊருக்கு அரசன்; சீதரைக்குத் தந்தை 65, 66.

அதிவேகன் II - பிருதிவிதிலகம் என்னும் நகருக்கு அரசன்; அரதனமாலையின் தந்தை 74.

அபராஜிதன் - சக்கரபுரத்தரசன்; சக்கராயுதன் தந்தை 73, 74.

அமிர்தமதி - அனந்தவீரியன் மனைவி; **மந்தரன்** தாய் 102, 103.

அரதனமாலை - அதிவேகன் மகள் 74; வச்சிராயுதன் மனைவி 75; அரதனாயுதன் தாய் 75.

அரதனாயுதன் - வச்சிராயுதன் மைந்தன் 75; வச்சிரதந்த முனிவனால் துறவறம் பூண்டவன் 86.

அரிச்சந்திரன் - கிரணவேகனுக்கு அறவுரை கூறின முனிவன் 68, 69.

அருகதாசன் - அயோத்தி யரசன்; பலதேவ வாசுதேவர்களின் தந்தை 89, 90.

அனந்த வீரியன் - உத்தரமதுரை யரசன்; **மேரு மந்தரர்**களுக்குத் தந்தை 102, 103.

ஆதித்யாபன் - ஓர் அமரன் 17; சயந்தனுக்குப் பழம்பிறப்புக்களின் வரலாற்றைக் கூறினவன். இவனே, **மேரு** என்பவனாகப் பிறந்தான். மிருகாயணன் என்னும் வேதியன்றன் மனைவியாகிய **மதுரை** என்பவள், மறுபிறப்பில், சுரமை நாட்டு அரசனாகிய பூரணசந்திரனுக்கு மகளாகப் பிறந்து 54, **இராமதத்தை** எனப் பெயர் பெற்று, சீயமாபுரத்து அரசனாகிய சீயமாசேனனுக்குத் தேவியாயினாள் 25. அவள் துறக்கத்தில் பாஸ்கரப் பிரபனாயமர்ந்திருந்து 61, பின்னர், தரணிதிலகம் என்னும் நகருக்கு அரசனாகிய அதிவேகனுக்கு மகளாகப் பிறந்து

65, **சீதரை** எனப் பெயர் பெற்று 66, அளகாபுரி வேந்தனாகிய தருசகனுக்குத் தேவியாகி, யசோதரை என்பவளைப் பெற்றாள் 66; மீண்டும் துறக்கம்புக்கு இன்பம் நுகர்ந்து 71, பின்னர், பிருதிவி திலகம் என்னும் நகருக்கு அரசனாகிய அதிவேகன் என்பவனுக்கு மகளாகப் பிறந்து, **அரதனமாலை** எனப் பெயர் பெற்று 74, மீண்டும் துறக்கத்தில் அச்சுத கற்பத்தை யடைந்து, பின்னர், அயோத்தி வேந்தனாகிய அருகதாசனுக்கு மைந்தனாய்த் தோன்றி **வீதபயன், பலதேவன்** என்னும் பெயர் பெற்று 89, ஆதித்யாபன் என்னும் அமரனாகி, இறுதியில, உத்தர மதுரைக்கு அரசனாகிய அனந்த வீரியனுக்கு **மேரு** என்னும் புதல்வனாகத் தோன்றி 102 103, வீடு பெற்றாள்.

இரணியமதி - இராமதத்தைக்கு அறவுரை கூறிய துறவி 49.

இரணியவதி - அதிபலன் மகள்; போதன புரத்து அரசனாகிய பூரணசந்திரன் தேவி; இராம தத்தையின் தாய். இவள் முற்பிறப்பில் **மிருகாயணன்** என்னும் வேதியனாய் வாழ்ந்தவள் 54.

இராமதத்தை - சீயசேனன் தேவி 25; பத்திரமித்திரன்வழக்கின் உண்மையறிந்து தெளிவித்தவள். சாந்திமதி, இரணியமதி என்பவ ரிருவரால் நோன்பு மேற்கொண்டாள் 49. இவள் வரலாற்றை, ஆதித்யாபன் வரலாற்றிற் காண்க.

கந்தமித்திரன் - இவன் ஓரரசன்; விசித்திரமதி என்பவன் சமைத்துத் தந்த ஊன்சுவை யறிந்து, அவனுக்கு உதவி செய்தவன் 85.

கமலை - சித்திரமதி என்னும் அமைச்சன் மனைவி; விசித்திரமதியின் தாய் 82.

கருடதண்டன் - சீயசேனன் அரவா லிறந்தபோது மந்திர மோதி, அப் பாம்பினை எரியில் வீழ்த்தினவன் 47, 48.

கிரணவேகன் - பாஸ்கரபுரத்து அரசனாகிய சூர்யாவர்த்தன் மகன்; முற்பிறப்பில் சீயசேனன் என்னும் அரசனாய்

வாழ்ந்தவன் 66. பிறவற்றைச் சீயசேனன் வரலாற்றிற் காண்க.

குணவதி - சூர்யாவர்த்தன் தேவியாகிய யசோதரைக்கும் அவள்தாயாகிய சீதரைக்கும் அறவுரை கூறினவள் 67.

கோசிருங்கன் - தாபதர் தலைவன்; மிருகசிருங்கன் தந்தை 98.

சக்கராயுதன் - அபராஜிதன் மைந்தன்; வச்சிராயுதன் தந்தை 73, 74. சீயசந்திரன் இறுதியில் சக்கராயுதனாகப் பிறந்து 73, முத்தி பெற்றான் 78.

சங்கி - கோசிருங்கன் மனைவி; மிருகசிருங்கன் தாய் 98.

சஞ்சயந்தன் - வைசயந்தன் முதற்புதல்வன்; சயந்தனுக்கு அண்ணன் 4. வித்துத்தந்தன் செய்த தீங்குகளைப் பொறுத்து வீடுபெற்றவன். சீயசேனன் இறுதிப்பிறப்பில் சஞ்சயந்த னாயினான் 99.

சயந்தன் - வைசயந்தன் மகன்; சஞ்சயந்தனுக்கு இளவல் 4; தவத்தால் தரணேந்திர னாயினான் 11; பின்னர், **மந்தரன்** என்பவனாகப் பிறந்து 102, 103, முத்தி பெற்றான்.

சாந்திமதி - இராமதத்தைக்கு அறவுரை கூறிய துறவியரிருவரு ளொருத்தி 49.

சாந்தமதி - இராமதத்தையின் தாயாகிய இரணியவதிக்கு அறவுரை கூறினவள் 55.

சித்திரமதி - பிரதிபத்திரனுக்கு அமைச்சனா யிருந்தவன்; விசித்திரமதியின் தந்தை 82.

சித்திரமாலை - சக்கராயுதன் மனைவி; வச்சிராயுதன் தாய் 74.

சினதத்தை - அருகதாசன் என்னும் அரசன் தேவியருள் ஒருத்தி; விபீடணன் என்னும் வாசுதேவனுக்குத் தாய் 89, 90.

சீதரன் - சீயசந்திரன், ஸஹஸ்ரார கல்பத்தில் அமரனா யிருந்த போழ்து பெற்ற பெயர் 57.

சீதரை - அதிவேகன் மகள்; தருசகன் மனைவி; யசோதரையின் தாய் 65, 66.

சீதாமா - ஸ்ரீவர்ம்மாவின் மகன் 97, இவனே சயந்தனாகப் பிறந்து தரணேந்திரனாகி 97, மீண்டு **மந்தரனாகப்** பிறந்தவன் 102, 103.

சீயசந்திரன் - சீயசேனன் புதல்வன் 46. இவன் தன், தாயாகிய இராமதத்தைக்குப் பண்டைப் பிறப்பின் வரலாறுகளைக் கூறினன். இறுதியில் சக்கராயுதனாகப் பிறந்து 73, 74, முத்தி பெற்றான்.

சீயமாசேனன் - சீயமாபுரத்தின் அரசன் 25; இவன் மறுபிறப்பில் சல்லகீ வனத்தில் வேழமாகி 48, பின்னர் ஸஹஸ்ரார கல்பத்தில் தேவனாகி 57, மீண்டு கிரணவேகனாகத் தோன்றி 66, வானத்தில் அருக்கப்பிரபனாயமர்ந்து 71, பின்னர் வச்சிராயுதனாகத் தோன்றி 74, வானமடைந்து 88, இறுதியில் சஞ்சயந்தனாகத் தோன்றி 99, முத்தி பெற்றான்.

சுசிமா - ஸ்ரீவர்ம்மாவின் தேவி; சீதாமாவின் தாய் 97

சுதத்தன் - பத்திரமித்திரன் தந்தை 25,26.

சுமதி - அதிபலன் மனைவி; இரணியவதியின் தாய் 54.

சுமித்திரை - சுதத்தன் மனைவி 25; பத்திரமித்திரன் தாய் 26. இவள் மறுபிறப்பில் வேங்கையாய்ப் பிறந்து, பத்திரமித்திரனை மாய்த்தாள் 46.

சுயம்பு தீர்த்தங்கரர் - வைசயந்தனுக்குத் தத்துவப்பொருளை உணர்த்தின முனிவர் 5.

சுலக்கணை - அதிவேகன் தேவி 65; சீதரையின் தாய் 66.

சுவ்ரதை - அருகதாசன் தேவியரு ளொருத்தி; வீதபயன் என்னும் பலதேவனைப் பயந்தவள் 89.

சூர்யாவர்த்தன் - பாஸ்கரபுரத்து வேந்தன்; கிரணவேகன் தந்தை 66.

தமிலன் - சீயசேனனுக்கு அமைச்சனாயிருந்தவன் 42; இவன் மறுபிறப்பில் வானரமாகத் தோன்றி, வேழமாயிருந்த சீயசேனனைக் கொன்ற கோழிப் பாம்பினை (ஸ்ரீபூதியை) மாய்த்தான் 59.

தருசகன் - அளகாபுரி யரசன்; யசோதரையின் தந்தை 66.

தருமருசி - பிரீதிங்கரனுக்கும் விசித்திரமதிக்கும் அறவுரை கூறிய முனிவன் 82.

தாருணகிரணன் - கச்சை என்னும் நகரை யடுத்து வாழ்ந்த வேடன். ஸ்ரீபூதி ஒரு பிறப்பில் இவனுக்கு மைந்தனாய்ப் பிறந்தான் 87.

நமி - ருஷபதீர்த்தங்கராரிடத்து அரசு வேண்டினோ ரிருவருள் ஒருவன் 18; தரணேந்திரனொருவனால் ஐம்பது நகரங்களை அடைந்து, ரதநூபுரசக்ரவாளம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிந்தான் 20.

நிபுணமதி - சீயமாசேனன் செவிலி 35; இவள், இராம தத்தையின் சொற்படி ஸ்ரீபூதியின் வீட்டிற்குச் சென்று மணிச்செப்பு வாங்கி வந்தவள் 35, 36.

பத்திரபாகு - இராமதத்தையின் தந்தையாகிய பூரணசந்திர னுக்கு அறவுரை கூறிய முனிவன் 55.

பத்திரமித்திரன் - சுதத்தன் என்னும் வணிகன் மகன் 25,26; ஸ்ரீபூதி என்னும் அமைச்சன்பால் மணிச்செப்பினை அடைக்கலமாக வைத்தவன் 27; வரதர்ம முனிவன்பால் அறவுரை கேட்டவன் 42; இவன் மறுபிறப்பில் சீயமா சேனனுக்கு முதற்புதல்வனாகத் தோன்றிச் **சீயசந்திரன்** எனப் பெயர் பெற்றான் 46; அப்பிறப்பில் தவம் புரிந்து வானுலகமடைந்து **பிரீதிங்கரன்** எனப் பெயர் பெற்று வாழ்ந்தான் 61; பின்னர், அபராஜிதன் என்னும் அரச னுக்குப் புதல்வனாய்த் தோன்றிச் **சக்கராயுதன்** எனப் பெயர் பெற்று, சித்திரமாலை என்பவளை மணந்து வச்சி ராயுதன் என்னும் மைந்தனைப் பயந்து 73, 74, தவம் புரிந்து முத்தியடைந்தான் 78.

பலதேவன் - அருகதாசனுக்குச் சுவ்ரதை என்னுந் தேவியின் வயிற்றிற் பிறந்தவன்; இவனுக்கு **வீதபயன்** என்னும் பெயரும் உண்டு. இராமதத்தை என்னும் பெயருடன் வாழ்ந்த அரசி, பின்னொரு பிறப்பில் பலதேவனாகப்பிறந்து னோற்று, ஆதித்யாபன் என்னும் அமரனாயினாள் 93, 94.

பிரதிபத்திரன் - அத்தினபுரத்து அரசன்; பிரீதிங்கரன்தந்தை 82.

பிரியகாரிணி - பிருதிவிதிலகத்து அரசனாகிய அதிவேகனுக்குத் தேவி; அரதனமாலையின்தாய் 74.

பிரீதிங்கரன் - பிரதிபத்திரன் மகன்; தருமருசி என்னும் முனி வர்பால் அறவுரை கேட்டுத் துறந்தவன் 82; புத்திசேனை என்னுங் கணிகைக்கு அறமுரைத்தவன் 83.

புத்திசேனை - கணிகைமாது; பிரீதிங்கரன்பால் அறங்கேட்டு நெறிநின்றவள் 83; மறங்கூறிய விசித்திரமதியை வெறுத்தவள் 84.

பூரணசந்திரன் I - இராமதத்தையின் தந்தை 54. பத்திரபாகு என்னும் முனிவன்பால் அறவுரை கேட்டுத் துறவறம் பூண்டவன்; இவனே சீயசந்திரனுக்கு அறவுரை பகர்ந்தவன் 55.

பூரணசந்திரன் II - சீயமாசேனன் இளையபுதல்வன் 47. இவன் முற்பிறப்பில், மிருகாயணன் என்னும் வேதியனுக்கு மதுரை என்னும் மடந்தை வயிற்றில் மகளாய்ப் பிறந்து **வாருணி**எனப் பெயர்பெற்றிருந்தான்54; பின்னர் மதுரை என்னும் பார்ப்பனி இராமதத்தையாகப் பிறந்து வாழ்ந்த காலத்தில் அவள் வயிற்றிற் பிறந்து பூரணசந்திரன் எனப் பெயர் பெற்றான் 55; அப்பிறப்பில், அன்னையாகிய இராமதத்தையால் அறிவுபெற்றுத் தவம்புரிந்து, வானத்தில் வைடூரியப்பிரப னானான் 61; பின்னர், இராமதத்தை, அதிவேகன் மகளாகப் பிறந்து சீதரை எனப் பெயர்பெற்று,தருசகனை மணந்து வாழுங்காலத்தில்,அவள் வயிற்றில் மகளாய்த் தோன்றி **யசோதரை** எனப் பெயர் பெற்று 65, 66, சூர்யாவர்த்தனை மணந்து, கிரணவேகன் என்னும் மைந்தனைப் பயந்து66, கணவன் துறவொழுக்கத்திற் சென்றபின், தாயாகிய சீதரையுடன் கூடிக் குணவதி என்னும் துறவியால் அறநெறி நின்று 67, பாம்பாகிய ஸ்ரீபூதியால் விழுங்கப்பட்டு, வானவ னாயினான் 71; அதன்பின், இராமதத்தை, அதிவேகனுக்கு மகளாகி அரதனமாலை எனப் பெயர் பெற்று 74, வச்சிராயுதனை மணந்து வாழ்கையில், அவள் வயிற்றில் தோன்றி அரதனாயுதன் எனப் பெயர் பெற்றான் 75; மீண்டும் அமருலகடைந்து, பின்னர் அருகதாசனுக்குச் சினதத்தையின் வயிற்றினில் வாசுதேவனாகத் தோன்றி 89,90, பின்னர் நரகத்தில் வீழ்ந்து 94, மீண்டு, சீதாமனாகப் பிறந்து நோற்றுப் பிரமகற்பத்தை யடைந்து 97, பின்னரும்

உலகில் சயந்தனாகத் தோன்றித் **தரணேந்திர** னாயினான் 97; இவனே **மந்தர**னாகப் பிறந்தான் 102, 103.

மங்கி - தாருணகிரணன் என்னும் வேடனுக்கு மனைவி 87.

மதுரை - மிருகாயணன் என்னும் வேதியன் மனைவி. இவளே பின்னர் **இராமதத்தை**யாகப் பிறந்தாள் 54; இறுதியில், **மேரு** என்பவனாகப் பிறந்து வீடு பெற்றாள்.

மந்தரன் - அனந்த வீரியன் என்னும் அரசனுக்கு அமிர்தமதி என்னும் தேவியின் வயிற்றில் பிறந்தவன் 102,103. பிற வரலாறுகளைப் **பூரண சந்திரன்** வரலாற்றிற் காண்க.

மிருக சிருங்கன் - கோசிருங்கன் என்னும் முனிவன் மகன் 98. ஸ்ரீபூதி, ஒரு பிறப்பிற் பெற்ற பெயர்.

மிருகாயணன் - மறையவன்; வாருணி என்பவள் தந்தை; இவன், மறு பிறப்பில், அதிபலனுக்கு மகளாகப் பிறந்து இராணியவதி எனப் பெயர் பெற்றான் 54.

முனிச்சந்திரன் - சூர்யாவர்த்தனுக்கு அறவுரை கூறிய முனிவரன் 67.

மேரு - அனந்த வீரியனுக்கு மேருமாலினி என்னுந் தேவி வயிற்றிற் பிறந்தவன் 102,103. பிற வரலாறுகளை **ஆதித்யாபன்** வரலாற்றிற் காண்க.

மேருமாலினி - அனந்த வீரியன் தேவியரு ளொருத்தி; **மேரு**வின் தாய் 102.

யசோதரை - தருசகனுக்குச் சீதரை என்னுந் தேவியின் வயிற்றிற் பிறந்தவள்; சூர்யாவர்த்தன் தேவி 66.

ருஷபதீர்த்தங்கரர் - தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் முதல்வர்; நில முழுவதும் அரசரனைவருக்கும் அளித்தவர் 18.

வச்சிரதந்தன் - அரதனாயுதனுக்கு அறவுரை கூறின முனிவன் 79, 82.

வச்சிராயுதன் - சக்கராயுதன் மகன் 74; அரதனாயுதன் தந்தை 75.

வசுந்தரி I—அபராஜிதன் தேவி 73; சக்கராயுதன் தாய் 74.

வசுந்தரி II—பிரதிபத்திரன் தேவி; பிரீதிங்கரன் தாய் 82.

வாதர்மன்-பத்திரமித்திரனுக்கு அறவுரை கூறிய முனிவன் 42.

வாசுதேவன் - அருகதாசன் என்னும் அரசனுக்குச் சினதத்தை என்னுந் தேவிபால் பிறந்தவன் ; **விபீடணன்** என்னும் பெயருடையவன் 89, 90.

வாருணி - மிருகாயணன் என்னும் வேதியன் மகள் 54; இவளே பூரணசந்திரனகப் பிறந்தாள் 55.

விசித்திரமதி - சித்திரமதி என்னும் அமைச்சன் மகன் 82; இவன், புத்திசேனை என்னுங் கணிகைமாட்டுக் காதல் கொண்டு தவத்தை விடுத்து, அவளை யடைதற்பொருட்டுக் கந்தமித்திரன் என்னும் அரசனுக்கு ஊன் சமைத்துக் கொடுத்தான் ; மறு பிறப்பில் வேழமாகத் தோன்றினன் 83, 85.

விஞ்சுமாலி - விஞ்சையர் வேந்தன். மிருகசிருங்கன் இவனைக் கண்டு இவனது நிலையை விரும்பி, அதனல் வித்துத்தந்தனுகப் பிறந்தான் 98.

வித்துத்தந்தன் - விநமியின் மரபிற் பிறந்தவன் 21. முதலில் சீயசேனனுக்கு மந்திரியாயிருந்த இவன், அவன்மேற் கொண்ட வோத்தால் அரவாயும் கவரிமாவாயும் கோழிப் பாம்பாயும் பாம்பாயும் வேடனயும் தோன்றி அரசனுக்குத் தீங்கிழைத்ததே யன்றி, இடையிடையே நரகம் புக்குத் துன்பத் துழந்தான் ; இறுதியில், **மிருகசிருங்கன்** என்னும் மறையவனுகித் தவம் புரிந்து விஞ்சையர் வேந்த னயினன் 98, 99. அப்பிறப்பிலும் சஞ்சயந்தனுகிய அரசனுக்கு அல்லல் விளைத்தான் 13 ; அதன் பொருட்டுத் தரணேந்திரனல் வருந்தினன்.

விநமி - ருஷபதீர்த்தங்கரர்பால் நிலம் வேண்டின ரிருவருள் ஒருவன் 18; தரணேந்திரனல் அறுபது நகரங்களை யடைந்து, கனகபல்லவம் என்னும் நகரிலிருந்து அரசு புரிந்தவன் 20.

விபீடணன் - வாசுதேவனைப் பார்க்க.

விமலதீர்த்தங்கரர் - தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் பதின் மூன்ருமவர் ; மேருமந்தரர்க்கு அருள் புரிந்தவர்.

வீதபயன் - பலதேவனைப் பார்க்க.

வைசயந்தன் - வீதசோக நகரத்து அரசன் 3 ; சஞ்சயந்தன், சயந்தன் என்பவர்க்குத் தந்தை 4; சுயம்பு தீர்த்தங்கரால் தத்துவம் உணர்ந்தவன் 5 - 7.

ஸ்ரீபூதி-சீயமாசேனன் அமைச்சன் 25; சத்தியகோஷன் என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்றவன் 29: பத்திரமித்திரன் பொருளை வவ்வினவன் 28. இவனது பிறவரலாற்றை **வித்துத்தந்தன்** வரலாற்றிற் காண்க.

ஸ்ரீவர்ம்மா - அயோத்தி யரசன் ; சீதாமாவின் தந்தை 97.

ஸர்வஸ்ரீ - வைசயந்தன் தேவி 3.

இந்நூலின் முக்கிய நாயகர்களும் அவர் பிறப்புக்களும்

I. சீயமாசேனன்

முதற் பிறப்பு—சீயமாசேனன்

இரண்டாம் பிறப்பு—வேழம் (சல்லகீவனத்தில்)

மூன்றும் பிறப்பு—சீதரன் என்னுந் தேவன் (ஸஹஸ்ரார கல்பத்தில்)

நான்காம் பிறப்பு—கிரணவேகன் என்னும் அரசன்

ஐந்தாம் பிறப்பு—அருக்கப்பிரபன் என்னுந் தேவன்

ஆறும் பிறப்பு—வச்சிராயுதன் என்னும் அரசன்

எழாம் பிறப்பு—வானவன்

எட்டாம் பிறப்பு—சஞ்சயந்தன்

II. இராமதத்தை (சீயமாசேனன் தேவி)

முதற் பிறப்பு—மதுரை (மிருகாயணன் என்னும் வேதியன் மனைவி)

இரண்டாம் பிறப்பு—இராமதத்தை (சுரமை நாட்டரசன் மகள்; சீயமாசேனன் தேவி)

மூன்றாம் பிறப்பு—பாஸ்கரப்பிரபன் (மஹாசுக்ரகல்பத்தில்)

நான்காம் பிறப்பு—சீதரை (தாரணிதிலகத்து அரசன் மகள்; அளகாபுரியரசன் தேவி)

ஐந்தாம் பிறப்பு—வானவன்

ஆறாம் பிறப்பு—அரதனமாலை (பிருதிவி திலகத்து அரசன் மகள்; வச்சிராயுதன் தேவி)

ஏழாம் பிறப்பு—வானவன் (அச்சுத கற்பத்தில்)

எட்டாம் பிறப்பு—பலதேவன்

ஒன்பதாம் பிறப்பு—ஆதித்யாபன்

பத்தாம் பிறப்பு—மேரு

III. சீயசந்திரன் (சீயமாசேனன் முதற் புதல்வன்)

முதற் பிறப்பு—பத்திரமித்திரன்

இரண்டாம் பிறப்பு—சீயசந்திரன்

மூன்றும் பிறப்பு—பிரீதிங்கரன் (அஹமிந்திருலகத்தில்)

நான்காம் பிறப்பு—சக்கராயுதன்

IV. பூரண சந்திரன் (சீயமாசேனன் இளைய புதல்வன்)

முதற் பிறப்பு—வாருணி (மிருகாயணன் என்னும் வேதியன் மகள்)

இரண்டாம் பிறப்பு—பூரண சந்திரன்

மூன்ரும் பிறப்பு—வைரோயப்ரபன் (மஹாசுக்ரகல்பத்தில்)

நான்காம் பிறப்பு—யசோதரை (சீதரையின் மகள்)

ஐந்தாம் பிறப்பு—வானவன்

ஆரும் பிறப்பு—அரதனுயுதன்

ஏழாம் பிறப்பு—வானவன் (அச்சுத கற்பத்தில்)

எட்டாம் பிறப்பு—விபீடணன் என்னும் வாசுதேவன்

ஒன்பதாம் பிறப்பு—நரகன்

பத்தாம் பிறப்பு—சீதாமா (ஸ்ரீவர்ம்மா மகன்)

பதினென்ரும் பிறப்பு—வானவன் (பிரமகற்பத்தில்)

பன்னிரண்டாம் பிறப்பு—சயந்தன்

பதின்மூன்ரும் பிறப்பு—தரணேந்திரன்

பதினன்காம் பிறப்பு—மந்தரன்

V. ஸ்ரீபூதி (சீயமாசேனன் அமைச்சன்)

முதற் பிறப்பு—ஸ்ரீபூதி

இரண்டாம் பிறப்பு—அகந்தனன் என்னும் பாம்பு

மூன்ரும் பிறப்பு—கவரிமா

நான்காம் பிறப்பு—கோழிப் பாம்பு

ஐந்தாம் பிறப்பு—நரகன்

ஆரும் பிறப்பு—பாம்பு

ஏழாம் பிறப்பு—நரகன்

எட்டாம் பிறப்பு—வேடன்

ஒன்பதாம் பிறப்பு—நரகன்

பின்னர்—மிருகசிருங்கன் என்னும் மறையவன்

இறுதியில்—வித்துத்தந்தன்

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	16	வெருவை	எருவை
54	2	மஞ்சை	மஞ்ஞை
,,	24	பத்திரமித்தின்	பத்திரமித்திரன்
55	2	மறையவன்	மறையவள்
,,	3	பிறந்தனன்	பிறந்தனள்
59	2	கோடனுக்கு	கோடனுக்குப்பின்
64	25	வறுக்கை	வருக்கை
65	15, 16	சாரியில்	சாரில்
66	24	தருசகன்	சூர்யாவர்த்தன்
88	17	இவர்	இலார்
89	1	மிஞிரும்	மிஞிறும்

மாடர்ன் பப்ளிஷ்ங் ஹவுஸ்

புதிய தமிழ்ப் பதிப்புக்கள்

புதுமுறை வாசகங்கள் :

ஆரம்ப பாடசாலையில் பயிலும் மாணவ மாணவிகட்கு இளமையிலேயே தமிழ் மொழியில் பற்றினை உண்டாக்கல்—திருத்தமாகப் பேசவும் பிழையின்றி எழுதவும் அவர்களைப் பழக்குதல்—ஆகிய இவ் விரண்டினையும் அடிப்படையாகக் கொண்டே இவ் வாசக வரிசை எழுதப்பட்டுள்ளன.

	ரூ.	அ.
புதுமுறை பால வாசகம்—முதல் வகுப்பு	0	2½
புதுமுறை வாசகம்—இரண்டாம் புத்தகம் (இரண்டாம் வகுப்புக்கு)	0	3½
புதுமுறை வாசகம்—மூன்றும் புத்தகம் (மூன்றும் வகுப்புக்கு)	0	4½

வித்வான் V. வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய

தமிழ் நூதன வாசகங்கள்

(I, II, III பாரங்களுக் குரியவை)

தமிழ் நூதன வாசகம்—முதற் புத்தகம்	0	7
தமிழ் நூதன வாசகம்—இரண்டாம் புத்தகம்	0	8
தமிழ் நூதன வாசகம்—மூன்றும் புத்தகம்	0	8

வித்வான் இ. கி. நடேச சர்மா எழுதியவை :

செந்தமிழ்க் கலம்பகம் (IV, V பாரங்களுக் குரியது)	0	10
காதம்பரி	0	12

இளைஞர் தமிழ் இலக்கணம் (முதல் மூன்று பாரங்களுக் குரியது) வித்வான் V. வேங்கடராஜுலு ரெட்டியார்	0	8
தமிழ்மொழி இலக்கணம் (IV, V, VI பாரங்களுக் குரியது) Dr. P. S. சுப்ரமண்ய சாஸ்திரி, M. A., Ph. D.	0	10